
தினம் ஒரு தேவாரம்



கவிஞர். மு.நா. நாராயணன்

தினம் ஒரு தேவாரம்



தொகுப்பு & உரை

கவிஞர் மு.நா. நாராயணன்

கல்யாண நவமணி பதிப்பகம்
1751, சுப்பிரமணியபுரம் 10வது வீதி தெற்கு,
காரைக்குடி - 630 002.
அலைபேசி: 75985 03658

Book Title	:	**Thinam Oru Thevaram**
Author	:	**M.N. Narayanan**
Edition	:	August, 2020
Published by	:	**Kalyana Navamani Pathippagam** 1751, Subramaniapuram 10th Street South, Karaikudi - 630 002. Cell: 75985 03658
Layout by	:	PL. Manikandan e-mail: poocharamprints@gmail.com
Printed at	:	Poocharam Prints, Karaikudi.
Pages	:	156
Size	:	1/8 Demi
Price	:	**Free Distribution**

நூற்பெயர்	:	தினம் ஒரு தேவாரம்
ஆசிரியர்	:	மு.நா. நாராயணன்
பதிப்பு	:	ஆகஸ்ட், 2020
வெளியீடு	:	கல்யாண நவமணி பதிப்பகம் 1751, சுப்பிரமணியபுரம் 10வது வீதி தெற்கு, காரைக்குடி - 630 002. அலைபேசி: 75985 03658
ஒளி அச்சு	:	பழ. மணிகண்டன் மின்னஞ்சல்: poocharamprints@gmail.com
அச்சு	:	பூச்சரம் பிரிண்ட்ஸ், காரைக்குடி.
பக்கங்கள்	:	156
அளவு	:	1/8 டெம்மி
விலை	:	இலவச வெளியீடு

1-4

என்னுரை

1. தனதனின் தோழன் சங்கரன் இமவான்
தருமகள் தனை இடம் கொண்டோன்
மனதினில் எண்ணி வணங்குவோர் தமக்கு
வள்ளலாய் நிற்பவன் மீது
இனியநற் றமிழால் போற்றிசெய் தேத்தும்
இணையிலா மூவர் தேவாரம்
நினைவினில் கொண்டே துதிசெயும் வகையை
நீணிலத் தோர் பெற எண்ணி,

2. கல்லொடு கடலில் மிதந்தவர் சுண்ணக்
காளவாய்ச் சூட்டினைப் பனியாய்
கொள்பவர் நாவுக் கரசரும் ஆரூர்
கோமகன் வழக்கொடு வெண்ணை
நல்லூரதனில் ஆட்கொண்ட செம்மல்
நயம்மிகு சுந்தரர் தாமும்
வல்லவர் காழிப் பிள்ளையாம் ஞான
சம்பந்த மூர்த்தியும் யாத்த,

3. பாடல்கள் முன்னூற் றறுபதோடு ஐந்தை
பாங்குடன் தொகுத்து அதனோடு
ஆடகத் தமிழில் உரையொடு, தலங்கள்,
ஆங்குஅருள் தெய்வத நாமம்
கூடிய இன்னூல் மக்களுக் கெல்லாம்
கொடுத்திடும் பேற்றினை அடியேன்
ஆடல்வல் லானின் அருளினால் பெற்றேன்
ஆனந்தம் இதனில்மற் றுண்டோ?

-கவிஞர் மு.நா. நாராயணன்

நன்றியுரை

இன்னூல் வெளிவருவதற்கு தேவாரப் புத்தகங்கள் வழங்கியும், நிதி உதவி வழங்கியும், அரும்பெரும் உதவிகள் செய்த பொன்னமராவதி அறமனச் செம்மல் திரு. அரு.வே. மாணிக்க வேலர், செந்தமிழ் மூதறிஞர் திரு. புதுவயல் செல்லப்பனார், புதுவயல் திரு. சோம. கண்ணன், மதுரை 'மனிதத்தேனீ' திரு. இரா. சொக்கலிங்கம் காரைக்குடி திரு. S. ராமநாதன், மலேசியா திருமதி வல்லியம்மை, காரைக்குடி திரு. இராம. சத்தியமூர்த்தி மற்றும் அவரது நண்பர்கள் அனைவருக்கும் விளம்பரங்கள் தந்து உதவிய நல்ல உள்ளங்கட்கும், நூலை அழகுற வடிவமைத்து அச்சிட்டு எனக்குப் பல்லாற்றானும் உதவி வரும் பூச்சரம் திரு. மணிகண்டன் அவர்கட்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

கவிஞர் மு.நா. நாராயணன்
காரைக்குடி



தினம் ஒரு தேவாரம்

மூவர் தேவாரம் ஓத முற்றிய பிணிகள் நீங்கும்
தாவில்நற் புகழும் சேரும் தனம் மனை நிறைந்து காணும்!
தீவினைத் துயரம் நீங்கும் செறிந்தநல் மகிழ்வு கூடும்
ஆவலாய் நாளுக் கொன்றாய் அரிய தேவாரம் சொல்வீர்.

-மு.நா. நாராயணன்

திருஞானசம்பந்தர்

தலம்: திருவலிவலம் இறைவன்: மனைத்துணைநாதர்
பலன்: இடர்நீங்கப்பெறல் இறைவி: மாழையங்கண்ணி

1. பிடியதன் உருஉமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

வள்ளல் தன்மை கொண்டவர்கள் வாழும் வலிவலம் என்னும் தலத்து இறைவன், உமையவள் பெண் யானை உருவம் எடுக்க, ஆண் யானை வடிவினனாகி நின்று, தன்னை வழிபாடு செய்யும் அடியார்களின் துயரங்களை நீக்குவதற்காக கணபதி எனும் தனது மைந்தனைத் தோற்றுவித்தார்.

தலம்: திருச்சாய்க்காடு இறைவன்: சாயாவனேஸ்வரர்
பலன்: நற்கதிபெறல் இறைவி: குயிலினும் நன்மொழியம்மை

2. நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்! யார்அறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்த பெறலாமே நற்கதியே!

நன்னெஞ்சே! நமது வாழ்வில் உள்ள நாட்களையும் இறப்பு நேரும் நாளையும் யாரால் அறிய முடியும். எனவே இந்த இடைப் பட்ட வாழ்நாள் முழுமையும் சாய்க்காட்டில் உள்ள சிவனார்

திருத்தலத்தை அடைந்து நாள்தோறும் தலையால் மலர்மாலைகளைச் சுமந்து, அவரது புகழ்கூறும் பாடல்களைக் கேட்டு, உனது நாவினால் அவரது திருநாமத்தை வாழ்த்தி வழிபட்டால் உனக்கு நற்கதி கிட்டும்.

தலம்: திருவெண்காடு இறைவன்: சுவேதரண்யேஸ்வரர்
பலன்: விவசாயம் பெருகப்பெறல் இறைவி: பிரம்மவித்யா நாயகி

3. கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டு உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புனலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே.

திருவெண்காடமர்ந்த சிவன் காளைக் கொடியுடையான் நெற்றிக் கண்ணுடையான், அனல் ஏந்திய கையுடையான் இசைக்குரிய ராகங்களை காட்டுபவன், பரமேஸ்வரியாகிய பெண்ணைத் தனது உடலில் ஒரு பாகமாக உடையான் சடைமுடியில் நிலவு உடையான், அவனே பூவுலகில் விவசாயம் தழைக்கச் செய்யும் நீராவான்.

தலம்: சீர்காழி இறைவன்: தோணியப்பர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

4. தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசி என்உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே.

மலர்வாழ் பிரமன் முன்னாளில் பணிந்து போற்ற அவனுக்கு அருள் செய்தவனும், செவிகளில் தோடு அணிந்தவனும் காளை வாகனம் ஏறி இருப்பவனும், வெண்மையான பிறை நிலவைச் சடையில் அணிந்தவனும் சுடுகாட்டு சாம்பலாகிய திருநீறு பூசியவனும் ஆகி என் மனம் கவர்ந்த சிவன் பிரமாபுரம் எனும் சீர்காழியில் உள்ளான்.

தலம்: கீழைத்திருக்காட்டுப்பள்ளி இறைவன்: ஆரண்யசுந்தரேஸ்வரர்
பலன்: அல்லல்கள் நீங்கப் பெறல் இறைவி: அகிலாண்டநாயகி

5. திரைகள் எல்லாம் அலரும் சுமந்து செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகள் எல்லாம் மணி சேர்ந்து உறிஞ்சி காவிரி கால்பொரு காட்டுப் பள்ளி
உரைகள் எல்லாம் உணர்வெய்தி நல்ல உத்தமராய் உயர்ந்தார் உலகில்
அரவமெல்லாம் அரை ஆர்த்த செல்வர்க்கு ஆட்செய்ய அல்லல் அறுக்கலாமே.

காவிரியின் வாய்க்கால்கள் யாவும், மலர்களையும் முத்துக் களையும், பொன்னையும் கொண்டு வந்து கரைகளில் ஒதுக்கி உராய்ந்து செல்லும் தலமான திருக்காட்டுப்பள்ளியில் பாம்பு களைக் கச்சையாக இடுப்பில் கட்டியவரான சிவபெருமானை, மறைகளை உணர்ந்து அறிந்து உத்தமராய் தொண்டுகள் செய்வீராயின் உங்களது அல்லல்கள் அறுபடும்.

சுந்தரர்

தலம்: தில்லை இறைவன்: சபாநாயகர்
பலன்: எமபயம் தீரல் இறைவி: சிவகாமி

6. பேராது காமத்தில் சென்றாற் போல் அன்றியே பிரியாது உள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்று முன் அடிவீழும் திருவினாரை
ஓராது தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்தாட்கொள்வான்
பேராளர் புலியூர் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாம் அன்றே.

ஓய்வின்றி காமத்தில் மூழ்காது இறைவனை தமது உள்ளத்தால் பிரியாது நினைத்து அவனது அடியாராய் அவனது திருவடிகளில் வணங்குபவரை அவர்களது பக்தியை அறியாமல் யமன் செக்கில் இட்டு ஆட்ட முற்படும்போது சிற்றம்பலமாகிய தில்லையில் வாழும் நடராஜப் பெருமான் தடுத்தாட்கொள்வார்.

திருநாவுக்கரசர்

தலம்: திருவதிகை வீரட்டானம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: அச்சம் நீங்கல் இறைவி: திரிபுரசுந்தரி

7. பலபல காமத்த ராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
வலமேந்து இரண்டு சுடரும் வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதும் இல்லை.

நாங்கள், தீய எண்ணங்களுடனே ஆவேசமாய்த் திரிபவரை அடக்கும் கணபதி என்ற களிறையும், வல்லமை தரும் சூரியன் சந்திரன் என்ற சுடர்களையும் வானளாவிய கைலைமலையையும் கெடிலம் எனும் புண்ணிய நதியினையும் உடைய சிவபெருமானுக்கு ஆட்பட்டவர்கள் (உறவினர்கள்) ஆதலால் நாங்கள் எதற்கும் அஞ்சமாட்டோம். எங்களை அச்சுறுத்துவதும் எதுவும் இல்லை.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: பிறந்த பயன் பெறல் இறைவி: சிவகாமி

8. அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
இன்னும் பாலிக்குமோ இப்பிற வியே.

இந்தப் பிறவியில் நமக்கு வாழ்வாதாரமான உணவையும் செல்வத்தையும், இந்தப் பூவுலகில் உள்ள எல்லா நலன்களையும் தில்லை நடராசப் பெருமான் வழங்குவார். வேறு என்ன பிறவிப் பலன் வேண்டும்?

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: உள்ளம் கோயிலாகும் இறைவி: சிவகாமி

9. பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோவிலாய்க் கொள்பவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனை
தினைத்துணைப் பொழுதும் மறந்து உய்வேனோ?

பனைமரம் போன்ற துதிக்கையும், மும்மத நீரையும் கொண்ட யானையின் தோலை உரித்து போர்த்துக் கொண்டவரும் உயிர் வாழ் ஜீவன்கள் அத்தனையிலும் பொருந்தி இருப்பவனும் தன்னையே நினைக்கும் அடியார் உள்ளங்களைக் கோவிலாகக் கொண்டவரும் ஆன தில்லை நடராசப் பெருமானை மறந்து நான் உயிர் வாழ்வனோ - வாழமாட்டேன்.

சுந்தரர்

தலம்: திருக்கழிப்பாலை இறைவன்:பால்வண்ணநாதர்
பலன்: இறைவனை மனதில் பெறல் இறைவி: வேதநாயகி

10. பொய்யாத நாவதனால் புகழ்வார்கள் மனத்துள்ளே
மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்
செய்யானும் கரிய நிறத்தானும் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான் கழிப்பாலையதே.

மையிட்ட விழி உமாதேவியோடு திருக்கழிப்பாலையில் மகிழ் வாய் இருக்கும் சிவபெருமான், நான்முகனாலும், திருமாலாலும் உணர முடியாத அப்பெருமான் பொய்மை உரைக்காத நாக்கினால் தன்னைப் புகழ்ந்து துதிப்பவர் மனத்தில் எரியும் விளக்கைப் போல் விளங்குவார்.

திருநாவுக்கரசர்

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: யமபயம் நீங்கல் இறைவி: சிவகாமி

11. பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எரிக்கும் சென்னி
காலனைக் காலால் காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாம் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
நீலம்சேர் கண்டத்தார்தாம் நீண்டுளரி ஆடுமாறே.

நீலநிற கழுத்தை உடைய சிவன் தில்லைச் சிற்றம்பலத்தில் நின்று ஆடும் அவர் சிறுவனைப் போலும் முதியவரைப் போலும் தோற்றம் கொண்டவர். குளிர்ச்சிமிக்க நிலவை முடியில கொண்டவர். அவர்தாம் காளை வாகனத்தில் ஏறி மார்க்கண்டே யருக்காக எமனை உதைத்து அழித்தவர்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: இறைவனைக் காணல் இறைவி: சிவகாமி

12. செய்ஞ்ஞின்ற நீலம் மலர்கின்றதில்லை சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்திருக்க
நெய்ஞ்ஞின்று எரியும் விளக்கொத்தநீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல் கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே?

நீலநிற மலர்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த தில்லைப் பதியில் மைபூசிய அழகிய விழியுடைய இமவான் மகளாகிய அம்மை கண்டு மகிழ்ச்சி கொள்ள, நெய்நிறைந்து எரியும் விளக்கு போன்ற நீலகண்டன் சிவபருமானின் ஆடலைக் கண்டபின்னால் நம்கண்களால் காண்பதற்கு வேறெதுவும் உண்டா? இல்லை.

திருஞானசம்பந்தர்

தலம்: சீர்காழி இறைவன்: தோணியப்பர்
பலன்: இறைநாமம் கேட்க இன்பம் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

13. சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவேன் மொய் பவளத்தொடு தரளம்
துறையாகும் கடல்தோணி புரத்தீசன் துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!

இறகுகளை விரிக்கும் இளங்கிளியே! இங்குவா! உனக்கு உண்பதற்கு தேனும் பாலும் தருவேன். முத்தும் பவளமும் நிறைந்த கடல் துறையான தோணிபுரம் என்னும் சீர்காழியில் பிறைச் சந்திரனை முடியில் சூடியுள்ள சிவபெருமான் திருப்பெயரை எனக்காக ஒருதரம் சொல்வாயாக.

தலம்: சீர்காழி இறைவன்: தோணியப்பர்
பலன்: குறைவிலா அருள் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

14. பண்ணின் நேர்மொழி மங்கைமார் பலர்
பாடி ஆடிய ஓசை நாள்தொறும்
கண்ணின், நேர் அயலே பொலியும் கடல்காழிப்
பெண்ணின் நேர் ஒருபங்குடைய பெரு
மானை எம்பெருமான் என்றுஉன்னும்
அண்ணலார் அடியார் அருளாலும் குறைவிலரே.

சிறந்த பண் போல இனிமையாகப் பேசு மாதர்கள் பாடியும் ஆடியும் மகிழும் காட்சியும் ஒலியும் தினமும் விளங்கும் கடற்கரையினை உடைய சீர்காழியில் மங்கையோர் பாகனாய் இருக்கும் சிவபெருமான் தான் எமது இறைவன் என்று நினைத்து நினைத்து உருகும் அடியவர்கட்கு குறைவிலாது அருட்செல்வம் கிட்டும்.

தலம்: சீர்காழி – திருப்பிரமபுரம் இறைவன்: பிரம்மபுரீஸ்வரர்
பலன்: சாபம் நீக்கல் இறைவி: திருநிலைநாயகி

15. தாமென்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்கு
ஆமென்று சரண்புகுந்தார் தமைக்காக்கும் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத்து உறைகின்ற
காமன்தன் உடல் எரியக் கனல்சேர்ந்த கண்ணானே.

என்றென்றும் மனம் தளராத பக்தியுடன் உலக நன்மைக்காக மறையோதும் வேதியர் நிறைந்த சீர்காழியில் அமர்ந்துள்ள மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த சிவபிரானிடம் தம்மைச் சரணாக ஒப்புவித்த அடியவர்கட்கு தனது கருணையை எப்போது அளிப்பார்.

தலம்: சீர்காழி இறைவன்: தோணியப்பர்
பலன்: எமபயம் நீக்கல் இறைவி: திரிபுரசுந்தரி

16. விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற்றை உதைத்தவர் சேரும்
பதியாவது பங்கயம் நின்றுஅலரத் தேன்
பொதிஆர் பொழில்சூழ் புகலிநன் னகர்தானே.

நமது தலைவிதியாக, அவ்விதியின் விளைவாக அவ்விளைவின் பயனாக, கடுங்கோபத்துடன் நம்மைப் பற்றி உயிர் கவர வரும் எமனை உதைத்து அழித்த சிவன் வாழும் ஊர் எதுவெனில் வாவிகளில் தாமரை மலர்ந்து தேன் சிதற சோலைகள் சூழ்ந்த திருப்புகலி என்று அழைக்கப்படும் சீர்காழி நகர்தான்.

தலம்: திருப்புகலி (சீர்காழி) இறைவன்: தோணியப்பர்
பலன்: வினைகள் நீங்கல் இறைவி: திரிபுரசுந்தரி

17. நல்குரவும் இன்பமும் நலங்கள் அவையாகி
வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தனிடம் என்பர்
பல்கும் அடியார்கள் படிஆர இசைபாடி
செல்வமறை யோர்கள்உறை திருப்புகலி யாமே.

நம் வறுமையை நீக்கி இன்பமும் நலமும் தந்து நமது வலிய வினைகளை நீக்கி அருளும் வள்ளலாக சிவபெருமான் உறையும் இடம் எதுவென்றால், இறைவனது ஆலயப்படிகள் தோறும் நின்று அவன் புகழ்களை இசையாகப் பாடி வரும் பேறு பெற்ற மறையோர் உறையும் ஊரான திருப்புகலி என்ற சீர்காழிதான்.

சுந்தரர்

தலம்: திருக்குருகாவூர் – வெள்ளடை இறைவன்: வெள்ளடைநாதர்
பலன்: பிணிகள் நீங்கல் இறைவி: காவியங்கண்ணி

18. பாடுவார் பசிதீர்ப்பாய், பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலம்அக உண்பலிக்கு உழல்வோனே
காடுநல் லிடமாக கடுஇருள் நடமாடும்
வேடனே! குருகாவூர் வெள்ளடை நீ அன்றே.

பிரம்மனின் தலைஓட்டையேந்தி பிச்சை யேற்று, சுடுகாடே அவையாகக் கொண்டு மிகுந்த இருளில் நடனம் செய்யும் சிவ பெருமானாகிய குருகாவூர் வெள்ளடையில் இருக்கும் பெரு மானே நீதான் உன்னைப் பாடுவார்களது பசித் துன்பத்தையும் பணிபவர்களிது பிணிகளையும் நீக்குகின்றாய்!

திருநாவுக்கரசர்

தலம்: தில்லை இறைவன்: நடராஜர்
பலன்: மனிதப் பயன் பெறல் இறைவி: சிவகாமி

19. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவழம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

நாம் மனிதராய்ப் பிறப்பெடுப்பதன் காரணமே தில்லை சிற்றம்பலத்தே நடன சபாபதியின் வளைந்த புருவங்களையும், கோவைக்கனி போன்ற சிவந்த இதழ்களிலே மலர்ந்திருக்கும் அருள் ததும்பிய புன்னகையையும் அவரது பவழம் போன்ற திருமேனியில் விளங்கும் பால் போன்ற வெண்மைத் திருநீற்றை யும் குளிர்ச்சி பொருந்திய திருமுடியினையும் உலக நன்மைக்காக தூக்கிய இடது திருவடியையும் கண்டு களிப்பதற்கு மட்டுமே.

தலம்: திருவேட்களம் இறைவன்: பாசுபதேஸ்வரர்
பலன்: வினைதீரல் இறைவி: நல்லநாயகி

20. நன்று நாள்தொறும் நம்வினை போய்அறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்றுநீர் திரு வேட்களத்து உள்ளுறை
துன்றுபொற் சடையானைத் தொழுமினே.

உங்கள் பழவினைகள் நாள்தோறும் உம்மைவிட்டு நீங்க வேண்டுமாயின் என்றும் நீர் இன்பத்தில் திளைக்க வேண்டுமாயின் திருவேட்களத்தில் உள்ளே இருக்கும் நெருங்கிய பொன்னிறமான திருமுடியுடைய சிவபெருமானை தொழுவீர்களாக.

தலம்: திருச்சாய்க்காடு இறைவன்: சாயாவனேஸ்வரர்
சாய்க்காட்டீசர்
பலன்: எமபயம் தீரல் இறைவி: குயிலினுநன்மொழியாள்

21. தோடுலா மலர்கள் தூவி தொழுதெழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்றென்று மெய்கொள்வான் வந்தகாலன்
பாடுதான் செல்லும்அஞ்சிப் பாதமே சரண மென்ன
சாடினார் காலன் மாள சாய்க்காடு மேவினாரே.

இதழ்செறி மலர்களைத் தூவி சிவபெருமானை வணங்கி வந்த மார்க்கண்டேயனின் மரணம் எய்தும் நாள் நெருங்கியது என்று அவனது உயிரைக் கவர எமன் வந்தேபாது சிவன் பாதங்களே புகல் என மார்க்கண்டேயன் பற்றிக்கொள்ள யமனை உதைத்து வீழ்த்தியவர் சாய்க்காட்டில் உள்ள ஈசனவார்.

தலம்: திருக்கழிப்பாலை இறைவன்: பால்வண்ணநாதர்
பலன்: இறைவன் முழுஉரு காணல் இறைவி: வேதநாயகி

22. நங்கையைப் பாகம் வைத்தார் ஞானத்தை நவிலவைத்தார்
அங்கையில் அனலும்வைத்தார் ஆனையின் உரிவைவைத்தார்
தங்கையில் யாழும்வைத்தார் தாமரை மலரும் வைத்தார்
கங்கையைச் சடையில் வைத்தார் கழிப்பாலை சேர்ப்பனாரே.

திருக்கழிப்பாலையில் வாழும் ஈசனார் உமாதேவியைப் பாகத்தில் வைத்துக் கொண்டார். ஞானமாகிய மறைகளை ஓதுவதற்காக தம் நாவில் வைத்துக் கொண்டார். உள்ளங்கையில் தீயை ஏந்தினர். யானையின் தோலை போர்த்துக் கொண்டார், ஒரு கையில் யாழையும் மற்றோர் கையில் தாமரை மலரையும் கொண்ட அவர் தமது திருமுடியில் கங்கையை வைத்துக் கொண்டார்.

தலம்: திருச்சாய்க்காடு இறைவன்: சாய்க்காட்டீஸ்வரர்
பலன்: சிவபதம்பெறல் இறைவி: குயிலினுநன்மொழியாள்

23. ஆமலிபாலும் நெய்யும்ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூமலிகொன்றை சூட்டப் பொறாததன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஒச்சக் குளிர்சடை கொன்றை மாலை
தாமநற் சண்டிக்கீந்தார் சாய்க்காடு மேவினாரே.

சிவபெருமானுக்கு பசும்பாலையும் நெய்யும் கொண்டு அபிஷேகம் செய்து அர்ச்சனைகள் செய்து பூக்கள் நிறைந்த கொன்றை மாலையைச் சூட்டி வழிபட்டார். சண்டீசர் அதைப் பொறுக்க முடியாத அவரது தந்தை சிவ விக்கிரகத்தைக் காலால் இடறினார். உடனே சண்டீசர் தனது தந்தை என்றும் பாராமல் சிவ நிந்தனை செய்த தந்தையின் காலை மழுவாயுதத்தால் வெட்டினார். அதுகண்டு மகிழ்ந்த ஈசன் தனது ஆலயத்தில் தனக்குச் செய்யும் பூசனைகள் அனைத்தும் சண்டீசருக்குச் செய்யும்படி அருள் செய்தார்.

சுந்தரர்

தலம்: திருக்கோலக்கா இறைவன்: சுந்தபுரீஸ்வரர்
பலன்: வேண்டுவனபெறல் இறைவி: ஓசைகொடுத்த நாயகி

24. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞான சம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை என்மனக்கருத்தை
ஆளும்பூதங்கள் பாடநின்று ஆடும்
அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோவில் உளானை
கோலக்காவினில் கண்டுகொண்டேனே.

தெய்வாம்சம்மிக்க தமிழ்த் தேவார இன்னிசையை நாள்தொறும் பாடிப்பணிந்த ஞானசம்பந்தருக்கு உலகோர் அறியும்படி பொற்றாளம் வழங்கிய பரிவுமிக்க சிவபெருமான் என் உள்ளக் கருத்தெலாம் நிறைந்துளான். அழகிய கண்களை உடைய அந்த எம்பெருமானை கோளிலி ஆலயத்துள் விளங்கும் பெம்மானை திருக்கோலக்காவில் நான் கண்டுகொண்டேன்.

தலம்: திருக்குருகாவூர் வெள்ளடை இறைவன்: வெள்ளடைநாதர்
பலன்: துயரம் நீங்கல் இறைவி: காவியங்கண்ணி

25. பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினில் சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருள் சுடரொப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடை குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

திருக்குருகாவூர் வெள்ளடையில் அருள்பாலிக்கும் சிவனே நீ பாடல்களில் தமிழை ஒத்தவனாயும் பழங்களில் சுவையை ஒத்தவனாயும் கண்களில் உள்ளே உள்ள மணியை ஒத்தவனாயும், கொடிய இருளை விலக்கும் சுடரொளியை ஒத்தவனாயும் விளங்கி இப்பூவுலகில் உள்ள உன் அடியார்களது துன்பங்களை நீக்குகின்றாய்.

தலம்: திருநின்றியூர் இறைவன்: மகாலெட்சுமிநாதர்
பலன்: இறைநேசம் பெறல் இறைவி: உலகநாயகி

26. வாசத்தினார் மலர்க்கொன்றை உள்ளார் வடிவார்ந்த நீறு
பூசத்தினார் புகலின்நகர் போற்றும் புண்ணியனும்
நேசத்தினால் என்னைஆளும் கொண்டார் நெடுமாகடல்சூழ்
தேசத்தினார் கிடமாவது நம்திரு நின்றியூரே

குறிப்பு: திருநின்றியூர் என்ற தலத்தில் மகாலெட்சுமி என்றும் தங்கி அருள் செய்வதாக ஐதிகம். அதனால் அவ்வூர் வாழும் சிவபெருமானுக்கு மகாலெட்சுமி நாதர் என்பது திருநாமம்.

மணம் மிக்க கொன்றை மாலையணிந்த அழகு மிளிரும் திருநீற்றை மேனி நீறு பூசிய புண்ணியர் என இந்நகர் வாழ் அடியார்களால் பாராட்டப்பெற்ற சிவபெருமான் என்னை ஆட்கொண்டு தோழனாய் கொண்ட அவர் வாழும் இடம் திருநின்றியூரே.

திருஞானசம்பந்தர்

தலம்: திருவெங்குரு (சீர்காழி) இறைவன்: தோணியப்பர்
பலன்: யமபயம் நீங்கல் இறைவி: திரிபுரசுந்தரி

27. காலைநன் மாமலர் கொண்டடி பரவிக்
கைதொழும் மாணியைக் கறுத்த வெங்காலன்
ஓலமதிடமுன் உயிரொடு மாள
உதைத்தவன் உமையவள் விருப்பன் எம்பெருமான்
மாலைவந்தணுக ஓதம் வந்துலவி
மறிதிரை சங்கொடு பவளம்முன் உந்தி
வேலைவந் தணையும் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவிஉள் வீற்றிருந்தாரே.

புலர்காலைப் பொழுதில் மலர்களைக் கொண்டு வழிபாடு செய்த மார்க்கண்டேயன் உயிர்கவர கோபத்துடன் வந்த யமதர்மனை ஓலமிடும்படி உயிர்மாய்த்த சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் மாலைப்பொழுதில் கடலலைகள் சங்குகளையும் பவளங்களையும் இறைக்கும் சோலைகள் மிகுந்த திருவெங்குரு எனும் சீர்காழியே ஆம்.

தலம்: சிரபுரம் (சீர்காழி) இறைவன்: தோணியப்பர்
பலன்: வினைகள் நீங்கப்பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

28. கோலமாகரி உரித்தவர் அரவொடும் ஏனைக் கொம்பிள ஆமை
சாலப்பூண்டு தண்மதியது சூடிய சங்கரனார் தம்மைப்
போலத்தம் அடியார்க்கும் இன்பளிப்பவர் பொருகடல் விடம்உண்ட
நீலத்தார் மிடற்றண்ணலார் சிரபுரம்தொழ வினைநில்லாவே.

பெரிய யானையை உரித்தவரும் பாம்பு, ஆமை, பன்றிப்பல் முதலியவற்றை அணியாகப் பூண்டவரும் குளிர்ச்சி மிக்க நிலவை சூடியவரும் ஆன சங்கரனார் தம் அடியார் அனைவர்க்கும் இன்பம் அளிப்பவர் அந்த நீலகண்ட பெருமானை சிரபுரம் எனும் சீர்காழியில் வணங்கிவழிபட்டால் நமது பழவினைகள் நீங்கும்.

தலம்: திருப்புறவம் (சீர்காழி) இறைவன்: தோணியப்பர்
பலன்: சிற்றின்ப உணர்வு நீங்கி நன்னெறி பெறுதல் இறைவி: திரிபுரசுந்தரி

29. கற்றறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்
அற்று, அரனேநின் அடிசரண் என்னும் அடியார்க்குப்
பற்றதுவாய பாசுபதன் சேர் பதியென்பர்
பொற்றிகழ் மாடத்தொளிகள் நிலாவும் புறவம்மே.

சிற்றின்ப உணர்வுகளை நீக்கி, பலமெய்ஞ்ஞான நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவுண்டாகி சிவபெருமானே நின்னடிகளே சரணம் என்னும் அடியார்க்கு பற்றுக்கோடாய் இருக்கும் பாசுபதனாகிய இறைவன் வாழ்வது பொன்னொளி மிக்க மாடங்கள் சூழ்ந்த திருப்புறவம் எனும் சீர்காழியே.

தலம்: சீர்காழி இறைவன்: தோணியப்பர்
பலன்: பிணி நீங்கல் இறைவி: திரிபுரசுந்தரி

30. ஊரார் உவரிச்சங்கம் வங்கம் கொடுவந்து
காரார்ஓதக் கரைமேல் உயர்த்தும் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக்கண்ணாய் என்றென்று
பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே.

ஊரில் பேரொலி எழுப்பும் கடலுடைய சங்குகளையும் மரக் கலங்களையும் கரிய கடல்நீர் கொண்டு வந்து கரையில் சேர்க்கும் சீர்காழியில் எழுந்தருளிய கங்கைச்சடை கொண்டவனே நெற்றிக்கண்ணை உடையவனே என்று சிவபெருமானது ஆயிரத் திருநாமங்களைக் கூறி வழிபட்டால் பிணிகள் அண்டாது.

தலம்: திருக்கழுமலம் (சீர்காழி) இறைவன்: தோணியப்பர்
பலன்: இன்பம் சூழல் இறைவி: திரிபுரசுந்தரி

31. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

கண்களுக்கு இனிய காட்சிகளை உடைய திருக்கழுமலம் எனும் சீர்காழியில் பெண்களில் சிறந்த உமையம்மையும் பெருந் தன்மை மிக்க சிவனும் அமர்ந்துள்ளார். அவரை நாள்தோறும்

வழிபட்டால் இப்பூவுலகில் இன்பமாய் வாழலாம். வீடுபேறு அடைவதற்கும் ஒருகுறையும் வராது.

திருநாவுக்கரசர்

தலம்: திருச்சாய்க்காடு இறைவன்: சாய்க்காட்டீசர்
பலன்: தேவபதம் பெறல் இறைவி: குயிலினு நன்மொழியம்மை

32. குவப்பெரும் தடக்கை வேடன் கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெரும் செருப்பால் நீக்கி தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெரும் குருதிசோர ஒருகணை இடந்தங்கப்ப
தவப்பெரும் தேவுசெய்தார் சாய்க்காடு மேவினாரே.

வலிய திரண்டு அகன்ற கைகளையுடைய வேடனான கண்ணப்ப நாயனார் தனது வில்லில் கொணர்ந்த இறைச்சியாகிய நைவேத்தியத்தை தனது செருப்புக்கால் கொண்டு படைத்து தனது வாயினில் கொணர்ந்த ஆற்று நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தபோது இறைவன் கண்ணில் இருந்து இரத்தம் வழிந்ததால் தனது கண்களை அம்பால் தோண்டி இறைவனது ஊறுபட்ட கண்ணில் அப்பவே அவருக்கு தேவபதத்தைத் தந்தார் சாய்க் காட்டில் வாழும் பெருமான்.

தலம்: புள்ளிருக்கு வேளூர் வைத்தீஸ்வரன் கோவில் இறைவன்: வைத்தியநாதர்
இறைவி: தையல்நாயகி
பலன்: பிணிகள் அகலல்

33. உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள உள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

தம்மனத்தால் சிவனை நினைந்து நினைந்து மென்மையுடன் பணிவார்க்கு அவர்களது வினைகள் உண்மையில் நீங்கிவிடும். ஆதலால் சடாயு வணங்கிய வைத்தீசுவரன் கோவில் இறைவனை வணங்குவீராக.

தலம்: திருநாரையூர் இறைவன்: சௌந்தரேசுவரர்
பலன்: துயர் தீர்தல் இறைவி: திரிபுரசுந்தரி

34. பண்ணினான் மறை பாடலோடு ஆடலும்
எண்ணினார் புரம் முன்றெரி செய்தலும்
நண்ணினார் துயர் தீர்த்தலும் நாரையூர்
அண்ணலார் செய்கை அம்ம அழகிதே.

திருநாரையூரில் அருள்பாலிக்கும் சிவனின் செய்கை மிகவும் அழகு பொருந்தியது. அவை யாதெனில் நான்கு வேதங்களையும் இசையோடு பாடி ஆடலும், பகைவரது புரங்கள் மூன்றையும் எதிர்ப்பதும் தம்மை அண்டி வந்த அடியார்களது துயரங்கள் தீர்த்தலுமே ஆகும்.

தலம்: திருக்குறுக்கை வீரட்டம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: நற்பிறவி கிட்டல் இறைவி: ஞானாம்பிகை

35. சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தர் செய்ய
உலந்து அவனிறந்தபோது கோச் செங்கணனும் ஆக
கலந்தநீர் காவிரிசூழ் சோணாட்டு சோழர்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே.

திருவானைக்காவில் இறைவன் திருமேனிக்கு உச்சியில் தன்வலையால் நிழல் செய்த சிலந்தி மறுபிறவியில் காவிரி பாயும் சோழநாட்டார் குலத்தில் ‘கோச்செங்கணான்’ எனும் சோழனாய் பிறப்பித்தார் திருக்குறுக்கை வீரட்டேசுவரர்.

தலம்: திருநீடூர் இறைவன்: அருட்சோமநாதர்
பலன்: சேராமை இறைவி: வேயுறுதோளியம்மை

36. கலைஞானம் கல்லாமே கற்பித்தானை
கடுநரகம் சாராமே காப்பான்தன்னை
பலவாய வேடங்கள் தானேயாகிப்
பணிவார்கட்கு அங்கங்கே பற்றாவானை
சிலையாலே புரமெரித்த தீயாடியை
திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நிலையார் மணிமாட நீடூரானை
நீதனேன் என்னேநான் நினையாவாறே.

நிலைபெற்ற மாடமாளிகைகள் சூழ்ந்த நீடுர் எனும் தலத்தில் உள்ள எம்பிரான் பலப்பல கலைஞான அறிவை கற்காமலே

கற்பித்தவன் பலப்பல வடிவில் தன்னைப் பணிவோரிடம் தானே சென்று அருள் செய்பவர் கடுமை பொருந்திய நரகத்தில் நான் சேராமல் என்னைக் காப்பாற்றியவன், அவன்தான் தனது வில்லைக் கொண்டு திரிபுரங்களையும் எரித்த திருப்புன்கூர் சிவ லோகநாதன். அவனை நான் எவ்வாறு நினையாத நீசன் ஆனேன்.

ஞானசம்பந்தர்

தலம்: திருநின்றியூர் இறைவன்: மகாலெட்சுமிநாதர்
பலன்: நோயின்மை இறைவி: உலகநாயகி

37. அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இலர் அடியார்
நிச்சம்உறு நோயும்இலர் தாமும் நின்றியூரில்
நச்சம் மிடறுடையார் நறும் கொன்றை நயந்தானாம்
பச்சம்உடை அடிதன் திருப்பாதம் பணிவாரே.

திருநின்றியூரில் உறையும் நஞ்சணி கண்டனை மணமிக்க கொன்றைமாலை உகந்தவனை பரிவினை உடைய சிவபெரு மானைப் பாதம் பணிந்து வணங்குவார்களுக்கு பயம் இருக்காது. பாவம் தொடராது. கேடுகள் அண்டாது. துயர்தரும். நோய்களும் வராது.

தலம்: திருப்புள்ளிருக்குவேளூர் இறைவன்: வைத்யநாதர்
பலன்: தீவினை அண்டாமை இறைவி: தையல்நாயகி

38. திறங்கொண்ட அடியார்மேல் தீவினைகள் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமரும் இடம்
மறங்கொண்ட இராவனன்தன் வலிகருதி வந்தானை
புறங்கண்ட சடாயுவென்பான் புள்ளிருக்கு வேளூரே.

இராவணன் சினம் கொண்ட தன் வலிமையை எண்ணி போர் புரிய அவனை வெற்றிகொண்ட சடாயு பணிந்த வைத்தீசுவரன் கோவில் எம்பெருமான் தனது அடியவர்க்கு தீவினைகள் வராமல் அறநெறிகளை உணர்த்தி சிவதர்மங்களைப் போதித்தார்.

தலம்: திருக்கழுமலம் இறைவன்: தோணியப்பர்
பலன்: சிற்றின்பம் அகற்றல் இறைவி: திரிபுருசுந்தரி

39. உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது உன்பணியே
அமரர்கள் செய்வது உன் பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே.

பிரமபுரமாகிய சீர்காழியை விரும்பி உன் இருப்பிடமாய்க் கொண்ட எம்பெருமானே நீ கந்தப் பெருமானை தனது மகவாக மகிழ்வுடன் பெற்றாய். உமையம்மை இருப்பது உன் திரு மேனியில் பாதியாக உள்ளாள் உனது அடியார்கள் உன் பேரருளால் சிற்றின்பத்தை வெறுத்து ஒதுக்குவர். உனது நெற்றிக்கண் மன்மதனை எரித்தது உன் இடைக்கச்சாக பாம்பை அணிந்துள்ளாய். தேவர்கள் அனைவரும் விரும்பி உனக்கு தொண்டு செய்வர்.

தலம்: திருப்பிரமபுரம் இறைவன்: பிரம்மபுரீஸ்வரர்
பலன்: வினையகலப்பெறல் இறைவி: திருநிலைநாயகி

40. முன்னுயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடியுடைய அமரர்கள் அடிபணிந் தேத்த
பின்னிய கடைமிசைப் பிறை நிறைவித்த
பேரருளாளனார் பேணிய கோவில்
பொன்னியல் நறுமலர் புனலொடு தீபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகக்
கன்னியர் நாடொறும் வேடமே பரவு
கழுமலம் நினையநம் வினை கரிசுஅறுமே.

திருக்கழுமலம் என்ற திருப்பிரமபுரத்தில் உள்ள இறைவன் உயிர்கட்கு தோற்றமும் இறுதியையும் வழங்குவார். அவர் அமரர்களால் பணிந்து வணங்கப்படுவர். அவரது ஆலயத்தில் தினம்தோறும் பல பெண்கள் வாசனைமிக்க மலர்களையும் திருமேனி முழுக்காட்ட தூய நீரையும் சந்தனம் வாசனைப் புகை ஆகியனவற்றை ஏந்தி வழிபடுவர் அத்தகைய கழுமலம் என்ற சீர்காழித் தலத்தை நினைத்த அளவில் நமது வினைகள் அகலும்.

தலம்: திருக்கோலக்கா இறைவன்: சத்தபுரியீசர்
பலன்: இறைவன் திருக்காட்சி இறைவி: ஓசை கொடுத்த நாயகி

41. மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கை கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும்கீள்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ.

வாளை மீன்கள் துள்ளிப் பாய கன்னிகள் குடைந்து நீராடும் பொய்கைகள் உள்ள கோலக்காவுள் உள்ள சிவபெருமானின் சடைமுடியும் அதில் அணிந்த பிறை நிலவும் மேனி முழுதும் பூசப்பட்ட திருநீறும் அவரது அழகிய உடையும் கொண்ட திருக்காட்சியை என்ன சொல்லி வர்ணிப்பது.

சுந்தரர்

தலம்: திருப்புன்கூர் இறைவன்: சிவலோகநாதர்
பலன்: எமபயம் தீரல் இறைவி: சொக்கநாயகி

42. அந்தணாளன் உன் அடைக்கலம் புகுதர
அவனைக் காப்பது காரணமாக
வந்தகாலன் தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க் குன்றன் வன்மை கண்டடியேன்
எந்தைநீ எனைநமன் தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.

உனது திருவடியில் அடைக்கலமாகப் புகுந்த மார்க்கண்டே யனைக் காப்பதற்காய் அவன் உயிர் கவர வந்த யமனை அழித்த வல்லமை கண்டு நான் என் தந்தையே, எமனது தூதர்கள் வந்து எனை வருத்த முற்பட்டால் நீ வந்து இவன் எனது அடியான் என்று அவர்களை விலக்கும், சோலைகள் செறிந்த திருப்புன்கூர் வாழும் சிவபெருமானே.

திருநாவுக்கரசர்

தலம்: திருஇன்னம்பர் இறைவன்: எழுத்தறிநாதர்
பலன்: இறைவனால் அடியவனாய் எண்ணப்பெறல் இறைவி: கொந்தார்பூங்குழலி அம்மை

43. தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் யீசனே.

திரு இன்னம்பரில் உள்ள இறைவன் தன் மேல் விருப்பம் உற்று அழுது தூய்மையான மலர்களைத் தூவி வழிபட்டு தொழுபவரை மட்டுமல்ல, வறிதே வீண்பொழுது போக்கித் தன்னை நினையாதவரையும் தன் அடியார்களாய் கணக்கிடுவான்.

தலம்: திருஇன்னம்பர் இறைவன்: எழுத்தறிநாதர்
பலன்: இறைவனைப் பிரியாதிருத்தல் இறைவி: கொந்தார்பூங்குழலி அம்மை

44. கருவுற்ற காலத்தே என்னையாண்டு
கழல்போது தந்தளித்த கள்வர் போலும்
செருவிற் புரம்மூன்றும் அட்டார் போலும்
தேவர்க்கும் தேவராம் செல்வர் போலும்
மருவில் பிரியாத மைந்தர் போலும்
மலரடிகள் நாடி வணங்கல் உற்ற
இருவர்க்கு ஒருவராய் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீசனாரே.

திருஇன்னம்பர் எனும் தலத்தில் அரி அயன் ஆகிய இருவரும் வணங்கும் ஒருவராகவும், நான் கருவில் தோன்றிய காலம் முதல் என்னை ஆட்கொண்டு தம் திருவடிகளை எனக்குத் தந்த என் உள்ளம் கவர் கள்வனாகத் திரிபுரம் மூன்றையும் அழித்தவராகவும் தேவர்கட்கெல்லாம் மேலான தேவர் ஆகவும் என்னை மருவி என்னை என்றும் பிரியாதவராகவும் நான் வணங்கித் துதிப்பவராகவும் உள்ளார்.

தலம்: திருக்கடம்பூர் இறைவன்: அமிர்தகடேசர்
பலன்: இறைவனால் காப்பாற்றப் பெறல் இறைவி: சோதிமின்னம்மை

45. நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பை திருக்கரக் கோவிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

கடம்பமாலை யணிந்த திருமுருகனைப் பெற்ற பார்வதியை தனது உடலின் இடப்பாகத்தைக் கொண்ட தென்கடம்பூர் எனும் தலத்தில் வாழும் ஈசனது கடமை என்னைக் காப்பாற்றல் ஆனால் எனது கடமையோ அவனுக்கு தொண்டு செய்து கொண்டிருப்பதே.

தலம்: திருமங்கலக்குடி இறைவன்: புராணவரதேஸ்வரர்
பலன்: செல்வம் பெருகப் பெறல் இறைவி: மங்களநாயகி

46. செல்வம் மல்கு திருமங்கலக்குடி
செல்வம் மல்கு சிவநியமத்தராய்
செல்வம் மல்கு செழுமறை யோர்தொழச்
செல்வன் தேவியொடும் திகழ் கோயிலே.

செல்வம் பெருகி வளரும் திருமங்கலக்குடியில், செல்வம் பெருக வைக்கும் சிவாகம முறைப்படி சிவனை வழிபடும் மறையாளர்கள் உள்ள அத்தலத்தில் தன் தேவியோடும் அமர்ந்து அருள்பாலிக்கிறான்.

தலம்: திருஆப்பாடி இறைவன்: பால்உகந்தநாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: பெரியநாயகியம்மை

47. ஆரழல் உருவமாகி அண்டமேழ் கடந்தளந்தை
ஓரொளி உருவினானை பிரமனும் மாலும் காணா
சீரஅவை பரவிஏத்தி சென்றடி வணங்குவார்க்கு
பேரருள் அருளிச் செய்வார் பேணும் ஆப்பாடியாரே.

திருஆப்பாடி எனும் தலத்தில் தீப்பிழம்பே வடிவமாகி ஏழு அண்டங்களையும் கடந்த ஒளி உருவமாய் பிரமனும் திருமாலும் காணாத திருமுற்றம் சென்று இறைவனைப் புகழ்ந்துபாடி அடி வணங்குவார்க்கு அவன் பேரருள் கிட்டும்.

சுந்தரர்

தலம்: திருக்கழுமலம் இறைவன்: தோணியப்பர்
பலன்: மறுபிறப்பின்மை பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

48. வரும்பெரும் வல்வினை என்றிருந் தெண்ணி
வருந்தலுற்றேன் மறவாமனம் பெற்றேன்
விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
வேண்டிநின்றேன் தொழுதேன் விதியாலே
அரும்பினை அலரினை அமுதினைத் தேனை
ஐயனை அறவன்என் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினை பெருஞ்சென்னெல் நெருங்கிய கழனி
கழுமல வளநகர் கண்டு கொண்டேனே.

எண்ணும்தோறும் மனத்தை வருத்தும் என் கொடிய வினைகளினால் வருந்தினேன். ஆனாலும் இறைவனை மறவாது துதிக்கும் மனம் பெற்றேன். எனது நல்வினைப் பயனால் எனது மறுபிறவி என்னும் வேரை அறுத்துத் தள்ளும் அமுதம் போன்றவனை மலரையும், அதனுள் இருக்கும் தேன் போன்றவனை கரும்பினும் இனிய என் எம்பெருமானை சென்னெல் வயல் சூழ்ந்த கழுமலம் எனும் சீர்காழியில் கண்டுகொண்டேன்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருமணஞ்சேரி இறைவன்: அருள்வள்ளல் நாயகர்
பலன்: இடர்சூழாமை இறைவி: யாழினும் பொன்மொழி அம்மை

49. எறியார்பூங் கொன்றையி னோடும் இளமத்தம்
வெறியாடும் செஞ்சடை யார மிலைத்தானை
மறியாருங் கையுடையானை மணஞ்சேரி
செறிவானை செப்பவல்லார்க் கிடர் சேராவே.

கொன்றைமலரும் மத்தமலரும் மணம் நிறைந்த சடைமுடித்தானை, மானைக்கையில் பற்றியுள்ள திருமணஞ்சேரியில் நிறைந்து அருள் செய்யும் இறைவனை பாடிப் பணிபவர்க்கு துன்பங்கள் சேராது.

தலம்: திருக்கருப்பறியலூர் இறைவன்: குற்றம் பொறுத்தநாதர்
பலன்: வீடுபேறுபெறல் இறைவி: கோல்வளைநாயகி

50. சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே.

சுற்றத்தாரை நீக்கி பற்று பாசங்களை நீக்கி எவ்வித குற்றங்களும் இல்லாத நற்குணமுள்ள தனது அடியார்களை வீடுபேறு பெறச் செய்யும் இறைவன் இருக்குமிடம் திருக்கருப்பறியலூரே.

தலம்: திருவாழ்கொளிப்புத்தூர் இறைவன்: மாணிக்கவண்ணர்
பலன்: இறையின் வரம்பெறல் இறைவி: வண்டமர் பூங்குழலி

51. பரவுவாரையும் உடையர் பழித்திகழ் வாரையும்உடையர்
விரவு வாரையும் உடையார் வெண்தலைப்பலி கொள்வதுடையார்
அரவம்பூண்பதும் உடையார் ஆயிரம்பேர்மிக உடையார்
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளிப் புத்தூருளாரே.

திருவாழ்கொளிப்புத்தூர் உறையும் மாணிக்கவண்ணர் தம்மை அடி வணங்கிப் பணிவாரையும் தம்மை பழிச்சொல் கூறி இகழ்ந்துரைப்பாரான பிற சமயத்தினரையும் ஏற்றவர் பிரம்ம கபாலத்தில் இரந்துண்ணும் பிச்சையையும், பாம்பினை அணி யாகக் கொண்டவரும் ஆயிரம் திருநாமங்களையும் உடையவரும் ஆன அவர் பேதங்கள் இன்றி வரங்கள் ஆயிரம் ஆயிரமாய் வழங்குவர்.

தலம்: திருநாரையூர் இறைவன்: சௌந்தரேசுவரர்
பலன்: செல்வம் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி
புலன் அடக்கல்

52. தனம்வரும் நன்மையாகும் தகுதிக்கு
வாழ்ந்து வருதிக்குழன்ற உடலின்
இனம்வளர் ஐவர்செய்யும் வினையங்கள்
செற்று நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொருகாலம் மூன்று புரம்வெந்து மங்கச்
சரமொன்று எரிந்து அவுணர்
சினமொரு காலழித்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே!

முன்பு திரிபுரங்களின் அரக்கர்கள் சினம் அடங்க அவர்களை எரித்து அழித்த சிவன் வாழும் திருநாரையூரில் அவனை வணங்கினால் செல்வம் பெருகும். நன்மைகள் விளையும், நாற்றிசையிலும் செல்லும் நமது ஐம்புலன்களை அடக்கலாம். இறைவனை நினைந்து நம் சிந்தை பெருமைப்படும்.

தலம்: திருப்புன்கூர் இறைவன்: சிவலோகநாதர்
பலன்: முன்வினை அகலப்பெறல் இறைவி: சொக்கநாயகி

53. முந்திநின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி! நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர் போலும்
கந்தம் மல்கும் கமழ்புன் சடையாரே.

நறுமணம் கமழும் திருமுடி உடையவரும் முதல் முடிவு இல்லாதவருமான திருப்புன்கூர் வாழும் சிவனை நமது முந்தைப் பிறவி வினைகள் நீக்குவதற்காக என நெஞ்சமே நினைப்பாயாக.

திருநாவுக்கரசர்

தலம்: திருவிசயமங்கை இறைவன்: விசயநாதர்
பலன்: இறைவனை உறவாக்கல் இறைவி: மங்கைநாயகி

54. வந்து கேண்மின்! மயல்தீர் மனிதர்காள்!
வெந்தநீற்றன் விசயமங்கைப் பிரான்
சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனப்
பந்துவாக்கி உய்யக்கொளும் காண்மினே!

மனமயக்கங்களை தீர்க்க விரும்பும் மனிதர்களே இங்கு வந்து நான் கூறுவதைக் கேளுங்கள்! திருவிசயமங்கையில் அருள் பாலிக்கும் வெண்திருநீறு பூசிய சிவபெருமான் தன்னை மனத்தால் நினைத்து பணிவார்களை உடனே தனது உறவு என ஆக்கிக் கொண்டு வாழச் செய்வதைக் காணுங்கள்.

தலம்: திருப்பழனம் இறைவன்: ஆபத்சகாயேசுவரர்
பலன்: துயர்கண்டு நடுங்காமை இறைவி: பெரியநாயகி

55. ஓராதார் உள்ளத்தில் நில்லார்தாமே
உள்ளூறும் அன்பர் மனத்தர் தாமே
பேராது என்சிந்தை இருந்தார் தாமே
பிறர்க்கென்றும் காட்சிக்கு அரியார் தாமே

ஊராரும் மூவுலகத் துள்ளார் தாமே
உலகை நடுங்காமல் காப்பார் தாமே
பாரார் முழவத்து இடையார் தாமே
பழனநகர் எம்பி ரானார் தாமே!

திருப்பழனம் எனும் தலத்தில் உள்ள இறைவனார் தம்மை நினையாதவர் மனத்தில் இருக்கமாட்டார் தம்மை நினைந்துருகும் அடியார் மனத்தே என்றும் இருப்பார். அதுபோல் என் சிந்தையிலும் நீங்காமல் இருப்பார் தம்மை அண்டி நில்லாத பிறரால் காண முடியாதவர் மூன்று உலகங்களில் உள்ள சகல இடத்தும் இவர் இருப்பார். இந்த உலகத்தார் துன்பங்களால் வருந்தி நடுங்காமல் காத்திடுவார் மத்தளங்கள் முழங்கி வரும் ஓசைகளின் இடையில் இருப்பார்.

தலம்: திருவையாறு இறைவன்: ஐயாறப்பர்
பலன்: இறைவன் அருள்பெறல் இறைவி: அறம்வளர்த்த நாயகி

56. சகம் அலாது அடிமைஇல்லை தான்அலால் துணையுமில்லை
நகம்எலாம் தேயக்கையால் நாள்மலர் தொழுதுதூவி
முகம்எலாம் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்தும்தொண்டர்
அகம்அலால் கோவில் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே.

திருவையாற்றில் உள்ள ஐயாறப்பருக்கு தங்கள் கைநகங்கள் தேயும் அளவுக்கு அன்றலர்ந்த மலர்களைப் பறித்து தூவி அழுது கண்ணீர் வடித்து அவரை வணங்கும் தொண்டர்களின் மனம் அல்லாது வேறு ஆலயம் இல்லை. தொண்டர்க்கு அவரையன்றி வேறு துணையும் இல்லை.

தலம்: திருவையாறு இறைவன்: ஐயாறப்பர்
பலன்: இறைரன் திருக்காட்சி காணல் இறைவி: அறம்வளர்த்த நாயகி

57. மாதர்பிறைக் கண்ணியாளை மலையான் மகனொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்துஏத்தி புகுவார்அவர் பின்புகுவேன்
யாதும்சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

அழகிய இளம்பிறையை முடியில் அணிந்தவரான ஐயாறப்பரை யும் இமவான் மகளான உமாதேவியையும் புகழ்ந்து பாடிக் கொண்டு பெண்கள் எல்லோரும் தளிர் மலர்களையும் அபிஷேக

நீரையும் சுமந்து செல்வார்கள். பின் கால் சுவடுபடாமல் தலைகீழாக நான் திருவையாறு அடைந்தபோது காதல்மிக்க பெண் யானையின் வடிவொடு அம்பிகையும், ஆண் யானை வடிவாக இறைவனையும் இதற்கு முன் நான் கண்டிடாத பெருமானது திருவடிகளையும் கண்டேன்.

தலம்: திருவையாறு — இறைவன்: ஐயாறப்பர்

பலன்: கடுவினை நீக்கல் — இறைவி: அறம்வளர்த்த நாயகி

58. சங்கணி குழையும் வைத்தார் சாம்பல்மெய் பூசவைத்தார்
வெங்கதிர் எரியவைத்தார் விரிபொழில் அனைத்து வைத்தார்
கங்குலும் பகலும் வைத்தார் கடுவினை களைய வைத்தார்
அங்கமது ஓத வைத்தார் ஐயன் ஐயா றானாரே.

ஐயாறப்பர் சங்காலான வெண்மைநிற குண்டலங்களை அணிந்துள்ளார். உடலெல்லாம் திருநீற்றை பூசிக்கொண்டார். சூரியனை தமது கண்ணாக வைத்துக் கொண்டார். குளிர்ச்சி மிக்க சோலைகளையும் படைத்தார். இரவும் பகலும் மாறி மாறிவரும் இயல்பை உருவாக்கினார். தமது திருவருளால் உலக மக்களின் கொடிய வினைத் துன்பங்கள் நீங்கச் செய்தார்.

சுந்தரர்

தலம்: திருக்கருப்பறியலூர் — இறைவன்: குற்றம்பொறுத்தநாதர்

பலன்: இனியன பெறல் — இறைவி: கோள்வளைநாயகி

59. நீற்றாரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானை தீயானை, கதிரானை, மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றானை கூற்றுஉதைத்த கோல்வளையாள் அவளோடும் கொகுடிக் கோவில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியவாறே.

திருநீறணிந்த மேனியலராய் தம்மை வழிபடும் அடியாருக்கு காற்றாகவும் தீயாகவும் சூரிய சந்திரர்களாயும் வடிவு கொண்டவரும் எமதர்மனை உதைத்தவரும் கோல்வளை நாயகி எனும் உமையவளை இடப்பாகம் கொண்டவரும் ஆன திருக்கருப்பறி யலூர் ஆண்டவன் என்றும் இனியவர்.

தலம்: திருக்கருப்பறியலூர் இறைவன்: குற்றம்பொறுத்த நாதர்
பலன்: இடர்நீங்கி இன்பம் பெறல் இறைவி: கோள்வளைநாயகி

60. கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம் இடர்தீர்க்கும் கருப்பறியலூர்க்
குலைமலிந்த கோள்தெங்கு மாட்டெழுகும் பூஞ்சோலைக் கொகுடிக் கோவில்
இலைமலிந்த மழுவானை மனத்தினால் அன்புசெய்து இன்பம் எய்தி
மலைமலிந்த தோள்ஊரன் வனப்பகை அப்பன் உரைத்த வண்தமிழ்களே!

குலைகள் நிறைந்த தென்னைகளும் தேன் சிந்தும் மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளும் இருக்கும் கொகுடிக் கோவிலான திருக்கருப்பறியலூரில் இலைவடிவான மழுவாயுதத்தை ஏந்திய வரும் ஆன இறைவனையே எண்ணி மலைபோன்ற தோள்களை உடைய ஆரூரான் சுந்தரரின் இனிய தமிழ்ப் பாடல்கள் அவற்றை ஓதும் கல்விமிக்க புலவர்களால் பாடப்பெறும்போது அவ்விறைவன் கருணையால் இடர்கள் அனைத்தும் நீங்கி இன்பம் எய்தப் பெறுவர்.

தலம்: திருத்துருத்தி இறைவன்: சொன்னவாறு அறிவார்
பலன்: பிணித்துயர் நீங்கல் இறைவி: அரும்பன்னவன முலையம்மை

61. மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடும் திரைகொணர்ந் தெற்று
அன்னமாங் காவிரி அதன்கரை உறைவார்
அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளை செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமாறுஎம் பெருமானை
என்உடம்பு அடும்பிணி இடர்களைவானை.

மேகங்கள் முழங்கி மழைபொழிய வழியும் நீர்அருவி போல கரைகள் வெடிபடுமாறு முத்தும் மணிகளையும் கரைகளில் சேர்க்கும் காவிரியாற்றின் அகன்ற கரையில் உறையும் துருத்தியில் வாழும் சொன்னவாறு அறிவார் எனும் இறைவனை தொழும் போது எனக்குற்ற பிணிகளையும் துயர்களையும் நீக்கும் எம்பெருமானை என்னால் மறக்கமுடியுமா?

திருநாவுக்கரசர்

தலம்: திருவையாறு இறைவன்: ஐயாறப்பர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: அறம் வளர்த்த நாயகி

62. ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே!
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!
வாசமலரெலாம் ஆனாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய் நீயே!
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே!
தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே
திருவை யாறகலாத செம்பொற் சோதி.

நீதான் ஓசை ஒலியாகத் திகழ்ந்தாய்! நீதான் உலகெலாம் பணியும் ஒருவனாய் இருந்தாய்! நீதான் வாசனை பொருந்திய மலர்களாய் இருந்தாய்! மலைமகளாக உமையை யீன்ற இமவானின் மருமகனும் ஆனாய்! உனைப்பற்றி பேசினாலே இன்பம் தரும் இனியவனாய் என் தலைமேல் உன் திருவடிகளை வைத்த பெருமானும் நீதான். உலகுக்கெல்லாம் ஒளிகொடுக்கும் விளக்காக திருவையாற்றில் செம்பொன்போன்ற சோதியாய் இருப்பவனும் நீதான்.

தலம்: திருவையாறு இறைவன்: ஐயாறப்பர்
பலன்: செல்வம் பெறல் இறைவி: அறம் வளர்த்த நாயகி

63. எல்லாஉலகமும் ஆனாய்நீயே! ஏகம்பமேவி இருந்தாய் நீயே!
நல்லாரை நன்மை அறிவாய் நீயே! ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே!
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே! புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே! திருவையாறகலாத செம்பொற் சோதி!

எவ்வுலகினும் இருப்பவன் நீ காஞ்சீபுரத்தில் ஏகம்பனாய் இருப்பவன் நீ! நல்லவர்களை அறிந்து அவர்களுக்கு நன்மை அருள்பவன் நீ. ஞானவிளக்காய் விளங்குபவன் நீ. கொடிய வினைப்பயன் வினை நீக்குபவன் நீ. உனது புகழ்மிக்க திருவடி களை என் தலை மீது வைத்தவன் நீ. செல்வங்களில் சிறந்தவற்றை தெளிந்து எமக்கு அளிப்பவனான திருவையாறில் செம்பொன் போன்ற சோதிவடிவாய் இருப்பவனே.

தலம்: திருவாட்சிபோக்கி இறைவன்: இரத்தினகிரி நாதர்
பலன்: வாட்டம் நீக்கல் இறைவி: அரும்பார்குழலம்மை

64. நாடிவந்து நமன்தமர் நல்லிருள்
கூடிவந்து குமைப்பதன் முன்னமே
ஆடல்பாடல் உகந்த வாட்போக்கியே
வாடியேத்த நம் வாட்டம் தவிருமே!

நள்ளிரவில் யமதூதர்கள் நம்மைத் தேடி வந்து நமது உயிர் கவரும் முன்பாகவே ஆடல் பாடல்களை விரும்பி நிற்கும் திருவாட்போக்கி ஆண்டவனை வருந்திப் போற்றினால் நமது வாட்டமெல்லாம் நீங்கும்.

தலம்: திருவானைக்கா இறைவன்: நீர்த்திரள்நாதர்
ஜம்புகேஸ்வரர்
பலன்: இன்பம்பெறல் இறைவி: அகிலாண்டநாயகி

65. துன்பம் இன்றித் துயரின்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் யீசன் இறைவனென்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே.

பொன்னுக்கு நிகரான எனது ஈசன், எனது இறைவன் என்று இரவும் பகலும் நினைந்து வணங்குபவரான அடியவர்கட்கு ஆனைக்காவில் உள்ள அண்ணலான இறைவன் உற்ற துணையாகி துன்பங்களையும் துயர்களையும் நீக்கி என்றும் இன்பம் நல்குவான்.

சுந்தரர்

தலம்: திருப்புன்கூர் இறைவன்: சிவலோகநாதர்
பலன்: வேண்டியன பெறல் இறைவி: சொக்கநாயகி

66. போர்த்த நீள் செவியாளர் அந்தணர்க்கு
பொழில்கொள் ஆல்நிழற்கீழ் அறம்புரிந்து
பார்த்தனுக்கு அன்று பாசுபதம் கொடுத்து
அருளினாய் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்து இழியும் புனற்கங்கை
நங்கையாளை நின் சடை மிசைக்கரந்த
தீர்த்தனே! நின்தன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருபுன்கூர் உளானே!

யானைத்தோல் போர்த்திய நீண்ட செவிகளை உடையவரான திருப்புன்கூர் இறைவன் முனிவர்களுக்கு ஆலமரத்தின் கீழே இருந்து உபதேசம் செய்தார். அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்தார். பகீரதனின் வேண்டுகோளை யேற்று கங்கையை மண்ணில் வரும்படி செய்தார் அவரது திருவடியினை நான் அடைந்தேன்.

திருநாவுக்கரசர்

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: இறைவனை மணத்தில் கொணரல் இறைவி: அழகாலமர்ந்த நாயகி

67. எனக்கென்றும் இனியானை எம்மான்தன்னை,
எழிலாரும் ஏகம்பம் மேயான்தன்னை,
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னை
தனக்கொன்றும் அடியேனை ஆளாய் கொண்ட
சங்கரனை சங்கவார் குழையான் தன்னை.
புனக்கொன்றை தாரணிந்த புனிதன் தன்னை
பொய்யிலியை பூந்துருத்தி கண்டேன் நானே.

என் மனத்திற்குள் என்றும் வந்து நிற்பானை எனக்கு என்றும் இனியவனை, காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதனாக இருப்பவனை பொய்யே இல்லாத மெய்வடிவானை சங்கினால் செய்த வெண்மையான தோடுடையானை அவனுக்கு இசைந்தவனாய் இருக்கும் என்னை தனது அடியவனாய் ஆட்கொண்டவனை, திருநின்றியூரிலும் அருள் செய்பவனை, நாள்மலர் கொன்றை யணிந்த அவனை நான் பூந்துருத்தியில் கண்டுகொண்டேன்.

தலம்: திருஆனைக்கா இறைவன்: ஜம்புகேஸ்வரர்
பலன்: தொல்லைகள் நீக்கல் இறைவி: அகிலாண்டேஸ்வரி

68. எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர்நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய்! நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்தன்

அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என் செய்வேனே.

என்னைப் பெற்ற தாய் தந்தை எனது சுற்றத்தார்களில் எவரும் நான் இறக்கும் காலத்தில் என் பாவச் சுமைகளை ஏற்றுக் கொள்ள உடன்படார். இவர்களில் யாரும் அத்தகைய நல்ல உள்ளம் கொண்டவர் இல்லை. நான் இறந்தால் எனக்கு சிதையில் தீ மூட்டி மறைந்திடுவார். எனவே பொன்னியாற்றின் கரையில் உள்ள திருவானைக்காவில் இருக்கும் என் தந்தை போன்றவனே உனது திருவடியினை அடைந்தால்தான் என் பாவச் சுமைகள் நீங்கும்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருநாரையூர் இறைவன்: சௌந்தரேசுவரர்
பலன்: கபடம் நீக்கல் இறைவி: திரிபுரசுந்தரி

69. கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட, கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லான் உமையோ டொருபங்கன்
அடலிடையில் சிலையெய்த அம்மான் அடியார்மேல்
நடலைவினைத் தொகை தீர்த்து உகந்தான் இடம் நாரையூர்தானே.

கடலில் தோன்றிய ஆலகாலநஞ்சை உண்டவன், காளை வாகனம் ஏறி உடலெல்லாம் திருநீறு பூசியவன் உமையை இடப் பாகம் கொண்டவன், திரிபுரம் எரித்த போரில் மேருமலையை வில்லாக்கி எய்தவன் தன்னைச் சார்ந்த அடியவர்க்கு நெஞ்சில் வஞ்சகம் பொய்களை நீக்கி அவர்களின் வினைகளை நீக்குபவன் இருக்கும் இடம் திருநாரையூராம்.

தலம்: திருக்கோடிக்கா இறைவன்: கோடிகாயீஸ்வரர்
பலன்: முனைவினையகலப்பெறல் இறைவி: வடிவம்மை

70. பண்டுசெய்த வல்வினை பற்றறக் கெடும்வகை
உண்டுஉமக்கு உரைப்பன்நான் ஒல்லைநீர் எழுமினோ
மண்டுகங்கை செஞ்சடைவைத்து மாதோர் பாகமாக
கொண்டுகந்த மார்பினான கோடிகாவு சேர்மினே!

நீங்கள் முற்காலத்தில் செய்த கொடுவினைகள் முற்றும் தொடர்பின்றி நீங்க வேண்டுமாயின் நீங்கள் விரைந்து எழுங்கள். பெருகி வளரும் கங்கை கொண்ட சடையினன் உமையம்மையை இடப்பாகம் கொண்ட திருமார்பினன் வாழும் கோடிக்கா சேர்ந்து அவனை பணியுங்கள்.

தலம்: திருந்துதேவன்குடி இறைவன்: தேவதேவேசுவரர்
பலன்: வீடுபேறுபெறல் இறைவி: அருமருந்தம்மை

71. மானம் ஆக்குவன மாசுநீக்குவன
வானை உள்கச் செலும்வழி காட்டுவன
தேனும் வண்டும் இசைப்பாடும் தேவன்குடி
ஆனஞ்சாடும் முடியடிகள் வேடங்களே.

தேனின் சுவை உண்ணும் வண்டுகள் இசைபாடுகின்ற திருந்து தேவன்குடியில் வாழும் பசுவின் ஐந்து கவ்வியத்தால் அபிஷேகம் செய்யப்படுபவனும் ஆன இறைவன் திருமுடியும் அடியும் உங்களது குற்றங்களை நீக்கி பெருமிதம் உண்டாக்கி வானுலகம் எனும் வீடுபேற்றுக்கு வழி காட்டுவதும் ஆகும்.

தலம்: திருஇன்னம்பர் இறைவன்: தான்தோன்றியீசர் எழுத்தறிநாதர்
பலன்: அறிவு பெருகுதல் இறைவி: பூங்கொம்புநாயகி

72. இளமதி நுதலியோடு இன்னம்பர் மேவிய
வளர்மதி வளர், சடையீரே!
வளர்மதி வளர்சடையீர் உமை வாழ்த்துவார்
உளமதி மிக உடையீரே.

இளைய பிறைபோன்ற நெற்றி உடைய அம்மையோடு இன்னம் பரில் உள்ள பெருமானை வாழ்த்தித் தொழுபவர்கள் மிகுந்த அறிவு பெருகப் பெறுவர்.

தலம்: திருவைகாவூர் இறைவன்: வில்வனநாதர்
பலன்: முன்வினைநீங்கல் இறைவி: வளைக்கைநாயகி

73. இன்னவுரு இன்னநிறம் என்றறிவலேயரிது நீதிபலவும்
தன்னுருவாம் எனமிகுத்தது அவன்நீதியொடு தானமர்விடம்
முன்னைவினை போய்வகையினால் முழுதுணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்னயிரு போதுமருவித் தொழுது சேரும் வயல் வைகாவிலே.

எம்பெருமான் எத்தகைய உருவம் கொண்டவன் எந்த நிறத்த வன் என மக்களால் உணரப்படுவது அரிது. நல்வினைப் பயன்கள் யாவுமே. அவனது உருவம் எனச் சொல்லுமாறு அமைந்தவன் அவன் இருக்குமிடம் நன்னெறிகளால் முன்னர் செய்த வினைப்பயன்கள் நீங்கிய முனிவர்கள் காலையும் மாலையும் வணங்கித் தொழுகின்ற வயல்கள் சூழ்ந்த வைகாவூரேயாம்.

தலம்: திருவையாறு இறைவன்: ஐயாறப்பர்
பலன்: அச்சம்நீங்கல் இறைவி: அறம் வளர்த்த நாயகி

74. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என் றருள்செய்வன் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே.

புலன்கள் ஐந்தும் மயக்கம்கொள்ள, உணர்வு கலங்க, தன்னினைவு அழிய, தடுமாறும் இறுதிக் காலத்தில் அஞ்சாதே என அருள் வழங்கும் சிவபெருமான் இருக்கும் கோவில் எதுவென்றால், அவ்வாலயத்தில் மத்தளங்கள் முழங்க மாதர்கள் நடனம் செய்யும் ஓசையினை இடியொலியோ என அச்சம் கொண்டு சில குரங்குகள் மரங்களில் ஏறி நின்று விண்மேகங்களைக் காணும் திருவையாறே ஆகும்.

தலம்: திருமழபாடி இறைவன்: வைரத்தூண்நாதர்
பலன்: வறுமை நீங்கப்பெறல் இறைவி: அழகாம்பிகை

75. நீடினார் உலகுக் குயிராய் நின்றான்
ஆடினான் எரி கானிடை மாநடம்
பாடினார் இசை மாமழ பாடியை
நாடினார்க் கில்லை நல்குர வானவே.

அகன்று பரந்த உலகுக்கெல்லாம் உயிர்போல நின்று தீ எரியும் இடுகாட்டில் நடனம் செய்பவனான சிவபெருமானை திருமழ பாடி எனும் தலத்தில் அவன் புகழ்பாடி அவனடியை நாடுபவர்க்கு வறுமை வாராது.

தலம்: திருஆனைக்கா இறைவன்: ஜம்புகேசுவரர்
பலன்: பாவங்கள் நீக்கல் இறைவி: அகிலாண்டநாயகி

76. வெய்யபாவம் கைவிட வேண்டுவீர்கள் ஆண்டசீர்
மைகொள் கண்டன் வெய்யதீ மாலையோடு காதலான்
கொய்ய விண்ட நாள்மலர்க் கொன்றை துன்றுசென்னிஎம்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே.

(மாந்தர்களே) உங்களது கொடிய பாவங்கள் நீங்க வேண்டு மென எண்ணினால் உலகம் முழுவதும் ஆள்கின்றவனும் நீல நிறமான கழுத்துடையவனும், எரியும் தீயினைக் கையிலேந்துப வனும் அன்று மலர்ந்த கொன்றை சூடிய முடியுடையவனும் ஆன

சிவபெருமானை திருவானைக்கா எனும் தலத்தினை அடைந்து வாழ்த்திப் பணியுங்கள்.

தலம்: திருநெய்த்தானம் இறைவன்: நெய்யாடியப்பர்
பலன்: மனவஞ்சகம் அகலல் இறைவி: இளமங்கையம்மை

77. நுகராரமொ டேலம்மணி செம்பொன் னுரையுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப் பணிந்தேத்தும்
நிகரான் மணலிடுதண்கரை நிகழ்வாய் நெய்த்தான
நகரான் அடியேத்த நமை நடலை அடையாவே.

மணம் மிக்க சந்தனத்தையும் ஏலம், முத்து, செம்பொன் ஆகியவற்றை வாரிக்கு கொண்டு வரும் காவிரியாறு பணிந்து வணங்கும். காவிரியாற்று மணல்கரையில் அமைந்த திருநெய்த் தான நகரில் எவரும் நிகரில்லாத சிவனை வழிபட்டால் நம் நெஞ்சில் வஞ்சக எண்ணங்கள் வாராது.

சுந்தரர்

தலம்: திருமழபாடி இறைவன்: வைரத்தூண்நாதர்
பலன்: அருள்பெருகல் இறைவி: அழகாம்பிகை

78. பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக் கிசைத்து
மின்னர் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே! மாமணியே மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே.

பொன்னிறமான திருமேனி உடையவனே இடையில் புலித் தோலை ஆடையாக அணிந்து ஒளிர்கின்ற செஞ்சடையில் கொன்றை மலர் சூடியவனே! எனது அரசனே! மணிபோல் ஒளிர்ப வனே, மழபாடியுள் அமர்ந்த மாணிக்கம் போன்றவனே என் தாய் போன்றவனே உன்னைவிட்டு வேறு யாரை நான் நினைப்பேன்!

தலம்: திருவாழ்கொளிபுத்தூர் இறைவன்: மாணிக்கவண்ணன்
பலன்: தடுமாற்றம் நீங்கல் இறைவி: அண்டமர்பூங்குழலி

79. வெந்தநீறு மெய் பூசவல்லானை வேதமால் விடை யேற வல்லானை
அந்தம்ஆதி அறிதற்கு அறியானை ஆறுஅலைத்த சடையானை அம்மானை
சிந்தையென்தடு மாற்று அறுப்பானை தேவதேவனை என்சொல் முனியாதே
வந்தென் உள்ளம்புகும் வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்துஎன் நினைக்கேனே.

வெண்மையான திருநீறு பூசியவனை, திருமாலாகிய காளை வாகனத்தை ஏறுபவனை, முதலும் முடிவும் உணர முடியாத வனை, முடியில் கங்கை யாற்றினை உடையவனை, தேவர்கட் கெல்லாம் தேவனை என கவியின் மீது வெறுப்பு கொள்ளாது என் மனத்தே வந்து அமர்ந்தவனை எனது மனத் தடுமாற்றங்களை நீக்கியவனை, திருவாழ் கொளிப்புத்தூரில் உள்ள மாணிக்கமான இறைவனை மறந்து வேறு எதை நான் நினைப்பேன்.

திருநாவுக்கரசர்

தலம்: திருச்சோற்றுத்துறை	இறைவன்: தொலையால்செல்வர்
பலன்: வினைகள் தீர்க்கப்பெறல்	இறைவி: ஒப்பிலாஅம்மை

80. அளக்கும் நெறியினன் அன்பர்கள் தம்மனத் தாய்ந்து கொள்வான்
விளக்கும் அடியவர் மேல்வினை தீர்த்திடும் விண்ணவர் கோன்
துளக்கும் குழையணி சோற்றுத்துறை உறைவார் சடைமேல்
திளைக்கும் மதியன்றோ எம்பிரானுக்கு அழகியதே!

தம்மனத்து திறனால் எப்பொருளையும் அடியவர்கள் உள்ளப் பாங்கினையும் அறியும் ஆற்றல் கொண்ட சோற்றுத் துறை இறைவன் அவர்களின் வினைகள் யாவையும் தீர்ப்பார். அவர் காதில் உள்ள தோடும் முடியில் உள்ள நிலவும் எவ்வளவு அழகாய் உள்ளது.

தலம்: திருக்கருகாவூர்	இறைவன்: முல்லைவனநாதர்
பலன்: கருவும் காக்கப்பெறல்	இறைவி: கருக்காத்த அம்பிகை

81. குருகாம் வயிரமாம் கூறும்நாளாம் கொள்ளும் கிழமையாம் கோளே தானாம்
பருகா அமுதமாம் பாலில் நெய்யாம் பழத்தின் இரதமாம் பாட்டில் பண்ணாம்
ஒருகால் உமையோர் பாகனுமாம் உள்நிறை நாவிற்கு உரையாடியாம்
கருவாய் உலகுக்கு முன்னே தோன்றும் கண்ணாம் கருகாவூர் எந்தை தானே.

திருக்கருகாவூரில் உள்ள எம்தந்தையான சிவன் வெண்ணிறத் தவன் வைரம்போல் திண்மை உடையவன் நாட்களாய் வாரமாய், கோள்களாய் விளங்குபவன் இதுவரை பருகியிராத அமிர்தம் போன்றவன் பாலுக்குள் நெய்யாய், பழத்துக்குள் சாறாய், பாட்டுக்குள் இசையாய் பொலிபவன். உமையொருபாகன், கருவைக் காப்பவன், (இவ்வூர் அம்பிகையை கருக்காத்த அம்மை என அழைப்பர். அம்பாளின் தன்மையை இறைவனின் செயலாக நாவுக்கரசர் பாடுகிறார்.)

தலம்: திருநல்லூர் இறைவன்: கல்யாணசுந்தரேசுவரர்
பலன்: தீவினை நீங்கப்பெறல் இறைவி: கல்யாணசுந்தரி

82. நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு கவிற்று உரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர் வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்றி
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நயந்த வாறு.

நல்லூர் எம்பெருமான் தம்மையே நினைந்து உருகிக் கரையும் அடியவர்களை சோதிப்பதற்காக அவர்களை வருத்துவார். ஆனாலும் அவர்களது தீயவினைகளையெல்லாம் நீக்கி அருள்வார். சினந்து வந்த யானையின் தோலை உரித்து போர்வையாய் போர்த்துக் கொள்வார். பிறைநிலவைச் சடையில் சூடிக் கொள்வார், வானவர்கள் கொண்டாடி அவரது திருவடியில் சூட்டிய பல மலர்களில் பெருகிக் கசியும் தேனால் நனைந்த இவரது பொன்னடியை என் தலைமேல் வைத்துக் கொள்வார். (திருச்சத்தி முற்றம் எனும் தலத்தில் அப்பர் பெருமான் சிவனைத் தொழுது வணங்கி அவரது திருவடி முத்திரையினைத் தமது தலையில் பொறித்தருளுமாறு வேண்ட எம்பெருமான் நாவுக்கரசரை நல்லூர் வருமாறு பணித்தார். அங்கு இப்பாடலை அப்பர் பாட இறைவன் திருவடி, இலச்சினையினைப் பதித்தார் என்பது வரலாறு.)

தலம்: திருக்குறுக்கை வீரட்டம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: யமபயம் தீறல் இறைவி: ஞானாம்பிகை

83. நீற்றின நிறையப் பூசி நித்தலும் நியமம் செய்து
ஆற்றுநீர் பூரித்து ஆட்டு அந்தணாரைச் கொல்வான்
சாற்றும் நாள் அற்றதென்று தருமராசர் காய் வந்த
கூற்றினை குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே.

தினம் வெண்ணீறு பூசி ஆற்று நீர் கொணர்ந்து இறைவன் திருமேனிக்கு முழுக்காட்டி நியமநெறிகளோடு வணங்கிய அந்தணனான மார்க்கண்டேயனின் ஆயுட்காலம் முடிவுற்றதென அவனது உயிர் கவர வந்த யமதர்மனை உதைத்தவர் தான் குறுக்கை வீரட்டேஸ்வரர்.

தலம்: திருப்பாலைத்துறை இறைவன்: பாலைவனநாதர்
பலன்: துக்கம் நீங்கப்பெறல் இறைவி: தவன வெண்ணகையம்மை

84. தொடரும் தொண்டரைத் துக்கம் தொடர்ந்து வந்து
அடரும்போது அரணாய் அருள் செய்பவர்
கடலின் நஞ்சணி கண்டர் கடிபுனல்
படரும் செஞ்சடை பாலைத் துறையரே.

தமது தொண்டர்களின் தொடர்ந்து தாக்கும் துக்கங்களை கடலிடை தோன்றிய நஞ்சினை உண்டவரும், கங்கையாறுடைய சிவந்த திருமுடி உடையவரும் ஆன பாலைத்துறை யீசன் நீக்குவார்.

தலம்: திருச்சத்திமுற்றம் இறைவன்: சிவக்கொழுந்தீசர்
பலன்: ஐம்புலன் அடக்கல் இறைவி: பெரிய நாயகி

85. பொத்தார் குரம்பை புகுந்து ஐவர் நாளும்புகல் அழிப்ப
மத்தார் தயிர்போல மருகும் என்சிந்தை மறுக்கு ஒழிவி
அத்தா அடியேன் அடைக்கலம் கண்டாய் அமரர்கள்தம்
சித்தா திருசத்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

எனது உடலை ஆரவாரத்துடன் துளைத்து ஐம்புலன்கள் நாள்தோறும் வருத்தி அழிப்பதால் மத்தினால் கடையப்படும் தயிரைப் போல் என் மனம் சுழல்வதை நீக்குவிப்பாய்! என் தந்தையே! நான் உன் அடைக்கலம் தேவர்கள் மனம் நிறைக்கும் திருச்சத்தி முற்றத்து சிவக்கொழுந்தீசா!

திருஞானசம்பந்தர்

தலம்: திருச்சிராப்பள்ளி இறைவன்: தாயுமானவன்
பலன்: மகிழ்வு பெருகுதல் இறைவி: மட்டுவார் குழலம்மை

86. நன்றுடையானை தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானை
சென்று அடையாத திருவுடையானை சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிரும்மே.

திருச்சிராப்பள்ளிக் குன்றில் அமர்ந்த உமையம்மையை இடப்பாகம் கொண்ட சிவபெருமானை, அவனருள் கிட்டாமல் யாராலும் சென்று அடைய முடியாத சிவனருளாகிய செல்வம் தருபவனை நன்மையே உருவானவனை தீமையே இல்லாதவனை

மிகுந்த வெண்ணிறம் கொண்ட காளை வாகனனைப் பாடினால் என் உள்ளத்தே மகிழ்ச்சி பெருகும்.

தலம்: திருநல்லூர் இறைவன்: கல்யாண சுந்தரேசுவரர்
பலன்: பாவம் நேராமை இறைவி: கல்யாணசுந்தரி

87. சூடும் இளந்திங்கள் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூருர், இடுபிச்சை
நாடும் நெறியானை நல்லூர் பெருமானை
பாடும் அடியார்கட் கடையா பாவமே.

பிரம்ம கபாலத்தை தாம் உண்பதற்குரிய திருவோடாக ஏந்தி ஊர்கள் தோறும் இடுகின்ற பிச்சையினை நாடுபவனான இளம்பிறை தவழ்கின்ற ஒளிமிக்க செஞ்சடை உடைய நல்லூர் சிவனை பாடிப்பரவும் அன்பர்கட்கு பாவங்கள் வராது.

தலம்: திருப்புள்ளமங்ககை
ஆலந்துறை இறைவன்: ஆலந்துறை நாதர்
பலன்: மழைவளம்பெறல் இறைவி: பாஸ்வனநாயகி

88. மன்னனாவன் உலகுக்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன், பொழில்சூழ் புளமங்கை
என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும்இடம் ஆலந்துறை யதுவே.

இளஞாயிறு போன்ற சென்னிறம் கொண்ட எம்பெருமான் உலகத்துக்கெல்லாம் தலைவன், உயிர்காக்கும் மழையாய் பொழிபவன், மூலமுதலான கடவுள், இசையே வடிவானவன் என் தந்தை போன்றவன் இருக்கும் இடம் சோலைகள் சூழ்ந்த திருப்புள்ளமங்கை யாகும்.

தலம்: திருநெடுங்களம் இறைவன்: நித்யசுந்தரர்
பலன்: இடர் அகலல், எமபயம் நீக்கல் இறைவி: ஒப்பிலா நாயகி

89. நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிர்வவ்வேல் என்றடர்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களைவாய் நெடுங்களம் மேயவனே.

குற்றமற்ற எம்பிரானே! உன்னடிகளையே தினமும் வணங்கிய மார்க்கண்டேயனின் உயிரைக் கவர வந்த யமனை இவன் என்னுடைய அடியவன் அவனது உயிரைக் கவராதே என்று உதைத்தருளிய உனது பொன்னான திருவடிகளில் தூவ மலர் களையும் உனக்கு திருமஞ்சனம் செய்ய நீரையும் சுமந்து வரும் உனது அடியார்களின் இன்னல்களை நீக்கியருள்வாய்.

தலம்: திருச்சோற்றுத்துறை இறைவன்: தொலையாச்செல்வர்
பலன்: துன்பம் நீங்குதல் இறைவி: ஒப்பிலாஅம்மை

90. தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியால் மிக்களம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே.

அரியும் அயனும் வணங்க, அவர்களது துயரங்களை நீக்கி அழல் உருவாய் (திருவண்ணாமலை) நின்று அருள்செய்த பெருமானை திருவிழாக்கள் மலிந்த அழகுமிக்க திருசசோற்றுத்துறையில் சென்று வழிபடுவோம்.

சுந்தரர்

தலம்: திருப்பாச்சிலாச்சிராமம் இறைவன்: மணிகண்டீசர்
பலன்: பிழைகள் நீங்கி அருள்பெறல் இறைவி: பாலசுந்தரரி

91. குழைத்துவந்தோடிக் கூடுதிநெஞ்சே! குற்றேவல் நாள்தொறும் செய்வான்
இழைத்தநாள் கடவார் அன்பிலரேனும் எம்பெருமான் என்றெப்போதும்
அழைத்தவர்கருள் செய்பாலாச்சிரமத்து அடிகள் தாம்யாது சொன்னாலும்
பிழைத்தது பொறுத்து ஒன்று ஈகிலர் இவர் அலாது இல்லையா பிரானார்.

திருப்பாலாக்கிராமத்து இறைவன் தம்மீது அன்பு கொள்ளாத வராய் தம் வாழ்நாள் முழுவதும் இவரது திருநாமம் அன்றி வேறு ஏதும் சொன்னாலும் அவர்களின் பிழைகளைப் பொறுத்து அருள் செய்வார். எனவே நாம் நமது நெஞ்சம் உருகி விரைந்து வந்து நாள்தோறும் இவர்க்கு குற்றேவல் செய்தால் நமக்கு அருளும் தெய்வம் வேறு ஏதும் உள்ளதோ.

சுந்தரர்

தலம்: திருப்புறம்பயம் இறைவன்: புறம்பயநாதர்
பலன்: மும்மலங்கள் அழியப் பெறல் சாட்சிநாதர்
இறைவி: கரும்படுசொல்லி

92. மலமுமலாம் அறும் இம்மையே மறுமைக்கும் வல்வினை சார்கிலா
சலமெலாம் ஒழி நெஞ்சமே யெங்கள் சங்கரன் வந்து தங்குமூர்
சலமெலாம்கடல் மண்டுகாவிரிநங்கை ஆடிய கங்கைநீர்
புலமெலாம் மண்டிப் பொன்விளைவிக்கும் புறம்பயம் தொழப்போதுமே.

காவிரி நீர் மரக்கலன்கள் உலவும் கடலில் கலக்கும் திருப்புறம் புயத்து யீசனைத் தொழுதால் நமது மும்மலங்களும் இப்பிறப்பி லேயே அறுந்து போம் நமது மறுமைக்கு வினைகள் சேராது.

திருநாவுக்கரசர்

தலம்: திருவலஞ்சுழி இறைவன்: கபர்தீசர்
பலன்: பாவங்கள் நீங்கல் இறைவி: வண்டுவாழ்குழலியம்மை

93. ஓதமார் கடலின் விடம் உண்டவன்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாதம்ஏத்தப் பறையும் நம் பாவமே.

ஆரவாரமிக்க கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவனும், பூதப்படைத்தலைவனும், கயிலை மலையில் பார்வதியை தன் இடப்பாகமாகக் கொண்டவனுமான வலஞ்சுழியில் உள்ள சிவபெருமானின் திருவடிகளை வணங்கினால் நமது பாவங்கள் அழியும். (பறையும்=அழியும்)

தலம்: திருக்குடமூக்கு இறைவன்: கும்பேசுவரர்
பலன்: பிறவிக்கடல்கடத்தல் இறைவி: மங்களநாயகி

94. துறவி நெஞ்சினர் ஆகிய தொண்டர்கள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய் பார்த்தன்மேல் கணைதொட்டஎம்
குறவனார் உறையும் குடமூக்கிலே.

பற்றுக்களை நீக்கித் துறவறம் பூண்ட இறையடியார்களே! நீங்கள் பிறவாமை வேண்டினால் பித்தனானவரும் வேட

உருக்கொண்டு அர்ச்சுனனோடு போரிட்டவரும் குடமுக்கு எனும் கும்பகோணத்தில் உறையும் எம்பெருமானை வேண்டித் துதியுங்கள்.

தலம்: திருநாகேச்சுவரம்
பலன்: இறைவனைத் துணைபெறல்
இறைவன்: நாகநாதேஸ்வரர் சண்பகதாரண்யர்
இறைவி: குன்றமுலைநாயகி

95. கற்றுணை வில்லது ஆகக் கடிஅரண் செற்றார் போலும்
பொற்றுணைப் பாதர்போலும் புலியதள் உடையார் போலும்
சொற்றுணை மாலைகொண்டு தொழுதெழு வார்கட்கெல்லாம்
நற்றுணை ஆவர் போலும் நாகேச்சுவரனாரே!

மேரு மலையை வில்லாகக் கொண்டு திரிபுரமதில்களை அழித்தவர் பொன் போன்ற இருதிருவடிகளை உடையவர் புலித் தோலை உடையாகக் கொண்டவர், திருநாகேச்சுரம் அமர்ந்த இறைவனார் அவரை நல்லதமிழ்ச் சொற்களால் பாடி வணங்கு பவர்கட்கெல்லாம் துணைவன் ஆவார்.

தலம்: திருநாகேச்சுரம்
பலன்: இறைவனை இனியனாய் பெறல்
இறைவன்: நாகநாதேஸ்வரர்
இறைவி: குன்றமுலைநாயகி

96. கச்சை அரவர்போலும் கறையணி மிடற்றர் போலும்
பிச்சைகொண்டுண்பர் போலும் பேரருளாளர் போலும்
இச்சையில் மலர்கள்தூவி இரவொடு பகலும்தம்மை
நச்சுவார்க் கினியர்போலும் நாகேச் சுவரனாரே.

பாம்பினை இடையில் அணிந்தவரும் கழுத்தில் விடம் உண்ட தால் கறை உடையவரும் பிச்சை எடுத்து உண்பவரும் பேரருள் செய்பவரும் ஆன நாகேச்சுவரரை விரும்பிய மனத்துடன் மலர்கள் தூவி வழிபாடு செய்பவர்கட்கு என்றும் இனியவராய் அவர் இருப்பார்.

தலம்: திருக்குடந்தை கீழ்க்கோட்டம் இறைவன்: நாகேஸ்வரர்
பலன்: நம்மனத்தே இறைவனைப் பெறல் இறைவி: பெரியநாயகி

97. முடிகொண்ட வளர்மதியும் மூன்றாய்த் தோன்றும்
முளைஞாயி றன்னமலர்க் கண்கள் மூன்றும்
அடிகொண்ட சிலம்பொலியும் அருளார் சோதி
அணிமுறுவல் செவ்வாயும் அழகாய்த் தோன்றும்
துடிகொண்ட இடைமடவாள் பாகம் கொண்டு
சுடர்ச் சோதி கடிசெம்பொன் மலைபோல் இன்னாள்
குடிகொண்டு என்மனத்தே புகுந்தார் போலும்
குடந்தைக் கீழ்க்கோட்டத்தெம் கூத்தனாரே!

திருக்குடந்தை கீழ்க்கோட்டத்தில் உள்ள எம்பெருமானாகிய திருநடனம் உகந்த சிவன் தலையில் தாங்கிய நிலவோடும் இளஞ் சூரியன் போல் ஒளி தவழும் மூன்று கண்களோடும் திருவடிகளில் சிலம்பொலியோடும் மிக்க எழிலுடையதான புன்முறுவல் தவழும் செம்மையான இதழ்களோடும் ஒளிமிக்க பொன்போல் சுடரொளி வீசும் மலைபோல் உடுக்கை போன்ற மெல்லிய இடைகொண்ட பிராட்டியை பாகத்தில் கொண்டு என் மனத்தே புகுந்தார்.

தலம்: திருச்சக்திமுற்றம் இறைவன்: சிவக்கொழுந்தீசர்
பலன்: பிறவிதோறும் அருள்பெறல் இறைவி: பெரியநாயகி

98. வெம்மை நமன்தமர் மிக்குவரவி யிழுப்பதன்முன்
இம்மை உன்தாள் என்றன் நெஞ்சத்து எழுதிவை ஈங்குஇகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பதிங் கார்அறிவார்
செம்மைதரு சக்திமுற்றத்து றையும் சிவக்கொழுந்தே.

திருச்சத்திமுற்றத்தில் இருக்கும் சிவக்கொழுந்தீசரே கொடிய எமதூதர்கள் விரைந்து வந்து எனது உயிரை இழுக்கும் முன்பாகவே இப்பிறவியிலேயே உனது திருவடிகளின் சின்னத்தை எனது உள்ளத்தே பொறிப்பாயாக. அங்ஙனம் செய்யாவிடில் அடுத்தடுத்த பிறவிகளில் உனதருள் எனக்குக் கிட்டும் என்பதை யார் அறிவார்.

சுந்தரர்

தலம்: திருப்பழமண்ணிப்படிக்கறை இறைவன்: நீலகண்டர்
பலன்: வாழ்க்கை செவ்வை அடையப்பெறல் இறைவி: அமிர்தவல்லி

99. ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்டப்பட்ட தூளிகொண்டு
சூடுமிண் தொண்டர்உள்ளீர் உமரோடு எமர்சூழ வந்து
வாடுமிவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச்செய்து
பாடுமின் பக்தர்உள்ளீர் பழமண்ணிப் படிக்கரையே.

அன்புள்ளம் கொண்ட பக்தர்காள்! திருப்பழமண்ணிப் படிக்கரை இறைவன் பற்றி அவனது புகழைப் பற்றிப் பாடி அவரது அடித்துகள் தலைமேல் கொண்டு ஆடி திருத்தமாய் பரவிப் பணிந்தால் எமதூதர்கள் வந்து உயிர் கவருமுன் உங்களது வாழ்வு செவ்வை அடையும்.

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணிநாதர்
பலன்: நோய்நீங்கப் பெறல் இறைவி: ஒப்பில்முலையம்மை

100. மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை
வலியவந்து எனைஆண்டு கொண்டானே!
கண்ணிலேன் உடம்பில் அருநோயால்
கருத்தழிந்து உனக்கே பொறையானேன்
தெண்ணிலா எறிக்கும் சடையானே
தேவனே!திரு ஆவடுதுறையுள்
அண்ணலே எனை அஞ்சலென் றருளாய
ஆரெனக்கு உறவு அமரர்கள் ஏறே!

இம்மண்ணுலகத்து சிற்றின்பங்களில் மயங்கி கருத்தையும் காட்சியையும் இழந்து உடல் நோய்களால் வருந்தி உனக்கே ஒரு சுமை போல ஆன என்னை வலுவில் வந்து ஆட்கொண்டவனான தெளிந்த நிலவு தவழும் சடைமுடியோடு தேவர்கட்கெல்லாம் தலைவனான நீ அஞ்சாதே என்று எனது அச்சத்தையும் அகற்றி அருள்வாயாக.

திருஞானசம்பந்தர்

தலம்: திருநல்லம் இறைவன்: உமாமகேஸ்வரர்
பலன்: வினைகள் தீர்க்கப்பெறல் இறைவி: அங்கோல்வளையம்மை

101. அந்திமதியோடும் அரவச்சடைதாழ
முந்தி அனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித்து எழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி! நமையாள்வான் நல்லம் நகரானே.

மாலைப் பிறைநிலவும் நாகமும் கொண்ட சடையினனாவனும் சுடுகாட்டில் தீயைக் கரத்தில் கொண்டு கூத்தாடும் நந்தியாகியவனும் திரு நல்லத்து இறைவனை மனத்துள் இருத்தி தொழுவார்களின் தீராத வினைகளும் தீர்ந்து போகும். (நந்தி-சிவன்)

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
செம்பொற்றியாகர்
பலன்: பொருள்வளம் கூடல் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

102. இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன,கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லை
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே!

திருப்பாற்கடலில் அமிர்தத்துடன் கலந்து வந்த நஞ்சினை உனது கண்டத்தில் அடக்கிய திருவாவடுதுறை இறைவனே! வாழ்க்கையில் துயர்கண்டபோதும் முதுமையில் நான் தளர்ந்து போகும் போதும் எனது வினைப்பயனாக ஏற்படும் நோய்கள் தொடர்ந்து துன்பம் தரும்போதும் உனது திருவடிகளை வணங்கி எழுகின்ற என்னை நீ ஆட்கொண்ட திறன் இதுதானோ? எனக்கு வேண்டியவற்றைத் தந்து அருள் செய்யாவிட்டால் உனக்கு சிறப்பு உண்டாகுமோ?

தலம்: திருமயிலாடுதுறை இறைவன்: மாயூரநாதர்
பலன்: நோய்கள் நீக்கப்பெறல் இறைவி: அபயாம்பிகை
அஞ்சொல்நாயகி

103. அஞ்சொண் புலனும் அவைசெற்ற
மஞ்சன் மயிலாடு துறையே
நெஞ்சொன்றி நினைந்தெழு வோர்மேல்
துஞ்சும் பிணியாயின தானே.

புலன்களால் ஏற்படும் தீமைகளை அகற்றும் திருவாவடுதுறையீசனை மனம் நிறைத்து வணங்குபவர்களுக்கு நோய்கள் அவரது அருளால் தானே நீங்கும்.

தலம்: திருக்கடவூர் வீரட்டம் இறைவன்: அமிர்தகடேசுவரர்
பலன்: யமபயமே நீக்கப்பெறல் இறைவி: அபிராமி அம்மை

104. எரிதருவார் சடையானும் வெள்ளை எருதேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமாலை புனைந்தேத்தவே
கரிதரு காலனைச் சாடினானும் கடவூர்தனுள்
விரிதரு தொல்புகழ் சாடினானும் வீரட்டானத்து அரன் அல்லனே!

நெருப்பென ஒளிரும் சடைமுடியானும் வெண்ணிற காளை வாகனம் உடையவனும் கரிய நிறம் கொண்ட எமதர்மனை உதைத்தவனும் ஆன பழமையான புகழ் சேர்ந்த கடவூர் வீரட்டானத்து இறைவனை கொன்றை மாலை சாத்தி வழிபட்டால் யமபயம் நீங்கும்.

தலம்: திருச்செம்பொன்பள்ளி இறைவன்: சுவர்ணபுரீஸ்வரர்
பலன்: துயர்நீக்கப்பெறல் இறைவி: மருவார்குழலி

105. மழுவாளேந்தி மாதோர் பாகமாய்
செழுவார் செம்பொன்பள்ளி மேவிய
எழிலார் புரிபுன் சடையெம் மிறைவனைத்
தொழுவார் தம்மேல் துயரம் இல்லையே.

உமையம்மையை ஓர் பாகமாய்க் கொண்டு மிகுந்த அழகுடன் பிணைத்த சிவந்த சடையை உடையவனான வளம்மிக்க செம்பொன் பள்ளி யீசனைத் தொழுது வணங்குபவர்க்கு துயரம் இல்லை.

திருநாவுக்கரசர்

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர் மருதவாணர்
பலன்: பாவம் நீங்கப்பெறல் இறைவி: நன்முலைநாயகி

106. விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள் நான்கும் அங்கம்
பண்ணினார்! பண்ணின்மிக்க பாடலார் பாவம் தீர்க்கும்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினார் எண்ணின்மிக்கார் இடைமரு திடம்கொண்டாரே.

விண்ணுலகில் இருப்பவர் விண்ணுலகின் தலைவர், வேதங்கள் நான்கினை தன் உடலுறுப்பாகவே கொண்டவர். இனிமை சேர்ந்த பண்ணிசைகளால் பாடப்பெறுபவர் காமனை எரித்த கண்ணை உடையவர் நெற்றியில் கண்ணை உடையவர் ஆன ஈசன் பாவங்கள் தீர்ப்பவர் அவர் இருக்கும் இடம் திருவிடைமருதூர்.

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர் மருதவாணர்
பலன்: இன்பம் பெருகுதல் இறைவி: நன்முலைநாயகி

107. கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியர் தன்னடைந்தார்க்கு இடைமருதனே.

திருஇடைமருதூரில் உள்ள மருதவாணர் எனும் நாமம் கொண்டயீசர் பழத்தின் சுவையைவிட கரும்புப் பாகினால் செய்த சர்க்கரைக் கட்டியைவிட, மலர் சூடிய நற்குணத்துப் பெண்டிரை விட மணிமுடி தரித்து அரசாளும் மன்னனைவிட, தன்னைச் சரண் புகுந்தவர்க் இனிமை தருபவர்.

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர் மருதவாணர்
பலன்: இறைவன் உள்ளம் நிறைதல் இறைவி: நன்முலைநாயகி

108. பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும்அயல் எலாம்
இறைவன் எங்கள் பிரான் இடைமருதினில்
உறையும் ஈசனை உள்கும் என் உள்ளமும்.

இசைக்கருவிகளின் ஒலியும், பாடல்களின் ஒலியும் வேதங்களின் ஒலியும் சூழ்ந்த இடை மருதூரில் உள்ள எங்களது தலைவனான ஈசனை நினைத்தாலே என் நெஞ்சம் குளிரும்.

தலம்: திருத்தென் குரங்காடுதுறை இறைவன்: ஆபத்சகாயர்
பலன்: தீவினை நீங்கப் பெறல் இறைவி: பவளக்கொடியம்மை

109. நற்றவம் செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்றநன் மொழியால் அருள் செய்த நல்
கொற்றவன் குரங்காடு துறை தொழப்
பற்றும் தீவினை ஆயின பாறுமே.

அருந்தவம் புரிந்த முனிவர்கள் நால்வருக்கும், தரும நெறிகளை நன்மொழிகளால் உபதேசித்த சிவபிரான் உள்ள குரங்காடுதுறை சென்று வழிபட்டால் நம்மைப் பற்றவரும் தீவினைகள் யாவும் அழிந்து போகும்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருப்பட்டீச்சுரம் இறைவன்: பட்டீஸ்வரநாதர்
பலன்: வினைகள் நீங்கி வீடுபேறு பெறல் இறைவி: பல்வளைநாயகி

110. பாடல்மறை சூடல்மதி, பல்வளையோர் பாகமதில் மூன்றொர் கணையால்
கூடயெரியூட்டி எழில்காட்டி நிழல் கூட்டுபொழில் சூழ் பழசையில்
மாடமழ பாடியுரை பட்டிசரம் மேயகடி கட்டர வினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறிகாட்டி வினைவீடுமவரே.

மறைகள் பாடுபவரும், மதிசூடுபவரும், பலவளையல்களை அணிந்த உமையை பாகமாக உடையவரும், முப்புரங்களையும் ஒரு அம்பினால் எரித்தவரும் பாம்பை இடையில் கச்சாக அணிந்தவரும் ஆன சிவபெருமானே, பழையாறையில் மாடங் களும் சோலைகளும் நிறைந்த மழபாடியில் பட்டீசரம் எனும் திருககோவிலில் அமர்ந்தவர் அவரே நமது வினைகளை நீக்கி வீடுபேற்றைத் தருவார்.

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர்
பலன்: உலகம் பொலிவுறல் இறைவி: நன்முலைநாயகி

111. வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூசமாடி உலகம் பொலிவெய்த
திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே.

கடும்தவம் புரிந்த முனிவர்களும் அமரர்களும் மற்றவர்களும் வந்து தைப்பூசத்தில் காவிரியில் நீராடி சிறந்த முறையில் வேதம் ஓதும் அந்தணர்கள் போற்ற திருவிடைமருதூரில் கோவில் கொண்ட சிவபெருமான் அருளால் உலகம் பொலிவுறும்.

தலம்: திருக்கேதீச்சரம் இறைவன்: கேதீச்சுரர்
பலன்: கடுவினை நீங்கல் இறைவி: கௌரியம்மை

112. விருதுகுன்றமா மேருவில் நாண்அர வா,அனல் எரிஅம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்று உறைபதி யென்னாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சுரம் கைதொழ கடுவினை யடையாவே.

மேருமலையை வில்லாகவும், வாசுகி எனும் பாம்பை நாணாகவும் கொண்டு முப்புரங்களை எரித்த சிவனார் கடற்காற்று வீச மணமிக்க சோலைகள் சூழ்ந்த திருக்கேதீச்சுர இறைவனை வணங்கினால் கொடிய வினைகள் வராது.

தலம்: திருவலஞ்சுழி இறைவன்: கபர்த்தீசர்
பலன்: இடர்கள் தீர்க்கப்பெறல் இறைவி: பெரியநாயகி

113. பூசநீர் பொழியும் புனல்பொன்னியில் பன்மலர்
வாசநீர் குடைவார் இடர்தீர்க்கும் வலஞ்சுழி
தேசநீர் திருநீர்சிறு மான்மறியீர் சொலிர்
ஏசல்வெண் தலையில் பலகொள்வது இலாமையே.

பூசத்திருநாளில் காவிரியாற்றில் நீராடி மணமிக்க மலர்களொடு உம்மை வழிபடும் அடியார்களது இடர்களை நீக்கும் திருவலஞ்சுழி இறைவனே நீர் பாரோர் இகழ்ந்து கூறும்படி வெண்மையான பிரம கபாலத்தில் பிட்சையெடுப்பது உம்மிடம் செல்வம் இல்லாத காரணத்தாலா? சொல்லுங்கள்.

தலம்: திருஆவூர் பசுதியீச்சுரம் இறைவன்: பசுபதியீச்வரர்
பலன்: குற்றம் நீங்கப் பெறல் இறைவி: மங்கள நாயகி

114. குற்றம் அறுத்தார் குணத்தின் உள்ளார் கும்பிடுவார் தமக்கன்பு செய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக் கண்ணர் உறைபதி ஆகும் செறிகொள் மாடம்
சுற்றிய வாசலின் மாதர் விழாச் சொற்கவி பாட நிதானம் நல்கப்
பற்றிய கையினர் வாழும் ஆவூர் பசுபதியீச்சுரம் பாடு நாவே.

திருஆவூர் பசுபதியீச்சுரம் எனும் தலத்தின் இறைவர் நமது குற்றங்களை நீக்குவார். குணங்கள் நிறைந்த பக்தர்களது மனத்தில் உறைவார். அவர் ஒற்றைக் காளை வாகனமுடைய நெற்றிக் கண்ணர். அவர் உறையும் மாடங்களில் வாசலில் திருவிழா சமயத்தில் பெண்கள் கவிபாடுவார்கள். செல்வந்தர்கள் அவர்கட்கு பரிசு வழங்குவார். எனது நாவே அந்த திருஆவூர் பசுபதீச்சுரத்தைப் புகழ்ந்து பாடுவாயாக.

சுந்தரர்

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர்
பலன்: நரகம் இல்லாமை பெறல் இறைவி: நன்முலைநாயகி

115. கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னை
குற்றம் செற்றம் இவை முதலாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்
வேண்டில் ஐம்புலன் என் வசமில்லை
நடுக்கம் உற்றதோர் மூப்பு வந்தெய்த
நமன்தமர் நரகத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைமருது உற்ற எந்தை பிரானே.

திருவிடைமருதூர் பெருமானே! நான் எவருக்கும் பெருமை தரும் செல்வத்தை தர இயலவில்லை. பகைமையை குற்றங்களையும் தவிர்க்கவில்லை. சினமும் ஆசையும் என்னைவிட்டு நீங்கவில்லை. எனது ஐம்புலன்களும் எனக்குக் கட்டுப்படவில்லை. எமதூதர்கள் நான் மூப்பு அடையும் காலத்தில் என்னை நரகத்தில் சேர்க்க முற்பட்டால் அத்துன்பத்தை நீக்கி அருள்வாய்.

தலம்: திருப்பாச்சிலாச்சிரமம் இறைவன்: மாற்றறிவரதர்
பலன்: திருவருள் பெறல் இறைவி: பாலசௌந்தரி

116. அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையும் என்று இருந்தேன்
என்னையும் ஒருவன் உளன் எனக்கருதி
இறைஇறை திருவருள் காட்டாய்
அன்னமாம் பொய்கை சூழ்தரு திருப்
பாச்சிலாச் சிராமத்துறை அடிகள்
பின்னையே அடியார்க் அருள்செய்வதாயின்
இவரலாது இல்லையோ பிரானார்!

நான் அன்னையை நினைக்கவில்லை. தந்தையை நினைக்கவில்லை. அன்னங்கள் தவழும் பொய்கைகள் நிறைந்த திருப்பாச்சிலாச்சிராமத்துள் அருள்புரியும் சிவனாரை மட்டுமே நினைந்து அவர் அருள் மட்டும் போதும் என நினைத்தேன். அவர் காலம் தாழ்த்தியே அருள் செய்வாரானால் அவரை விட்டால் வேறு எத்தெய்வம் அருள்செய்யும்.

திருநாவுக்கரசர்

தலம்: திருநீலக்குடி இறைவன்: நீலகண்டேசுவரர்
பலன்: நினைத்தவை நடக்கப்பெறல் இறைவி: அழகம்மை

117. செய்யமேனியன் தேனொடு பால்தயிர்
நெய்யது ஆடிய நீலக்குடி யரன்
மையலாய் மறவா மனத் தார்க்கெல்லாம்
கையில் ஆமலகக் கனி யொக்குமே.

சிவந்த நிறமுடைய திருமேனி உடையவன் தேன், பால், தயிர், நெய் அபிஷேகங்கள் செய்யப்படுபவன் திருநீலக்குடி சிவபெருமான். அவனை நேசித்து மறவாத மனம் உடையவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பலன் தருவான்.

தலம்: திருநீலக்குடி இறைவன்: நீலகண்டேஸ்வரர்
பலன்: சிவகதி பெறல் இறைவி: அழகம்மை

118. வைத்தமாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்தபோது செறியார் பிரிவதே
நித்தம் நீலக்குடி அரனை நினை
சித்தம் ஆகில் சிவகதி சேர்வரே.

நீங்கள் தேடி வைத்த செல்வங்களும் உங்களது மனைவி மக்களும் நீங்கள் இறக்கும்போது கூட வாரார். ஆனால் நீலக்குடி சிவபெருமான் தினமும் நினைக்கும் சிந்தை உள்ளவர்களானால் உங்கட்கு சிவபதம் கிட்டும்.

தலம்: திருக்கோழம்பம் இறைவன்: கோகிலேசுவரர்
பலன்: பாவங்கள் நீங்கி அருள் பெறல் இறைவி: சௌந்தரநாயகி

119. முன்னை நான்செய்த பாவம் முதலறப்
பின்னை நான் பெரிதும் அருள் பெற்றது
அன்னமார் வயல் கோழம்பத்து உள்ளமர்
பின்னல் வார்சடை யானைப் பிதற்றியே!

நான் முன்னாளில செய்த பாவங்கள் யாவும் நீங்கும்படி செய்து நான் இறையருள் பெற்றது எப்படியெனில் நெற்பயிர்கள் தழைத்த வயல்கள் நிறைந்த கோழம்பத்துள் அமர்ந்த சிவனின் திருநாமத்தைச் செபித்ததினால்தான்.

தலம்: திருநல்லம் இறைவன்: உமாமகேஸ்வரர்
பலன்: வினைப்பகை நீங்கப்பெறல் இறைவி: மங்கள நாயகி

120. அல்லலாக ஐம்பூதங்கள் ஆட்டினும்
வல்லவாறு சிவாயநம வென்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே!

நம்மை நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் எனும் ஐம்பூதங்கள் ஆட்டிப் படைத்தாலும் வல்லமையோடு 'சிவாயநம' என்று திருநல்லத்து சிவபெருமானை வணங்கினால் நம்மை வெல்வதற்கு வந்த வினைப்பகை அழிந்து போகும்.

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர் செம்பொற்றியாகர்
பலன்: பொன்சேரும் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

121. மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிரும் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரார்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறை யினாரே!

அகண்ட இவ்வுலக மாந்தர் அனைவரும் வணங்கிப் போற்றும் திருவாவடுதுறை மாசிலாமணியீசர் தமது படர்ந்த சடையில் கங்கையை தாங்கியவர் அவர் எழிலார்ந்த சோலைகளும் பொழில்களும் அமைந்த சீர்காழி திருஞான சம்பந்தர்க்கு ஆயிரம் பொற்காசுகளை அளிப்பவர் ஆவர்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருநள்ளாறு	இறைவன்: தர்ப்பாரண்யேசுவரர்
பலன்: இறையுணர்வு பெருகப் பெறல்	இறைவி: போகமார்த்த பூண்முலையார்

122. கோவண ஆடையும் நீறுப்பூச்சுங் கொடுமழு ஏந்தலும் செஞ்சடையும்
நாவணப் பாட்டுநள் ளாறுடைய நம்பெருமான் இதுஎன்கொல் சொல்லாய்
பூவண மேனி இளையமாதர் பொன்னும் மணியும் கொழித்தெடுத்து
ஆவண வீதியில் ஆடுங் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்தவாறே.

இடையில் கோவணமும் மேனி முழுதும் திருநீற்றுப் பூச்சும் கொடிய மழுவாயுதத்தை கையிலும் சிவந்த சடையும் கொண்டு அழகு பொலியும் துதிப்பாடல்களால் போற்றப்படுமாறும் உள்ள நள்ளாறுறை சிவபெருமானே நீங்கள் பூப்போன்ற வண்ணம் கொண்ட இளைய பெண்கள் பொன்னையும் முததுக்களையும் கொண்டு கடை வீதிகளில் உலவும்படியாக கூடல் நகர் எனப் பெயர் பெற்ற ஆலவாய்ப்பதியினில் கோவில் கொண்டது எவ்வாறு என எனக்குச் சொல்வீர்களாக.

தலம்: திருக்கோட்டாறு	இறைவன்: ஐராவதேசுவரர்
பலன்: பழியும் பற்றும் நீங்கப்பெறல்	இறைவி: வண்டார்பூங்குழலி

123. விரவிநாளும் விழாவிடைப்பொலி தொண்டர்வந்து வியந்துபண் செய
குரவம் ஆரும்நீழல் பொழில்மல்கும் கோட்டாற்றில்
அரவ நீள்சடையானை யுள்கிநின்று ஆதரித்து அன்பு செய்தடி
பரவுமாறு வல்லார் பழிபற்றறுப் பாரே.

விழாக்கள் பொலிந்து தோன்றும் நாளெல்லாம் அடியவர்கள் வந்து பாடிப் பணியும் குரவமரமும், சந்தன மரமும் தரும் நிழல் பொலிந்த சோலைகளும் நிறைந்த கோட்டாற்றுத் தலத்தில் உள்கை நாகம் பொலிந்த சடையுடைய எம்பெருமானை நினைந்து

மனம் உருகி வணங்குபவர் எல்லாம் தம் குற்ற பழிகளையும் பற்றுகளையும் நீக்குவார்கள்.

தலம்: திருஅம்பர்மாகாளம் இறைவன்: காளகண்டேஸ்வரர்
பலன்: பிணிகள் இல்லாமை இறைவி: பச்சைநாயகி

124. எங்கும்ஏதுமோர் பிணியிலர் கேடிலர் இழைவளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலும் தாமமும் அண்ணியும் தல்மகிழ்ந்தவர் மேய
மங்குல் தோய்பொழில் அரிகிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கங்குலும் பகலும் தொழும் அடியவர் காதன்மை உடையாரே.

அரிகிலாற்றின் வடகரையில் அமைந்த திருஅம்பர் மாகாளம் எனும்சோலைகள் சூழ்ந்த தலத்தின் இறைவனை அதிகாலையிலும் பகலிலும் வணங்கிப் போற்றும் அடியவர்களுக்கு எப்பிணியும் எக்கேடும் வராமல் மிகுந்த அன்புடையவராய் இருப்பார்கள்.

தலம்: திருத்தருமபுரம் இறைவன்: யாழ்முரிநாதர்
பலன்: பேறுகள் செழிக்கப்பெறல் இறைவி: மதுரமின்னம்மை

125. மாதர் மடப்பிடியும், மடவன்னமும் அன்னதோர்
நடையுடை மலைமகள் துணையென மகிழ்வார்
பூதஇனப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைநெடு முடியதோர் புனைவர்
வேதமோடேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்டிறை
இரைநுரை கரைபொருது விம்மிநின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில்பொழில் குயில்பயில் தருமபுரம் பதியே.

அன்னம், பெண்யானை ஆகியனவற்றின் நடைபோல் நடக்கும் உமாதேவியை துணைவியாகப் பெற்று மகிழ்பவரும், பூதகணங்களின் இசைக்கேற்ப நடனம் செய்பவரும் கங்கையைச் சடையில் வைத்தவரும், வேதங்களை பாடுபவருமான சிவபெருமான் உறையும் பதியான தருமபுரத்தில் கடலலைகள் ஒலிக்கும்! புன்னை மரங்களில் வண்டுகளும் சோலைகளில் குயில்களும் இசை பொழியும்.

தலம்: திருவேட்டக்குடி இறைவன்: திருமேனியழகர்
பலன்: பக்தியால் அருள்பெறல் இறைவி: சாந்தநாயகி

126. தோத்திரமாம் மணலிலிங்கம் தொடங்கிய ஆனிரையின்பால்
பாத்திரமாய் ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க்கு அறம்புரிதல் அன்றுரைக்க
தீர்த்தம்மல்கு சடையாரெம் திருவேட்டக்குடியாரே.

மணலில் லிங்கம் அமைத்து பசுவின் பால் கொண்டு அதற்கு அபிடேகம் செய்து வழிபட்டதனால் அதை ஏற்று, சண்டேசுரருக்கு அருள்புரிந்த சோதிவடிவான யீசன்தான் சனகாதி முனிவர் நால்வருக்கு தெட்சிணாமூர்த்தியாக மறைப்பொருள் உரைத்தவராய் புனிதமான கங்கை நீரைச் சடையில் கொண்டு திருவேட்டக்குடியில் அருள் செய்கிறார்.

சுந்தரர்

தலம்: திருநனிப்பள்ளி இறைவன்: நற்றுணையப்பர்
பலன்: வினைகள்தேய்ந்து அழியப்பெறல் இறைவி: மலையான்மடந்தை

127. உறவிலி உன்னமிலி உணரார்புரம் மூன்றெரிய
செறுவிலிதன் நினைவார் வினையாயின தேய்ந்தழிய
அறமிலகும் அருளான் மருளார்பொழில் வண்டுஅறையும்
நறவிரி கொன்றையினான் நண்ணும்ஊர் நனிபள்ளியதே.

தனக்கென சுற்றம் இல்லாதவராய் குறைபாடுகள் இல்லாதவராக தம்மை உணராத முப்புரத்து அரக்கரை போரில் வெல்லும் வில்லால் எரித்தவரான அருளாளர் நெறிகள் செழிக்கும் வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த திருநனிபள்ளியில் தேன் சிதறும் கொன்றை மாலையினை அணிந்து காட்சி தருகிறார். அவர்தாம் தம்மை நினைத்து பணிபவரின் வினைகளை அழிக்கிறார்.

தலம்: திருக்கற்குடி இறைவன்: உச்சிநாதர்
பலன்: அச்சம் நீங்கப்பெறல் இறைவி: அஞ்சனாட்சி

128. நிலனே நீர்வளிதீ நெடுவானகம் ஆகிநின்ற
புலனே புண்டரிகத்து அயன் மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருகற்குடி மன்னிநின்ற
அனல்சேர் கையினனே அடியேனையும் அஞ்சல் என்னே.

நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் எனும் பஞ்ச பூத வடிவாகி, தாமரையில் உள்ள பிரமனும் திருமாலும் வணங்கும் அனல் வடிவானவனே கற்பகமரம் போல் கேட்டதைத் தருபவனே, திருக்கற்குடியில் அருள்செய்கின்ற தீயேந்திய கையினை உடைய சிவ பெருமானே அடியேனது அச்சத்தையும் நீக்குவாயாக.

தலம்: திருவிடைமருதூர் இறைவன்: மகாலிங்கேஸ்வரர்
பலன்: வாழும் வகை பெறல் இறைவி: நன்முலைநாயகி

129. புல்நுனைப்பனி வெங்கதிர் கண்டால்போலும் வாழ்க்கை பொருள் இலைநாளும்
என்னெனக்கினி இன்றைக்குநாளை என்றுயிருந்திர் உற்றனன் எந்தாய்
முன்னமேஉன் சேவடிசேரா மூர்க்கனாகிக் கழிந்தன காலம்
இன்னமென்றனக்கு உய்வகை அருளாய் இடைமருதுறை எந்தை பிரானே.

சூரியனைக் கண்டதும் மறையும் புல்நுனியில் உள்ள பனித்துளி போன்ற வாழ்வில் அர்த்தமே இல்லை. இன்று நாளை என என்று வீணே பொழுது கழிய, முன்னரே உன்னை நினைந்து உன் திரு வடியில் சேராத மூர்க்கனாக என் வாழ்நாள் கழிந்தது. இனிமேல் என்ன உள்ளது என வருந்தும் எனக்கு வாழும் வகையினை அருள்வாய் திருவிடைமருதூர் என் தந்தை போன்றவனே.

தலம்: திருவீழிமிழலை இறைவன்: வீழிஅழகர்
பலன்: அருள்பெறுதல் இறைவி: சுந்தரகுசாம்பிகை

130. எறிந்தகண்டிக்கு இடந்த கண்ணப்பர் ஏத்து பக்தர்கட்கு ஏற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன்துளிவீசும் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும் நேசத்தால் உமைப்பூசிக்கும் இடம்
அறிந்து வீழிகொண்டீர் அடியேற்கும் ருகுளுதிரே.

உம்மீது கொண்ட பக்தியினால் தந்தையினை வெட்டிய சண்டீசருக்கும் தமது கண்ணை இடந்து உமக்கு அப்பிய கண்ணப்பருக்கும் எறிபத்த நாயனாருக்கு உயர்ந்த சிவபதம் அளித்தவரான மறையோர்கள் நாள்தோறும் உம்மீது அன்பு கொண்டு வழிபாடுகள் செய்யும் திருவீழிமிழலையில் உள்ள வீழிஅழகரே எனக்கும் அத்தகைய அருளினைச் செய்வீராக.

திருநாவுக்கரசர்

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: நோய்நீக்கப்பெறல் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

131. உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை ஆவர் போலும்
செற்றவர் புரங்கள் மூன்றும் தீயெழச் செறுவர் போலும்
கற்றவர் பரவியேத்திக் கலந்து உலந்து அலந்து பாடும்
அற்றவர்க்கு அன்பர்போலும் ஆவடுதுறை யினாரே.

திருவாவடுதுறையில் மூன்று புரங்களையும் எரித்து வென்றவரும் நன்கு கற்றுணர்ந்தவர்கள் வணங்கிப் போற்றும்படி கோவில் கொண்டவரும் ஆன ஈசன் மிகுந்த துன்பத்தால் வருந்தி ஏதுமற்றவர்கட்கு அன்பராய் நலம் தருவார் உற்ற நோய்களைத் தீர்ப்பார் உற்ற துணைவனாய் இருப்பார்.

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: முக்திபெறல் இறைவி: ஒப்பிலா முலையம்மை

132. பேணியநற் பிறைதவழ் செஞ்சடையினானை
பித்தராம் அடியார்க்கு முக்தி காட்டும்
ஏணியை இடர்க்டலுள் சுழிக்கப்பட்டு இங்கு
இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூயசோதிச்
சுலாவெண் குழையானை சுடர்பொற்காசின்
ஆணியை ஆவடுதண்துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.

பிறை நிலவு தவழும் செஞ்சடையானாய், அவனையே நினைந்து பித்தாகி அடியவர்களுக்கு முகதி வழியினைக் காட்டும் ஏணி போன்றவனாய், துன்பக் கடலின் சுழிகளில் அகப்பட்டு தவிப்பவரை அக்கரை செல்ல உதவும் படகு போன்றவனாய் மின்னும் ஒளி உடைய வெண்சங்கு தோடுதனை அணிந்தவனாய் மாசற்ற பொன்காசுகளின் மாற்றினை அறியத்தக்க ஆணி போன்றவனாய் திருவாவடுதுறையில் விளங்கும் சிவனின் அடிகளை அடைந்த பின்புதான் அடியேன் நல்வாழ்வு பெற்றேன்.

தலம்: திருமயிலாடுதுறை இறைவன்: மயூரநாதர்
பலன்: தேவரின் மேல்நிலை பெறல் இறைவி: அபயாம்பிகை

133. அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக்கும் கருத்தொன் றிலோம்
வண்டுசேர் மயிலாடுதுறை அரன்
தொண்டர் பாதங்கள் ஆடித் துதையிலே.

மயிலாடுதுறையில் வாழ்வுதரும் சிவனாரின் தொண்டர்களின் திருவடிகளைத் தொழும்போது தேவலோகத்தில் இருப்பது போன்று தேவர்களின் வாழ்வைப் பெறுவதைவிட மேலான நிலையினை அடைவோம்.

தலம்: திருநனிபள்ளி இறைவன்: நற்றுணையப்பர்
பலன்: இறைவன் துணை பெறல் இறைவி: மலையான் மடந்தை

134. முன்துணை ஆயினானை மூவர்க்கு முதல்வன் தன்னை
சொற்றுணை ஆயினானை சோதியை ஆதரித்து
உற்றுணர்ந்து உருகிஊறி உள்கசிவு உடையவர்க்கு
நற்றுணையாவர் போலும் நனிபள்ளி அடிகளாரே.

திருநனிபள்ளியில் உள்ள ஆண்டவனை அடைந்து உள்ளம் உருகி அந்தச் சிவானுபவத்தில் ஊறி மனம் கசிந்து வழிபடுபவர்க்கு அந்த முத்தேவர்கட்கு முதல்வனாவன் முன்னமே நமக்கு துணையாக இருந்து இப்போதும் நல்ல துணையாக நின்று அருள் செய்வான்.

தலம்: திருத்துருத்தி இறைவன்: கற்றளிமாதேவர்
பலன்: நரகம் நீக்கம் பெறல் இறைவி: அரும்பன்னவன முலையம்மை

135. அள்ளலைக் கடக்கவேண்டின் அரனையே நினைமின் நீங்கள்
பொள்ளல் இக்காயம்தன்னுள் புண்டரீகத்து இருந்த
வள்ளலை வானவர்க்கும் காண்பரி தாகி நின்ற
துள்ளலை துருத்தியவன் தொண்டனேன் கண்டவாறே.

நரகத்துக்குச் செல்லாமல் காக்க வேண்டுமாயின் வானவர்கட்கு காணமுடியாத திருநடனம் செய்யும் திருத்துருத்தியில் உள்ள இறைவனை வள்ளல் போல அருள் வழங்கும் எம்பெருமானை, வெறும் கூடான உடம்பின் உள்மனத்தே, நான் வணங்கித் துதித்துக் கண்டதுபோல நினைந்து வழிபடுங்கள்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருமீயச்சூர் இறைவன்: முயற்சி நாதேஸ்வரர்
பலன்: வீடுபேறடைதல் இறைவி: சுந்தர நாயகி

136. பொன்னேர் கொன்றைமலை புரளும் அகலத்தான்
மின்னேர் கடைகளுடையான் மீயச் சூரானை
தன்னேர் பிறரில்லானை தலையால் வணங்குவார்
அந்நே ரிமையோர்உலகம் எய்தல் அரிதன்றே.

பொன் போன்ற கொன்ற மலர்மாலைகள் தவழும் மார்பினனும் மின்னல் போல் ஒளிரும் சடைகள் உடையவனும், தன்னை ஒப்பவர்கள் இல்லாதவனும் ஆன திருமீயச்சூர் இறைவனை தொழுது துதிப்பவர்கட்கு வீடுபேறு பெறுதல் அரிய செயல் இல்லை.

தலம்: திருப்பேணுபெருந்துறை இறைவன்: சிவாநந்தேசுவரர்
பலன்: பாவங்கள் நீக்கப் பெறல் இறைவி: மங்களநாயகி

137. மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கி பல்கணம் நின்று பணியச்
சாவமா தாகிய மால்வரை கொண்டு தண்மதிள் மூன்றும்எரித்த
தேவர்கள் தேவன் எம்பெருமானார் தீதில் பெருந்துறையாரே.

மும்மூர்த்திகளின் முதல்வராய், மும்மூர்த்திகள் வடிவமாய் அம்மை அப்பன் ஆகிய இருவரும் சேர்ந்த வடிவமாய், மலையாகிய வில் கொண்டு முப்புரங்களை எரித்த தேவர்களுக் கெல்லாம் தேவன் திருப்பேணு பெருந்துறையில், நமது பாவங்கள் தீர்த்து நல்வினைப் பயன்களை அருள்கிறார்.

தலம்: திருவீழிமிழலை இறைவன்: வீழிஅழகேஸ்வரர்
பலன்: தீவினைகள் தேயப் பெறல் இறைவி: அழகிய முலையம்மை (சுந்தரகுசாம்பிகை)

138. மருள்செய்து இருவர் மயலாக
அருள் செய்தவன், ஆரழலாகி
வெருள் செய்தவன் வீழிமிழலை
தெருள் செய்தவர் தீவினை தேய்வே.

அயனுக்கும் மாலுக்கும் காண முடியாமல் தீ வடிவாகி நின்ற தோற்றத்தில் அருள் செய்த வீழிமிழலை இறைவனை தெளிந்த சிந்தையுடன் வணங்குபவர்க்கு தீவினைகள் தேய்ந்து அழியும்.

தலம்: திருவீழிமிழலை இறைவன்: வீழிஅழகேஸ்வரர்

பலன்: வேண்டுவன பெறல் இறைவி: அழகிய முலையம்மை

தீயவை அழிதல்

139. கருப்பமிகும் உடலடர்த்துக் காலூன்றி கைமறித்து கயிலை யென்னும்
பொருப்பெடுக்க லுறும் அரக்கன் பொன்முடிதோள் நெரித்த விரல் புனிதர் கோவில்
தருப்பமிகு சலந்தரன்தன் உடல்தடிந்த சக்கரத்தை வேண்டி யீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்தவிழி விமானம் சேர் மிழலையாமே.

தான் வலியன் எனும் கர்வத்தால் தன்னுடலை வருத்தி கால்களையூன்றி கைகளால் கயிலைமலையினை எடுக்க முயன்ற இராவணனது விரல்களை நெரித்து முறித்த புனிதரான சிவபெருமான் உறையும் கோவில் எது என்றால் சலந்தரன் எனும் அசுரனின் உயிர் கவர்ந்ததால் இழந்த சக்ராயுதத்தை மீண்டும் பெறுவதற்காக மகாவிஷ்ணு விருப்பமொடு வழிபட்ட திருவீழிமிழலைதான்.

தலம்: திருப்பாம்புரம் இறைவன்: பாம்புரேசுவரர்

பலன்: வினைகள் தீரப் பெறல் இறைவி: வண்டார்பூங்குழலி

140. கடிபடு கமலத் தயனொடு மாலும் காதலோ டடிமுடி தேட
செடிபடு வினைகள் தீர்த்தருள் செய்த தீவணர் எம்முடைச் செல்வர்
முடியுடை யமரர் முனிகணத்தவர்கள் முறைமுறை அடிபணிந் தேத்த
படியதுவாக பாவையும் தாமும் பாம்புர நன்னக ராரே.

மணமிக்க தாமரையில் உள்ள பிரமனும் திருமாலும் அன்பு பொருந்த சிவபெருமானது திருவடியையும் முடியையும் தேடிக் காணாத போது அருள் செய்த எம்மான் அடியவர்களின் துன்பம் தரும் வினைகளைத் தீர்த்தருள்வார். தேவர்களும் முனி குழாத்தவரும் முறையோடு தம்மை வணங்க அவர் அம்பிகையுடன் திருப்பாம்புரத்தை தமது பதியாகக் கொண்டு அங்கு அமர்வார்.

சுந்தரர்

தலம்: திருநள்ளாறு
இறைவன்: தர்ப்பாரண்யேசுவரர்
பலன்: வேண்டுவன கிடைக்கப் பெறல்
இறைவி: பேகமார்த்த பூண்முலையாள்

141. கற்பகத்தினைக் கனகமால் வரையை
காமகோபனைக் கண்ணுதலானை
சொற்பதப் பொருள் இருள் அறுத்தருளும்
தூய சோதியை வெண்ணை நல்லூரில்
அற்புதப் பழஆவணம் காட்டி
அடியனான எனை ஆளது கொண்ட
நற்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே.

கேட்டவர்க்கு கேட்டதைத் தரும் கற்பக மரம் போன்றவனை, வெண்ணிற மலைபோல் மேனியானை, மன்மதனை எரித்தவனை, நெற்றியில் ஓர் கண்ணை உடையவனை, அறியமை இருளை அழிப்பவனை, அருமையான பழமை மிக்க ஆவணத்தைக் காட்டி வெண்ணை நல்லூரில் என்னை ஆட்கொண்டவனை நற்கதி தரும் திருவடி உடையவனை திருநள்ளாறு யீசனை நாயினும் கீழ்ப்பட்டவனான நான் மறந்தால் வேறு எதை என்னால் நினைக்க முடியும்.

தலம்: திருக்கலயநல்லூர்
இறைவன்: அமிர்தகலா நாதர்
பலன்: வேண்டுவன பெறல்
இறைவி: அமிர்தவல்லி

142. குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவம்கண்டு
குறிப்பினொடும் சென்றவள்தன் குணத்தினை நன்கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டு அருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலான் மேவும் ஊர் வினவில்
அரும்புஅருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடனமிடும் அணிபொழில் சூழ்அயலின்
கரும்பருகே இருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகம்மலரும் கலயநல்லூர் காணே.

குரும்பைபோன்ற தனம் உடைய, மலர்கள் சூடிய, குழல் உடைய அன்னை பார்வதி செய்த அரிய தவத்தைக் கண்டு மகிழ்ந்து அவளருகே சென்று அவளது மனக்குறிப்பினை அறிந்து அவன் கேட்ட வரத்தைத் தந்தருளி அவளை மணம் செய்து

கொண்ட சிவபெருமானது ஊர் எதுவெனக் கேட்டால் அரும்பாய் உள்ள மலர்களை நாடி ஆண் வண்டுகள் நெருங்க அறுகால் வண்டுகள் இசைபாட அழகான மயில்கள் நடமாட, கரும்பு வயல்கள் அருகே நெல்வயல்களில் கருங்குவளையும் தாமரை மலரும் உள்ள சூழலில் அமைந்த திருக்கலய நல்லூர்தானே.

நாவுக்கரசர்

தலம்: திருவீழிமிழலை	இறைவன்: வீழியழகர்
பலன்: புலனடக்கம் பெறல்	இறைவி: சுந்திரகுசாம்பிகை அழகுமுலையம்மை

143. பஞ்சடுத்த மென்விரலாள் பங்கர் போலும்
பைந்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீலகண்டர் போலும்
வடகைலை மலையுடைய மணாளர் போலும்
செஞ்சடைக்கண் வெண்பிறை கொண்டணிந்தார் போலும்
திருவீழிமிழலை அமர் செல்வர் போலும்
அஞ்சடக்கும் அடியவர்க்கு அணியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

பஞ்சு போன்ற மெல்லிய விரல்களை உடைய உமையவளை பாகத்தில் கொண்டவரும், பைகளை உடைய பாம்பினை இடையில் அணிந்தவரும், மேகம் போன்ற கருநீல நிறமான கழுத்தை உடையவரும், வடபால் உள்ள கயிலை மலையினை உடைய கல்யாணசுந்தரரும் ஐம்புலன்களையும் அடக்கும் வல்லமை பெற்ற அடியவர்க்கு நெருக்கமாய் உள்ளவரும் ஆன திருவீழிமிழலையில் அமர்ந்த சிவனார் தாம் அடியேனை ஆட்கொண்டவர்.

தலம்: திருவீழிமிழலை	இறைவன்: வீழியழகர்
பலன்: இறையுருக்காணல்	இறைவி: சுந்தரகுசாம்பிகை (அழகுமுலையம்மை)

144. ஞாலமே விசும்பே நலம் தீமையே
காலமே கருத்தே கருத்தால் தொழும்
சீலமே திருவீழி மிழலையுள்
கோலமே அடியேனை குறிக்கோளே!

பூவுலகாய், விண்வெளியாய், நன்மைகளாய் தீமைகளாய் காலமாய் என் மனக்கருத்தாய், மனத்தால் நான் தொழுது வணங்கும் சீலம் உடையவனாய் திருவீழி மிழலையுள் அருள்கோல வடிவாய் நின்ற சிவபெருமானே என்னை உன் மனக்குறிப்பில் வைப்பாய்.

தலம்: திருவீழிமிழலை — இறைவன்: வீழியழகர்
பலன்: துயரம் தீர்க்கப் பெறல் — இறைவி: சுந்தரகுசாம்பிகை அழகு முலையம்மை

145. பூதியணி பொன்னிறத்தார் பூணநூலார்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதிசரம் மேவினார் கேதாரத்தார்
கெடிலவட அதிகை வீரட்டத்தார்
மாதுயரம் தீர்த்தென்னை உய்யக்கொண்டார்
மழபாடி மேய மழுவாளனார்
வேதிகுடி உள்ளார் மீயச்சூரார்
வீழிமிழலையே மேவினாரே.

பொன்னிற மேனியில் விபூதிப் பூச்சணிந்தவர், நாகத்தை அணிந்தவர் சங்கரர், வெண்ணிற தோடணிந்த காதினை உடையவர், திருக்கேதீச்சுரம், கேதாரம், அதிகைக்கெடில வீரட்டம், வேதிக்குடி, திருமீயச்சூர், திருமழபாடி ஆகிய தலங்களில் உள்ள மழுவாயுதம் கொண்ட சிவனார் எனது துயரங்கள் அனைத்தையும் நீக்கி என்னை வாழ வைப்பவர் திருவீழிமிழலையிலும் உள்ளார்.

தலம்: திருவன்னியூர் — இறைவன்: அக்கினீஸ்வரர்
பலன்: ஞானம் பெறல் — இறைவி: பார்வதியம்மை

146. ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம்மடைந்தார்க்கெல்லாம்
தானம் காட்டித்தன் தாள் அடைந்தார்க்கு
வானம் காட்டுவர் போல்வன்னி யூரரே.

திருவன்னியூர் அக்கினீஸ்வரப் பெருமான் தம் திருவடி அடைந்தவர்கட்கு நல்ல அறிவு தருவார், நல்ல நெறிகளை உணரச் செய்வார் தானங்களும் தருவார் எல்லாவற்றுக்கும் மேலாக வீடுபேறும் கொடுப்பார்.

ஞானசம்பந்தர்

தலம்: திருவிற்குடி வீரட்டம் இறைவன்: வீரட்டநாதர்
பலன்: பிணிகள் தீர்க்கப் பெறல் இறைவி: ஏலவார்குழலி

147. பூதம் சேர்ந்திசை பாடலர் ஆடலர் பொலிதர நலமார்ந்த
பாதம் சேரிணைச் சிலம்பினார் கலம் பெறுகடல் எழுவிட முண்டார்
வேதம் ஓதிய நாவுடையானிடம் விற்குடி வீரட்டம்
சேரும் நெஞ்சினார்க்கு அல்லதுண்டோபிணி தீவினை கெடுமாறே.

பூதகணங்களுடன் சேர்ந்து ஆடியும், பாடியும் மகிழ்பவர் அழகு மிளிரும் நன்மைகள் தரும் பாதச் சிலம்பணிந்தவர் கப்பல்கள் செல்லும் கடலில் எழுந்த விஷத்தை உண்டவர் வேதங்களை உரைத்தவர் அத்தகைய சிவ பெருமான் உறையும் விற்குடி வீரட்டம் எனும் தலத்தினை அடையும் பக்தர்களுக்கு பிணிகளும் தீவினைகளும் தீரும் மற்றவர்கட்கு தீராது.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீஸ்வரர்
பலன்: வானுலகு ஆளப்பெறல் இறைவி: கருந்தார்க்குழலம்மை

148. மடையின் நெய்தல் கருங்குவளை செய்யமலர்த்தாமரை
புடைகொள் சென்னெல் விழைகழனிமல்கு புகலூர்தனுள்
தொடைகொள் கொன்றை புனைந்தானோர் பாகம்மதி சூடியை
அடையவல்லார் அமருலகம் ஆளப் பெறுவரே.

மடைவாய்களில் புன்னை கருங்குவளை சிவந்த தாமரை மலர்கள் நிறைந்து விளங்க நெல் விளையும் வயல்கள் சூழ்ந்த திருப்புகலூரில் கொன்றை மாலையும் பிறை மதியும் அணிந்த சிவபெருமானை அடைந்தவர்கள் வானுலகையே ஆள்வர்.

தலம்: திருச்சிவபுரம் இறைவன்: சிவபுரநாதர்
பலன்: யமபயம் நீங்கப் பெறல் இறைவி: சிங்காரவல்லி

149. அன்றடல் காலனை பாலனுக்காய்
பொன்றிட உதைசெய்த புனிதன் நகர்
வென்றிகொள் எயிற்றுப் வெண்பன்றி முன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே.

மார்க்கண்டேயனுக்காக எமனின் உயிர்நீங்கும்படி உதைத்த புனிதர் உறையும் ஊர் வெற்றி தரும் வெண்பற்களை உடைய திருமாலாகிய வராகமூர்த்தி வழிபட்ட தலமான சிவபுரம் தான்.

தலம்: திருஅரிசிற் கரைப்புத்தூர் இறைவன்: படிக்காசு வைத்த பரமர்
பலன்: செல்வம் பெறல் இறைவி: அழகாம்பிகை

150. நிலம்தணீரொடு அனல்கால் விசும்பின் நீர்மையான்
சிலந்திசெங்கட் சோழனாகச் செய்தான் ஊர்
அலந்தஅடியான் அற்றைக்கு அன்றோர் காசெய்தி
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே.

நீர், காற்று, விண்வெளி, தீ, மண் எனும் ஐம்பூதமான வடிவான வன் தனக்கு திருவானைக்காவலில் நிலழல் தந்த ஓர் சிலந்தியை மறுபிறப்பில் சோழ மன்னனாகச் செய்த இறைவன் இருக்கும் ஊர் நாயன்மார்களில் ஒருவரான புகழ்த்துணை நாயனாருக்கு அவரது வறுமை நீங்கும்படி படிக்காசு வைத்த திருஅரிசிற் கரைப் புத்தூர்தான்.

தலம்: திருப்புகலூர் வர்த்த மானீச்சுரம் இறைவன்: வர்த்தமானீஸ்வரர்
பலன்: இறையருள் பெறுதல் இறைவி: கருந்தார்க்குழலி

151. ஈசனேறமர் கடவுள் இன்னமுதெந்தை யெம்பெருமான்
பூசுமாசில் வெண்ணீற்றார் பொலிவுடைப் பூம்புகலூரில்
மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போது செய்முடிமேல்
வாசமாமலருடையார் வர்த்த மானீச்சுரரே.

முருக நாயனார் வண்டுகள் மொய்த்திருக்கும் அன்றலர்ந்த கொன்றை மலர்களை மூன்று வேளையும் இறைவன் திருமுடிமேல் சாத்த, அவருக்கு அருள் செய்த சிவனார்தான் எங்களது கடவுள். காளை வாகனத்தில் அமர்ந்தவர் எங்கள் தந்தை போன்ற அப்பெருமான் எப்போதும் வெண்மையான திருநீறு பூசப்பட்ட திருமேனி உடையவர். அவர்தான் எழில் நிலவும் வர்த்தமானீச் சுரத்தில் உள்ளார்.

நாவுக்கரசர்

தலம்: திருநனிபள்ளி இறைவன்: நற்றுணையப்பர்
பலன்: அஞ்செழுத்தின் பலன் இறைவி: மலையான்மடந்தை

152. துஞ்சுஇருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்தோதின் நாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுதாக் குவித்தார் நனிபள்ளி அடிகளாரே.

இருளிலும் காலையிலும் மாலையிலும் 'நமசிவாய' எனும் ஐந்து எழுத்து மந்திரத்தை தொடர்ந்து (இடைவெளியின்றி) ஓதி வணங்கினால் அரனின் திருவடிக்கு ஏற்றதாகும். அப்படி ஓதினால் இறையருள் கிட்டும். சமணர்கள் வஞ்சனையாக பால்சோறு போல் ஆக்கித் தந்த நஞ்சினையும் இறைவன் அமுதமாக மாற்றுவித்தவர் அவர்.

தலம்: திருநள்ளாறு
பலன்: கோள்களால் வரும் துன்பம் நீங்கல் மும்மலங்கள் நீங்கல்
இறைவன்: தர்ப்பாரண்யேஸ்வரர்
இறைவி: போகமார்த்த பூண்முலையாள்

153. குலம்கெடுத்து கோள்நீக்க, வல்லான்தன்னை
குலவறையின் மடப்பாவை இடப்பாலானை
மலம்கெடுத்து, மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையினானை
சலம்கெடுத்து தயாமூல தன்மம் என்னும்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை நள்ளாற்றானை
நான்அடியேன் நினைக்கப் பெற்றுய்ந்த வாறே!

குலத் தாழ்வுகளை நீக்கவும், கிரகங்களால் ஏற்படும் துயர்களை அகற்றியும் மும்மலங்களை அழித்தும் புண்ணிய தீர்த்தங்களில் நம்மை மூழ்கச் செய்தும், தர்ம நெறிகளின் வழிநின்று அன்பின் பால் நம்மைச் சேர்த்தும் நமது பொய்மைகளை மாய்த்தும் அருள் செய்யும் சிவபெருமான் சடையில் பிறைமதி யணிந்து கொண்டு மலைமகளை தனது இடப்பாகத்தில் கொண்டு வேதங்களின் உருவமாக நள்ளாறு எனும் தலத்தில் உள்ள நமக்கு நன்மைகள் அனைத்தும் கொடுக்கும் எம்பெருமானை நான் நினைத்து வழிபட்டதனால்தான் நல்வாழ்வடைந்தேன்.

தலம்: திருமீயச்சூர் இளங்கோவில்
பலன்: துன்பம் நீங்கப்பெறல்
இறைவன்: சகலபுவனேஸ்வரர்
இறைவி: மேகலாம்பிகை

154. கடுக்கண்டன் கயிலாய மலைதனை
எடுக்கல்உற்ற இராவணன் ஈடற
விடுக்கண் இன்றி வெருண்டவன் மீயச்சூர்
இடுக்கண் தீர்க்க நின்றார் இளங்கோயிலே.

விடம் கொண்ட கண்டனான சிவனாரின் கயிலாய மலைதனை பேர்த்து எடுக்க முயன்ற இராவணனது வலிமை அழிய அவன் மீது சினம் கொண்ட இறைவன் மீயச்சூர் இளங்கோவிலில் உள்ளார் அவர் நமது துன்பங்களை நீக்குவார்.

தலம்: திருக்கடவூர் மயானம் திருமெய்ஞானம் இறைவன்: பெரியபெருமானடிகள்
பலன்: உரியகாலத்தில் அருள் பெறல் இறைவி: மலர்க்குழல் மின்னம்மை

155. உன்னிவானவர் ஓதிய சிந்தையில்
கன்னல் தேன்கட வூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுது எழுவார்க்கெலாம்
பின்னை என்னார் பெருமானடிகளே.

வானவர்கள் யாவரும் கருதி வணங்கும் கரும்பு போன்றவரும் தேன் போன்றவருமான கடவூர் மயானத்தில் உள்ள பெருமான டிகள் எனும் திருநாமம் கொண்ட இறைவன் தன்னை வணங்கித் தொழுபவர்கட்கு அருள் செய்வதை உரிய காலத்தில் செய்வார் தவறமாட்டார்!

தலம்: திருக்கடவூர்மயானம் இறைவன்: பெரிய பெருமானடிகள்
பலன்: பாவம் தீர்தல் இறைவி: மலர்க்குழல் மின்னம்மை

156. குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உனழயர் தாம் கடவூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார் செய்த பாவமும்
பிழையும் தீர்ப்பர் பெருமானடிகளே.

காதில் தோடணிந்தவரும் ஆடையாக கோவணமும் கொண்டு நமக்கு அருகேயிருக்கும் கடவூர் மயானத்து யீசன் தமது அடியார் களின் பாவங்களைத் தீர்ப்பது மட்டுமின்றி அவர்களது குற்றங் களையும் மாற்றுவார்.

சுந்தரர்

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: வேண்டுவன பெறல் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

157. வீரத்தால் ஒருவேடுவனாகி விசைத்து ஓர்கேழலை துரந்து சென்றணைந்து
போரைத் தான்விச யந்தனக் கன்பாய் புரிந்து வான்படை கொடுத்தல் கண்டு அடியேன்
வாரத்தால் உன்நாமங்கள் பரவி வழிபட்டுன் திறமே நினைந்துருகி
ஆர்வத் தோடுவந்து அடியிணை அடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம்மானே.

திருவாவடுதுறையில் முதல் கடவுளாய் விளங்கும் சிவபெருமான் வீரத்தோடு பன்றி வடிவில் வந்த ஒரு அசுரனைத் துரத்திச் சென்று அங்கு தவத்தில் இருந்த அர்ஜுனனுடன் போர் செய்து பின்னர் அவனுககு பாசுபதாஸ்திரத்தை கொடுத்த உன் அருளைக் கண்டு உனது திரு நாமங்களைக் கூறி வழிபட்டு மிகவும் ஆர்வத்தோடு உன் இருதிருவடிகளை அடைந்தேன்.

தலம்: திருச்சோற்றுத்துறை இறைவன்: தொலையாச்செல்வர் ஓதவனேஸ்வரர்
பலன்: பழவினை நீங்கப்பெறல் இறைவி: ஒப்பிலாம்பிகை

158. பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டு அன்பு இடையறாத
தொண்டர் பரவும் சோற்றுத்துறையே.

தாமரைகளுடன் தொண்டர்கள் அன்பு பெருக வந்து வழிபடும் சோற்றுத் துறை ஈசர் அண்டங்களின் தலைவர் நமது பண்டை வினைகளைத் தீர்த்தருள்வார்.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றிடம்கொண்டார்
பலன்: வாழ்வில் இன்பம் பெறல் இறைவி: அல்லியங்கோதை (கமலாம்பாள்)

159. இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு
பறைகிழித்தனைய போர்வை பற்றியான் நோக்கினேற்கு
திறைகொணர்ந்து ஈண்டித் தேவர் செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே.

முத்தும் பொன்னும் திறையாகக் கொண்டு உன் திருவடிகளில் தேவர் பலர் தூவி வழிபாடு செய்யும் ஆரூர் எம்பெருமான்

உன்னோடு இருக்கும் இன்பமே நிலையானது. பிற இன்பங்களை எண்ணி பறை கிழிந்த போர்வையைப் போல் என் உடல் வேறு எதற்கும் பயன்படாது. அவ்வாறு உண்டாகாதவாறு நான் அஞ்சுகின்றேன்.

ஞானசம்பந்தர்

தலம்: திருக்கரவீரம் இறைவன்: கரவீரநாதர்
பலன்: வினைகள் தீர்க்கப்பெறல் இறைவி: பிரத்யட்ச மின்னம்மை

160. பண்ணினார் மறை பாடலன் ஆடலன்
விண்ணினார் மதில் எய்துமுக்
கண்ணினான் உறையும் கரவீரத்தை
நண்ணுவார் வினை நாசமே.

வானில் இருந்த முப்புரங்களை வென்றவரும் இசைமிகுந்த வேதங்களைப் பாடுபவரும் ஆடுபவரும் ஆன முக்கண்ணர் உறையும் கரவீரத்தினை அடைந்தவர்க்கு வினைகள் தீரும்.

தலம்: திருக்குடவாயில் இறைவன்: கோணேஸ்வரர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: பெரியநாயகி

161. அலைசேர் புனலன் அமலன் அனலன்
தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
கொலைசேர் படையன் குடவாயில் தனில்
நிலைசேர் பெருங்கோயில் நிலாயவனே.

திருக்குடவாயில் உள்ள நிலையான ஆலயத்தில் கங்கையை முடியில் வைத்தவனும், குற்றமற்றவனும் தீயைக் கையில் கொண்டவரும் உயிர் கவரும் ஆயுதம் உடையவனும் ஆன ஈசன் அருள் செய்கிறான்.

தலம்: திருப்பெருவேளூர் இறைவன்: பிரியாநாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: ஏலவார்குழலி

162. அண்ணாவும் கழுக்குன்றும் ஆயமலை அவைவாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்கு கருத்தானார் புரம் எரித்த
பெண்ஆணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

உலகமெல்லாம் தங்கள் கண்ணாக எண்ணி வானோரோடு சேர்ந்து போற்றி வழிபாடு செய்ய, திருவண்ணாமலையில் திருக்

கழுக்குன்றத்தில் அமர்ந்த உமையொரு பாகனான பிரியாநாதர் அருள் செய்வார்.

தலம்: திருஅவளிவணல்லூர் இறைவன்: சாட்சிநாயகேஸ்வரர்
பலன்: பாவம் நீங்கப் பெறல் இறைவி: சௌந்தரநாயகி

163. பிணியுமிலர் கேடுமிலர் தோற்றமிலர் என்றுலகு பேணிப்
பணியும் அடியார்களது பாவம்அற இன்னருள் பயந்து
துணியுடைய தோலும் உடைகோவணமும் நாகமுடல் தொங்க
அணியும் அழகாக உடையான் உறைவது அவளிவணல்லூரே.

உலகமானிடர்களால் இவர் நோய்களற்றவர், கேடுகள் அற்றவர், பிறப்பு இல்லாதவர் எனப் போற்றப்படும் அவளிவணல்லூர் யீசன் யானையின் தோலையும், கோவணத்தையும் உடையாகக் கொண்டு நாகங்களின் உடல் தம்மேனியில் தொங்க, உலகத்தவர் பாவங்களை நீக்குவார்.

தலம்: திருநாலூர் மயானம் இறைவன்: பலாசவனநாதர்
பலன்: பிறப்பின்மை பெறல் இறைவி: பெரியநாயகி

164. பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூரும் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பன்றன் அடிநினைந்து
மாலூரும் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே.

தன்மீது ஊர்கின்ற மலைப்பாம்பையும் தனது சடையில் குளிர்ந்த நிலவும் ஊமத்தை மலரும், மார்பினில் முப்புரி நூலும் உடைய நாலூர் மயானத்து இறைவன் திருவடிகளை எண்ணி எண்ணி அன்பைப் பெருக்கும் மனம் உடையவர்களான அடியார்கட்கு மறுபிறப்பு வராது.

தலம்: திருமருகல் இறைவன்: மாணிக்கவண்ணர்
பலன்: மனத்துயர் நீங்கும் இறைவி: வண்டுவார் குழலி

165. சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.

திருமருகலில் உள்ளவனே உன்னையே நினைந்து சடையானே என்றும் காளையுடையானே என்றும் உன்னையே சரண் என கூவி அன்பு செய்யும் இப்பெண்ணின் மனத்துயர் அகற்றுவாய்.

தலம்: திருச்சிக்கல் இறைவன்: வெண்ணைப்பெருமான் நவநீதநாதர்
பலன்: தீவினைகள் தீர்க்கப் பெறல் இறைவி: வேல் நெடுங்கண்ணி

166. வானுலாவும் மதி வந்துலாவும் மதில் மாளிகை
தேனுலாவும் மலர்ச் சோலை மல்கும் திகழ் சிக்கலில்
வேலைவேளை விழித்திட்ட வெண்ணைப் பெருமானடி
ஞானமாக நினைவார் வினையாயின் நையுமே.

வான்மீது உலவும் சந்திரன் தம் மதில் மீது உலவும்படி அமைந்த மாளிகைகளும் தேன்சிந்தும் மலர்ச்சோலையிலும் ஆழ்ந்த சிக்கலில் உள்ள வெண்ணைப் பெருமானை நல்லறிவோடு நினைந்து பணிபவர்க்கு வினைகள் நைந்துபோம்.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றியம்கொண்டார்
பலன்: நோய்கள் நீங்கல் இறைவி: அல்லியங்கோதை

167. நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன நித்தம் நோய்கள்
வாதியா ஆதலால் நாளும்நாள் இன்பமே மருவினாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனும் ஏத்தும் முக்கண்
ஆதிஆரூரர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே.

என் மனமே நீ முன்னோர் நெறிகளில் வாழவில்லை. உன் வாழ்நாள் பலவும் வீணே கழிந்தன. நாட்களெலாம் நோய்கள் வருத்த துயருற்றாய். இருப்பினும் இன்பத்தையே வேண்டி நிற்கிறாய். எனவே கின்னரர்களும் வருணனும் எமனும் தொழுது வழிபட்ட திருவாரூர் ஆதி முதல்வன்பால் அன்பு வைத்து அவரைத் தொழுதால் நோய்களினின்றும் நீங்கி சுகம் பெறலாம். அஞ்சாதே.

தலம்: திருச்சாத்தமங்கை இறைவன்: அயவந்திநாதர்
பலன்: திருமணம் கூடப்பெறல் இறைவி: இருமலர்கண்ணி

168. திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும் மதி சென்னி வைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோடு உடனாவதும் ஏற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேகம் உரிஞ்சும் பெருஞ்சாத்தமங்கை
அருமலராதி மூர்த்தி அயவந்தி அமர்ந்தவனே.

அரிய நறுமண மலர்ச்சோலைகளின் மரங்கள் மேகத்தைத் தொடும்படி உயர்ந்து விளங்கும் திருச்சாத்தமங்கை எனும் அயவந்தியில் தலைவனான முதற்கடவுளான சிவபெருமான் கொன்றை மலையும் இளநிலவையும் முடியில் வைத்துக் கொண்டு

'இருமலர்க்கண்ணி' எனும் அம்பிகையை மணம் புரிந்து அருள் செய்கிறான்.

தலம்: திருக்கீழ்வேளூர் இறைவன்: கேடிலியப்பர்
பலன்: வினைகள் நீங்கி சிவானுபவம் பெறல் இறைவி: வனமுலை நாயகி

169. மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரும் அரவோடு
பன்னுலாவிய மறையொலி நாவினர் கறையணி சண்டத்தார்
பொன்னுலாவிய கொன்றையும் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னுலாவிய சிந்தையர்மேல் வினையோடிட வீடாமே.

ஒளிரும் மின்னல் போல் சடையும், காளை வாகனமும் நாகமும் பண்ணோடு வேதங்களைப் பாடும் நாவும் கறையுடைய கழுத்தும், கொன்றை மாலையும் கொண்ட கீழ்வேளூர் கேடிலியப்பரை நினைந்து தொழுபவர்கட்கு வினைகள் தொடராது. சிவானுபவமும் உண்டாகும்.

திருநாவுக்கரசர்

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினியீஸ்வரர்
பலன்: ஐம்புலனடக்கப் பெறல் இறைவி: கருநதார்குழலி

170. காத்திலேன் இரண்டும் மூன்றும் கல்வியேல் இல்லை என்பால்
வாய்த்திலேன் அடிமைதன்னுள் வாய்மையால் தூயேன் அல்லன்
பார்த்தனுக்கு அருள்கள்செய்த பரமனே பரவுவார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கை திருப்புக லூரனீரே.

என்னை அடிமையாய் கொண்ட திருப்புகலூர் ஐயனே நான் ஐம்புலன்களை அடக்கும் வல்லமையின்றி அவைகளை அடக்கக் கூடிய அறிவும், வாய்மையும், தூய்மையும் இல்லாமல் துயருருகின்றேன். எனவே பார்த்தனுக்கு அருள் செய்த பரமனாகிய நீங்கள் ஐம்புலனடக்க அருள் செய்வீர்.

தலம்: திருக்கொண்டீச்சுரம் இறைவன்: பசுபதிநாதர்
பலன்: நோயும் துன்பமும் நீங்கப் பெறல் இறைவி: சாந்தநாயகி

171. வெம்பும் நோயும் இடரும் வெறுமையும்
துன்பமும் துயரும் எனும் சூழ்வினை
கொம்பனார் பயில் கொண்டீச்சுரவனை
எம்பிரான் என வல்லவர்க்கு இல்லையே.

இனங்கொடிகள் போன்ற பெண்கள் வாழும் கொண்டீச்சுரத்து யீசனை 'எம்பிரானே' என ஏற்றி பணிய வல்லவர்களான அடியவர்கட்கு கொடிய நோய்களும் பிற துன்பங்களும் வெறுமையும் சூழவரும் வினைகளும் இல்லாமல் நீங்கும்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினியீசுவரர்
பலன்: இறைக்காட்சி பெறல் இறைவி: கருந்தார்க்குழலி

172. அங்கமே பூண்டாய் அனல் ஆடினாய்
ஆதிரையாய் ஆல நிழலாய், ஆனேறூர்ந்தாய்
பங்கம்ஒன்று இல்லாப் படர் சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த்தாண்டாய்
சங்கை ஒன்று இன்றியே தேவர்கள் வேண்ட
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்அடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே!

திருப்புகலூரின் அருள்தரும் தேவர்கட்கெல்லாம் தலைவனே நீ எலும்புகளை அணிந்தவன். சுடுகாட்டில் நடமிட்டவன். திருவாதிரை நாளில் தோன்றியவன். கல்லால மரத்தின் கீழ் தெட்சிணாமூர்த்தியாய் இருநதவன். வலிய காளை வாகனத்தை ஊர்தியாய் கொண்டவன். உன் தலைச்சடை முடியுள் சந்திரனும் பாம்பும் தங்கள் பகை மறந்து கூடி இருக்கும்படி கொண்டவன். கடலின் விடமருந்தியும் சாவும் மூப்பும் இல்லாத சிங்கமாகிய உன்னை சரண் புகுந்தேன்.

தலம்: திருவாஞ்சியம் இறைவன்: வாஞ்சியநாதர்
பலன்: பாவம் நீங்கப் பெறல் இறைவி: வாழவந்தநாயகி

173. புற்றிலாடு அரவோடு புனல்மதி
தெற்று சஞ்சடைத் தேவர் பிரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க்கு பாவம் இல்லையே.

புற்றில் வாழும் பாம்பையும், கங்கை நீரையும் பிறை நிலவையும் தனது செஞ்சடையில் கொண்ட தேவர்கட்கெல்லாம் தேவனான சிவபெருமானை சுற்றிலும் மாடங்கள் உள்ள மாளிகைகள் சூழ்ந்த திருவாஞ்சியத்தில் பாடித் தொழுபவர்க்கு பாவங்கள் வாராது.

தலம்: திருஅரிசிற்கரைப்புத்தூர் இறைவன்: படிக்காசு வைத்த பரமர்
பலன்: நன்னெறிகள் கூடும் இறைவி: அழகாம்பிகை, சிவாம்பிகை

174. அரிசிலின் கரைமேல் அணிஆர்தரு
புரிசை நம்திருப் புத்தூர்ப் புனிதனை
பரிசொடும் பரவிப் பணிவார்க் கெலாம்
துரிசில் நன்னெறி தோன்றிடம் காண்மினே!

அரிசிலாற்றின் கரையில் எழில்மிக்க மதில்கள் கொண்ட அரிசில் கரைப்புத்தூர் எனும் தலத்திற்கு சென்று நமது துய்யோனான ஈசனை அன்பால் வணங்கிப் பணிபவர்கட்கு மாசற்ற நன்னெறிகளைக் காட்டுவான்.

தலம்: திருநாகைக்காரோணம் இறைவன்: காயாரோகணேஸ்வரர்
பலன்: துன்பம் தீர்ந்து இன்பம் பெறல் இறைவி: நீலாயதாட்சி

175. நிறைபுனல் அணிந்த சென்னி நீள்நிலா அரவம் சூடி
மறையொலி பாடி ஆடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகை காரோணம் கோவில் கொண்ட
இறைவனை நாளும்ஏத்த இடும்பைபோய் இன்பம் ஆமே.

மிகுந்து பாயும் கங்கையையும் கதிர்களால் தண்ணொளி கூட்டும் நிலவினையும் நாகத்தையும் தலைமுடியில் கொண்ட இறைவன் வேதகீதங்கள் முழங்க, சுடுகாட்டில் ஆடி மகிழ்ந்த

இறைவனை கடலால் சூழப் பெற்ற நாகையில் தினந்தோறும் வணங்கினால் நமது துன்பங்கள் நீங்கி இன்பம் பெறலாம்.

தலம்: திருமருகல் இறைவன்: மாணிக்கவண்ணர்
பலன்: மகிழ்வு பெருகப் பெறல் இறைவி: நீலாயதாட்சி

176. பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே.

திருமருகல் எனும் தலத்துயீசனை வாழ்த்திப் போற்றி வணங்கினால் நமக்கு தவஞானம் உண்டாகும். அறியாமை நீங்கும். நம்மனத்தே உள்ள வஞ்சனை எண்ணங்கள் நீக்கலாம். விண்வெளியில் கலந்தது போன்ற மகிழ்ச்சி மிக்க நிலை எய்தலாம்.

தலம்: திருக்கீழ்வேளூர் இறைவன்: கேடிலியப்பர்
பலன்: கேடுகள் நீங்கப் பெறல் இறைவி: வனமுலை நாயகி

177. ஆளான அடியவர்கட் கன்பன்தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானை தன்னொப்பார் இல்லா தானை
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானை தோளாத முத்தொப் பானை
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளும் கோவை
கேடிலியை நாடும்அவர் கேடிலாரே.

நான் சரணம் என அடைந்த திருவடியினானை பசுவழங்கு பொருளான பஞ்சகவ்வியத்தால் அபிஷேகம் செய்யப்படுபவனை தனக்கு யாரும் நிகரில்லாதவனை, சந்தனமும் குங்குமும் அகிலும் பூசப்பட்ட தோள்களை உடையவனை, துளைபடாத முத்துப் போன்றவனை, தூய்மையான வெண்ணிற கோவணத்தை அணிந்தவனை அடியார்கட்கு என்றும் அருள் செய்பவனை கீழ்வேளூர் இறைவனை அடைந்து வழிபடுபவர்களுக்கு கேடுகள் சூழாது.

தலம்: திருப்பயற்றூர் இறைவன்: பயற்றூர்நாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: காவியங்கண்ணி

178. பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பு அரையாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாம வேதம்
கூத்தொடு பாட வைத்தார் கோள்அரா மதியம் நல்ல
தீர்த்தமும் சடைமேல் வைத்தார் திருப்பயற்றூரனாரே.

தனது சடையினில் கங்கையையும், நாகத்தையும், பிறைச் சந்திரனையும் கொண்ட திருப்பயற்றூர் இறைவன் தர்ம சாஸ்தா வைத் தன் மகனாய்ப் பெற்றவர் சாமுண்டி எனும் அம்பிகை சாமவேதம் பாட நடனம் செய்தவர். அவர்தான் பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனனுக்கு அருள்செய்து பாசுபதம் வழங்கினார்.

தலம்: திருச்செங்காட்டங்குடி இறைவன்: கணபதீச்சுரர்
பலன்: சென்னெறி சேரப் பெறல் இறைவி: திருக்குழல் நன்மாது

179. கல்லாதார் மனத்து அணுகா கடவுள்தன்னை
கற்றார்கள் உற்றோரும் காதலானை
பொல்லாத நெறிஉகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றி விழஅன்று பொருசரம் தொட்டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றும்
செல்லாத சென்னெறிக்கே செல்விப்பானை
செங்காட்டங்குடி யதனில் கண்டேன் நானே.

கல்லாதவர்கள் மனத்தை நெருங்காதவனும், கற்ற அறிஞர் களால் அன்போடு வணங்கப் பெறுபவனும், தீநெறியில் சென்ற முப்புரத்து அசுரர்கள் மாயுமாறு அம்பெய்தவரும் நிலையில்லாத குணம் சேர்ந்த என் உடல் பிணக்கை மாற்றி எனக்கு அறிய தவமார்க்கத்தைக் காட்டி நான் சென்று அறியாத செம்மையான நெறிகளின் வழிப்படி எனைச் செலுத்திய இறைவனை செங்காட்டங்குடியில் கண்டேன்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருஇடும்பாவனம் இறைவன்: சற்குணநாதர்
பலன்: இடுக்கண் நீங்கப்பெறல் இறைவி: மங்களநாயகி

180. தடுக்கையுடன் இடுக்கிதலை பறித்துச் சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள் உடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல் மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிடம் இடுப்பாவன மதுவே.

தடுக்குகளை கைகளில் இடுக்கி, தலைகளை மழித்து பல காவியாடைகளை அணியும் சமணர்கள் தரும் இடுக்கண்களை களைந்து நீக்குபவனான யீசர் இருக்குமிடம் மடையின்கண் பல மணமலர்களும் வயல்களில் செந்நெல் பயிர்களும் மிகுந்த இடும்பாவனம் ஆகும்.

தலம்: திருக்கோட்டூர் இறைவன்: கொழுந்துநாதர்
பலன்: செல்வம் பெருகப் பெறல் இறைவி: தேன்மொழிப் பாவையம்மை

181. பாடியாடுமெய் பக்தருக் கருள்செய்யும் முத்தினைப் பவளத்தை
தேடிமாலயன் காணவொண் ணாதஅத் திருவினைத் தெரிவைமார்
கூடி ஆடவர்கைதொழக் கோட்டூர் நற்கொழுந்தேயென் றெழுவார்கள்
நீடுசெல்வத்தை ராகியிவ் வுலகினில் நிகழ்தரு புகழாரே.

திருமாலும் பிரமனும் தேடிக் காண முடியாத செல்வனை ஆடிப்பாடிப் பணியும் பக்தர்களுக்கு அருளும் முத்தையும் பவளத்தையும் போன்றவனை ஆடவரும் பெண்டிருமாகக் கூடி கோட்டூரில் வாழும் கொழுந்தேவென்று கைதொழுது வணங்கி எழுபவர்கள் இவ்வுலகில் நிலைத்த செல்வம் அடைந்து வாழ்வர்.

தலம்: திருத்தண்டலை நீணெறி இறைவன்: நீணெறிநாதர்
பலன்: புகழ் பெருகப் பெறல் இறைவி: ஞானாம்பிகை

182. இகழும் காலன் இதயத்தும் என்னுளும்
திகழும் சேவடியான் திருந்தும் இடம்
புகழும் பூமகளுப் புணர் பூசுரர்
நிகழும் தண்டலை நீணெறி காண்மினே.

இறைவனை மதிக்காமல் இருந்து இறைவனால் தண்டனை அளிக்கப்பட்ட பின் திருந்திய எமனின் உள்ளத்திலும் என்

உள்ளத்திலும் உள்ள சிவபெருமான் மண்ணாளும் அரசர்கட்கு புகழை உண்டாக்கினார். அவர் உறையும் தண்டலை நீணெறியை சென்று கண்டு வணங்குவீர்.

தலம்: திருவெண்ணியூர் இறைவன்: வெண்ணிநாதர்
பலன்: அல்லல்கள் நீங்கப்பெறல் இறைவி: அழகியநாயகி

183. முத்தினை முழுவயிரத் திரள் மாணிக்கத்
தொத்தினை துளக்கமிலாத விளக்காய
வித்தினை விண்ணவர்தாம் தொழும் வெண்ணியில்
அத்தனை அடையவல்லார்க்கு இல்லை அல்லலே.

முத்து வைரம் மாணிக்கம் போன்றவன் ஒளிகுன்றாத மணிவிளக்கு, விளைவுகள் அனைத்துக்கும் மூலவித்து ஆகிய பரம்பொருளை, திருவெண்ணியூரில் தேவர்கள் வந்து வணங்கும் இறைவனை அடைந்தவர்கட்கு அல்லல்களேயில்லை.

தலம்: திருக்களர் இறைவன்: களர்முனைநாதர்
பலன்: அருள் பெருகப்பெறல் இறைவி: இளங்கொம்பன்னாள்

184. நீருளார்கயல் வாவிசூழ்பொழில் நீண்ட மாவயல் ஈண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழா மல்கு திருக்களருள்
ஊருளார் இடுபிச்சை பேணும் ஒருவனே ஒளிர் செஞ்சடைமதி
ஆரநின்றவனே! அடைந்தார்க்கு அருளாயே!

மீன்கள் நிறைந்த பொய்கைகளும் நெடிய வயல்களும் பெரிய மதில்களும் கொண்டு திருவிழாக்கள் நிறைய நடக்கும் திருக்களர் எனும் தலத்தில் ஊரிலுள்ளவர்கள் இடும் பிச்சையை ஏற்றுண்ணும் மதியும் நதியும் கொண்ட சடையானே உனை அடைந்தவர் களுக்கு அருள்செய்வாயே!

தலம்: திருவெண்டுறை இறைவன்: வெண்டுறைநாதர்
பலன்: யமபயம் தீறப் பெறல் இறைவி: வேல்நெடுங்கண்ணியம்மை

185. கன்றிய காவலனையும் முருளக், கனல்வாய்அலறி
பொன்றமுன் நின்றபிரான் பொடியாடிய மேனியினான்
சென்று இமையோர் பரவும்திகழ் சேவடியான் புலன்கள்
வென்றவன் எம்மிறைவன் விரும்புமிடம் வெண்டுறையே.

மிகுந்த சினத்துடன் வந்த யமனை பயமுற்று தீகக்கும் வாய் அலறும்படி அழித்தவனான எம்பெருமான் வெண்ணீறு பூசிக்

கொண்டவன் தேவர்கள் வந்து வணங்கும் சிவந்த திருவடிகள் உடையவன் அவன் விரும்பிய தலம் வெண்டுறை.

சுந்தரர்

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: பிழைகள் பொறுக்கப்பெறல் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

186. குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே குழைக்காதுடையானே
உறவிலேன் உனையன்றி மற்றடியேன் ஒருபிழை பொறுத்தல் இழிவுண்டோ
சிறை வண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனே யென்னை அஞ்சல் என்றருளாய் ஆர்எனக்கு உறவு அமரர்கள் ஏறே.

தேவர்களின் தலைவனே ஒருமுறையும் இல்லாத முழுமையே குணமலையே! கூத்தாடும் ஐயனே தோடுடைய செவியனே உனையன்றி வேறு துணையிலாத அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொண்டால் உனக்கு குறைவு நேருமா? சிறகுகளை விரித்து வண்டுகள் திரியும் சோலைகள் சூழ்ந்த திருவாரூர் இறைவனே! திருவாவடுதுறையில் அருள் தரும் மூர்த்தியே கூறுவாயாக!

தலம்: திருஒற்றியூர் இறைவன்: தியாகேசர்
பலன்: இல்லறம் சிறக்கப் பெறல் இறைவி: வடிவுடையம்மை

187. ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடன்ஆகி
மாழைஒண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.

ஏழுசுரங்களில் அமைந்த இசை வடிவாகி, அவ்விசை தரும் மகிழ்வுமாகி, இனிமை மிக்க அமுதுமாகி எனக்கு தோழன் ஆகி, நான் செய்யும் பிழைகளுக்கும் உட்பட்டு ஒளிபொருந்திய கண்களை உடைய பரவை நாச்சியாளை எனக்கு மனம் செய்வித்தவனாகிய என் ஆரூர் எம்பெருமானை அறிவற்றவனான நான் எங்ஙனம் பிரிந்து வாழ்வேன்.

தலம்: திருவாவடுதுறை இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: அச்சம் நீங்கப்பெறல் இறைவி: ஒப்பிலாமுலையம்மை

188. வானநாடனே வழித்துணை மருந்தே மாசிலாமணியே மறைப்பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும் ஈடுதாங்கிய மார்புடையானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந்தானே தேவனே திருவாவடுதுறையுள்
ஆனையே என்னை அஞ்சல் என்றருளாய் ஆர்எனக்கு உறவு அமரர்ஏறே.

விண்ணுலகத்தலைவா தேவர்களின் தலைவா, செல்லும் வழிக்கு அருந்துணையே மாசற்ற மணியே! வேதங்களின் வடிவே! பன்றிக்கொம்பு ஆமை எலும்பு தரித்த மார்பினனே! தேன் நெய் பால் தயிர் இவைகளால் அபிஷேகம் செய்யப்படுபவனே திருவாவடுதுறையில் களிறுபோல் உள்ள இறைவா எனை அச்சப்பட வேண்டாம் என அருள் செய்.

திருநாவுக்கரசர்

தலம்: திருக்கீழ்வேளூர்	இறைவன்: கேடிலியப்பர்
பலன்: மனமாசு நீங்கப்பெறல்	இறைவி: வனமுலை நாயகி

189. அளைவாயில் அரவசைத்த அழகன் தன்னை
ஆதரிக்கும் அடியவர்கட்கு அன்பே என்றும்
விளைவானை மெய்ஞ்ஞானப் பொருள் ஆனானை
வித்தகனை எத்தனையும் பக்தர் பக்திக்கு
உளைவானை அல்லாதார்க்கு உளையா தானை
உலப்பிலியை, உள்புக்கென் மனத்து மாசு
கிளைவானை கீழ்வேளூர் ஆளும் கோவை
கேடிலியை நாடுவார் கேடிலாரே.

புரளும் பாம்பினை இடையில் கட்டிய அழகுடையானை அவனை போற்றும் அடியவர்களின்பால் அன்பு கொண்டவனை, மெய்ப்பொருள் வடிவானவனை சிறந்த அறிஞனை, பக்தர்களின் பக்தியைக் கண்டு மனம் இறங்குபவனை மற்றவர்கட்கு இரங்காதவனை பிறப்பு இறப்பு அற்றவனை என் மனத்துள் புகுந்து அதன் உள்ளே உள்ள மாசுகள் அனைத்தையும் கிண்டி வெளி யேற்று பவனை கீழ்வேளூரில் அருள்செய்யும் இறைவனை நாடினார்க்கு கேடுகள் இல்லை.

தலம்: திருவாரூர்	இறைவன்: வான்மீகநாதர் புற்றிடம்கொண்டார்
பலன்: அருள்பெருகுதல்	இறைவி: அல்லியங்கோதை

190. நரியைக் குதிரை செய்வானும் நரகரை தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சுஇன்றி நாறு செய்வானும்
முரசதிர்ந்து ஆனைமுன்ஓட முன்பணிந்து அன்பர்கள் ஏத்த
அரவரைச்சாத்தி நின்றானும் ஆரூர் அமர்ந்த அம்மானே.

திருஆலவாயில் நரிதனைக் குதிரைகளாய் மாற்றியவனும் நரகம் புகுந்தவர்களை தேவர்களாக மாற்றுபவனும் எல்லாவற்றுக்கு மூலப்பொருளாய் நின்று விளைவு செய்பவனும் ஆன ஆரூர் பெருமான் முரசுகள் முழங்க, யானை முன் செல்ல பக்தர்கள் பணிந்து வாழ்த்த அருள் செய்கிறார்.

தலம்: திருவாரூர் இறைவன்: வான்மீகநாதர் புற்றிடம்கொண்டார்
பலன்: வினைகள் தீர்க்கப்பெறல் இறைவி: அல்லியங்கோதை

191. என்புஇருத்தி நரம்புதோல்புகப் பெய்திட்டு என்னையோர் உருவம்ஆக்கி
இன்புஇருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்டென் உள்ளம் கோவிலாக்கி
அன்புஇருத்தி அடியேனைகூழ் ஆட்கொண்டு அருள்செய்த ஆரூரர்தம்
முன்புஇருக்கும் விதியின்றி முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே.

எலும்பு நரம்பு தோல் ஆன என்னைஓர் உருவமாக்கி, எனக்கு இன்பம் தந்து, எனது முன்வினைகளை யெல்லாம் களைந்து என் மனத்தை அவன் வாழும் ஆலயமாக்கி என் மீது அன்பு கொண்டு ஆட்கொண்ட ஆரூர் எம்பெருமான் முன் இருக்கும் நிலையை நான் நீங்குவேனானால் முயலை விட்டு விட்டு காக்கையை தேடிப் போனது போல் ஆகும்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீஸ்வரர்
பலன்: பிணிகள் நீக்கப்பெறல் இறைவி: கருந்தார்குழலியம்மை

192. நணியார் சேயார் நல்லார்தீயார் நாள்தோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்க்கு
அணியான் ஆரூர்ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அண்மையில் இருப்பவர்களும் தூரத்தில் இருப்பவர்களும் நல்லவர்களும் தீயவர்களும் (பேதங்கள் இன்றி) எங்கள் பிணிகளைத் தீர்த்து அருள் செய்யும் என வேண்டிக் கொண்டு இறைவனை, எங்களுக்கு மாணிக்கம் போன்றவனே பொன் போன்றவனே உமை மணாளா என்று போற்றினால் ஆரூர்ப் பெருமான் அவர்களை நெருங்கிவந்து அருள் செய்வான்.

தலம்: திருச்சேறை இறைவன்: சென்னெறியப்பர்
பலன்: வேண்டியவரம் பெறல் இறைவி: ஞானவல்லி

193. ஒன்றிய தவத்துமன்னி உடையனாய் உலப்பில்காலம்
நின்றுதம் கழல்கள் ஏத்தும் நீள்சிலை விசயனுக்கு
வென்றிகொள் வேடனாகி விரும்பிவெங் கானகத்துச்
சென்றுஅருள் செய்தார் சேறைச் சென்னெறிச் செல்வனாரே.

மனம் ஒருநிலைப்பட்டு பலகாலம் தவம் செய்து யீசன் அடிகளை வணங்கிய அர்ச்சுனனுக்கு வெற்றியைக் கொண்ட வேட உருவம் கொண்டு கொடிய காட்டிற்குள் சென்று அருள் செய்த சிவபெருமான் திருசசேறையில் உள்ள சென்னெறிநாதர் ஆவார்.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றிடம்கொண்டார்
பலன்: இறை அருள் பெறல் இறைவி: அல்லியங்கோதை

194. முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தாள் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே!

அப்பெண் முதலில் பெருமானுடைய பெயரை அறிந்தாள். பின் அப்பெருமான் இருக்கு அருள்வடிவை அறிந்தாள். அவர் இருக்கும் திருவாரூரையும் அறிந்தாள். அப்பெருமான் மீது கொண்ட பேரன்பு காரணமாய் அவர் மீது பைத்தியம் ஆனாள். தனது தாய் தந்தைகளையும் விட்டகன்றாள். உலகம் கொள்ளும் பழக்கவழக்க நெறிகளையும் தன்னையும் தனது பெயரையும் மறந்து பெருமானது திருவடிகட்கே ஆளானாள்.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றிடம்கொண்டார்
பலன்: நிலைத்த நல்வாழ்வு பெறல் இறைவி: அல்லியங்கோதை

195. நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தமும் எம்பிரானுடைய கோவில் புக்கு
புலர்வதன் அலகிட்டு மெழுக்கும் இட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி

தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் அடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே!

என் மனமே! உனக்கு நிலைத்த நல்வாழ்வு பெற எண்ணினால் நீ நாள்தோறும் அதிகாலையில் எம்பிரானாகிய சிவபெருமான் ஆலயத்துக்குச் சென்று குப்பைகளைப் பெருக்கி, நீர் தெளித்து மெழுகி, சுத்தப்படுத்து! தொடுத்த மலர் மாலைகளை பெருமானுக்கு சார்த்தி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கி, கங்கையைச் சடையில் வைத்த முழுமுதல் கடவுளே, சங்கரா, ஆரூர் பெருமானே என்று புகழ்ந்துபாடி கூத்தாடி வணங்குவாயாக.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றிடங்கொண்டார்
பலன்: இறைவன் அருள் பார்வை பெறல் இறைவி: அல்லியங்கோதை

196. உயிராவணம் இருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியில் உருவெழுதி
உயிராவணம் செய்திட்டு உன்கைதந்தால்
உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிராவணம் ஏறாது ஆனஏறு ஏறி
அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே என்னம்மானே நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே.

ஐராவதமாகிய தெய்வ லோக யானையில் ஏறாமல் காளை வாகனத்தில் ஏறி தேவர் உலகத்தை ஆட்சி செய்யாமல் திருவாரூரில் உன் ஆட்சியை செய்பவனே. நுண்மணலாகிய புற்று வடிவில் இருக்கும் பெருமானே உனதருளுக்காக, மூச்சை அடக்கி உன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டும், தம் மனத்தில் உனது திருவுருவத்தை ஓவியமாய் வரைந்து கொண்டு தங்களது உயிரையே உன் வசம் ஒப்படைத்தவர்களை உனது அருட்கண் பார்வையினால் உயர்வுபெற அருள்வாய். அவ்வாறு செய்யாத ஏனையோர்களுக்கு அருளமாட்டாய்.

தலம்: திருவாரூர் இறைவன்: புற்றிடம்கொண்டார்
பலன்: ஆட்சி பொறுப்பு பெறல் இறைவி: அல்லியம்கோதை

197. வண்டுலா மலர்கொண்டு வளர்சடைக்கு
இண்டை மாலைபுனைந்தும் இராப்பகல்
தொண்டராகித் தொடர்ந்து விடாதவர்க்கு
அண்டம் ஆளவும் வைப்பர் ஆரூரரே.

வண்டுகள் மொய்க்கும் அன்றலர்ந்த மலர்களால் பெருமானின் திருமுடிக்கு மாலைகட்டி வழிபாடு செய்து இரவும் பகலும் தொடர்ச்சியாக தொண்டு செய்வதை விட்டுவிடாத பக்தர்களை அவர் இவ்வுலகங்களையே ஆளும் பொறுப்பில் அமர்த்துவார்.

தலம்: திருப்பெருவேளூர் இறைவன்: பிரியாதநாதர்
பலன்: நற்பேறுபெறல் இறைவி: ஏலவார்குழலி

198. விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்
பரிவினால் பெரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மறுவிநான் வாழ்த்திஉய்யும் வகையது நினைக்கின்றேன்.

பரந்த மனப்பான்மையுடன் கூடிய அறிவினை இல்லாதவர்கள் வேறு வேறுசமயங்களைச் சார்ந்து சிவநெறிக்கு மாறுபட்ட கருத்துக்களை சொன்னால் அதையும் எம்பெருமான் ஏற்பார் அத்தகு நிலை உடைய பெருவேளூர் தெய்வத்தை அடைந்ததும் நான் துயர்களில் இருந்து விலகி வாழும் வகையினை நினைக்கின்றேன்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருவலிவலம் இறைவன்: மனத்துணைநாதர்
பலன்: ஐம்புலன் அடக்கப் பெறல் இறைவி: மாழையங்கண்ணி

199. தாயும்நீயே தந்தையும் நீயே சங்கரனே அடியேன்
ஆயநின்பால் அன்புசெய்ய ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.

வலிவலம் எனும் தலத்தில் உள்ள சிவமே எனக்கு தாயும் தந்தையும் நீதான். சங்கரனாகிய உன்பால் அன்பு காட்டி பணிய என் உள்ளம் நினைக்கிறது. ஆனால் என் உடலில் ஐம்புலன்

களானவை என் நினைவை மாற்ற நினைக்கின்றன. ஆதலால் உன் அருளை நல்குவாய்.

தலம்: திருக்கோளிலி இறைவன்: கோளிலிநாதர்
பலன்: உறவுகளின் நலம் பெறல் இறைவி: வண்டார்குழலி

200. நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளி
கோளாய நீக்கும் கோளிலியெம் பெருமானே!

திருக்கோளிலிய அருளாட்சி செய்யும் இறைவனின் திரு நாமத்தை அறிந்து அவனை வழிபட்டால் வாழ்நாட்கள் வீணாகாத வாறு நமது உறவுகளுக்கும் கோள்களால் உண்டாகும் துயர்களை நீக்கி, உறவுகள் நலம் பெறச் செய்வான். ஆதலால் பேதமை கொண்ட எனது நெஞ்சே அந்த நஞ்சை உண்ட திருநீலகண்ட னுக்கு தொண்டு செய்து வழிபடுவாய்.

தலம்: திருவாய்மூர் இறைவன்: வாய்மூர்நாதர்
பலன்: இறைவன் நம்மிடம் வரப்பெறல் இறைவி: பாலினூர் நன்மொழியாள்

201. வெந்தழல் வடிவினர் பொடிபூசி விரிதரு கோவண உடைமேலோர்
பந்தம் செய்தரவசைத் தொலிபாடி பலபலகடைதொறும் பலிநேர்வார்
சிந்தனைபுகுந்தெனக் கருள்நல்கி செஞ்சுடர் வண்ணர் தம் அடிபரவ
வந்தனை பல செய்ய இவர்காணீர் வாய்மூரடிகள் வருவாரே.

அனலே வடிவானவர், திருநீறு பூசிய திருமேனியில் கோவண ஆடை மீது நாகத்தைத் கட்டிக் கொண்டவர், வீடுகள் தோறும் வேத ஒலிகளை முழக்கி பிச்சையேற்பவர் செம்மை ஒளி வீசும் நிறைத்தவரான வாய்மூர் நாதர் என மனத்துள் புகுந்து அருள் தந்து அனைவரும் தன் திருவடிகளை வணங்குமாறு செய்து நம்மிடம் வருவார்.

தலம்: திருக்கேதீச்சுரம் இறைவன்: கேதீச்சுரர்
பலன்: வினைகள் தீர்க்கப் பெறல் இறைவி: கௌரியம்மை

202. பாடல்வீணையர் பலபல சரிதையர் எழுதுஉரைத்து அரு நட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சுண்டு இருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற்கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடிலாத கேதீச்சுரம் கைதொழ கெடும்இடர் வினைதானே.

வினையினை மீட்டி இசை பாடுபவரும், பல புராணங்கட்கு உரியவரும், காளை வாகனம் கொண்டவரும் அரிய நடனம் செய்பவரும் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆலகால விஷத்தை அருந்தியதால் கரிய நிறம் பெற்ற கழுத்தை உடையவரும் ஆன கேதீச்சுரம் எனும் கடற்கரையருகே அமைந்த கோவிலில் உறைபவரும் ஆன இறைவனை கைகூப்பி வணங் கினால் துன்பங்கள் உண்டாக்கும் வினைகள் தீரும்.

தலம்: திருஅகத்தியான்பள்ளி இறைவன்: அகத்தீசுவவர்
பலன்: துயர்கள் விலகப் பெறல் இறைவி: பாகம் பிரியா நாயகி

203. ஓதிஎல்லாம் உலகுக்கு ஓர் ஒண்பொருளாகி மெய்ச்
சோதியென்று தொழுவார் அவர்துயர் தீர்த்திடும்
ஆகியெங்கள் பெருமான் அகத்தியான் பள்ளியை
நீதியால் தொழுவார் அவர் வினை நீங்குமே.

அகத்தியான் பள்ளியில், அருள்தரும் இறைவனே வேதங்களை ஓதுபவனே, மெய்யொளியே! உலகங்கட்கெல்லாம் ஒளி தரும் பொருளானவனே என்று புகழ்ந்து முறைப்படி வணங்கினால் நமது துன்பங்கள் அகலும்.

தலம்: திருக்கொள்ளம்புதூர் இறைவன்: வில்வனநாதர்
பலன்: அருள் பெருகப் பெறல் இறைவி: சௌந்தர நாயகி

204. ஓடம் வந்தணையும் கொள்ளம்புதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல வந்துக: சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே.

ஓடங்கள் வந்து சேரும் ஆற்றின் கரையில் உள்ள திருக் கொள்ளம்புதூரில் ஆடலை விரும்பி ஆடும் நமது இறைவனை நம் மனத்தால் நினைப்பதற்கு விரைந்து செல்க, அப்படி உங்கள் சிந்தையில் அவரைத் தொழுதால் அவரது அருள் கிட்டும்.

தலம்: திருக்காறாயில் இறைவன்: கண்ணாயிரநாதர் ஆதிவிடங்கர்
பலன்: வினைகள் விலகப்பெறல் இறைவி: கைலாயநாயகி

205. தாயானே! தந்தையும் ஆகிய தன்மைகள்
ஆயானே! ஆயநல் அன்பர்க்கு அணியானே
சேயானே சீர்திகழும் திருக்காறாயில்
மேயானே என்பவர் மேல்வினை மேவாரே!

தாயுமானவனே தந்தைபோல் காப்பவனே, நல்ல தொண்டர்களுக்கெல்லாம் நெருங்கி நிற்பவனே, செம்மை நிறத்தானே, புகழ்மிக்க திருக்காறாயிலில் கோவில் கொண்டவனே எனப் பணியும் அன்பர்களுக்கு வினைகள் விலகும்.

தலம்: திருவலிவலம் இறைவன்: மனத்துணைநாதர்
பலன்: மனம் மாசு நீங்கப் பெறல் இறைவி: மாழையங்கண்ணி

206. ஒல்லைஆறி, உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மை செய்து காமவினை யகற்றி
நல்லவாறே உன்றன் நாமம் நவில நவின்றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே.

மனப் படபடப்பு நீங்கி மனத்தில் உன்னை நிறுத்தி மன மாசுகள் நீங்கும் வண்ணம் சிற்றின்ப உணர்வுகளை நீக்கி, தீய சொற்களைத் தவிர்த்து உன் திருநாமத்தைக் கூறி வழிபடுவேன். வலிவலத்தில் உள்ள பெருமானே.

தலம்: திருதெங்கூர் இறைவன்: வெள்ளிமலைநாதர்
பலன்: பழவினைகள் நீங்கப் பெறல் இறைவி: பெரியநாயகி

207. பண்டு நான் செய்த வினைகள் பறையவோர் நெறி பயப்பார்
கொண்டல் வான்மதிசூடி குரைகடல் விடமணி கண்டர்
வண்டுமா மலர்ஊதி மதுவுண இதழ் மறிவு எய்தி
விண்டவார் பொழில் தெங்கூர் வெள்ளிய குன்ற மர்ந்தாரே.

வண்டுகள் மலர்களில் தேன் உண்ண, இதழ் விரிக்க, மலர் சோலைகள் செறிந்த திருத்தெங்கூரில் வெள்ளிமலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் மேகங்கள் சூழ்ந்திருக்கும் வெண்ணிலவின் பிறையை அணிந்து, கடலுள் எழுந்த விடமுண்ட நீலகண்டராய் வந்து நான்செய்த முன்வினைகள் மறையும்படி அருள் செய்வார்.

சுந்தரர்

தலம்: திருக்கானப்பேர் (காளையார்கோயில்) இறைவன்: காளையீஸ்வரர்
பலன்: இறைவன் திருக்கருணை பெறல் இறைவி: சொர்ணவல்லி

208. நாதனை நாதம்மிகுந்து ஓசையது ஆனவனை
ஞானவினக் கொளியாம் ஊனுயிரை பயிரை
மாதனை மேதகுதன் பக்தர் மனத்துறையும்
பற்றுவி டாதவனை குற்றமில் கொற்றவனை
தூதனை யென்றனையாள் தோழனை நாயகனை
தாழ்மகரக் குழையும் தோடும் அணிந்த திருக்
காதனை நாயடியேன் எய்துவது யென்று கொலோ
கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே!

உலகத்தாரின் தலைவனை நுண்ணிய இசை ஒசை ஆனவனை ஒளி விளக்காய் ஒளிர்பவனை, உடலுக்குள் உயிராய் அமைந்த மாதொருபாகனை, உயர்வு பொருந்திய தனது பக்தர்களின் மனத் தகத்தே வாழும் பற்றை விடாதவனை குற்றமற்ற கோமானை, எனக்கு தூது சென்றவனும் எனை ஆளும் தோழனும் ஆனவனை, மகரக் குழையும் தோடும் அணிந்த திருச்செவிகள் உடையவனும் ஆன வயல்கள் சூழ்ந்த கானப்பேர் (எனும் காளையார்கோவில்) அமர்ந்த காளையை எப்போது காண்பேன்.

தலம்: திருஅரிசில்கரைப்புத்தூர் இறைவன்: படிக்காசு வைத்த பரமர்
பலன்: செல்வம் பெருகப் பெறல் இறைவி: சிவாம்பிகை

209. அகத்தடிமை செய்யும் அந்தணன் தான்
அரிசில்புனல் கொண்டுவந்து ஆட்டுவிப்பான்
மிகத்தளர்வெய்தி குடத்தையும் நும்முடி
மேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற் படியும்
வரும் என்று ஒருகாசினை நின்ற நன்றி
புகழ்த்துணை கைப்புகச் செய்து உகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர் புனிதனீரே.

சோலைகள் சூழ்ந்த அரிசிற்கரைப்புத்தூரில் அருள் செயும் புனிதரே நீங்கள், தினம் அரிசிலாற்றில் இருந்து கொணர்ந்த நீரால் உமக்கு அபிஷேகம் செய்து வந்த மறையவனான புகழ்த்துணை

நாயனார் ஓர்நாள் வறுமையால் ஏற்பட்ட சோர்வு காரணமாய் நீர்க்குடத் தினை சுமக்க வலியற்றவராய் உனது திருமுடியில் குடத்தை விழும்படி விட்டு விட்டார். அதுகண்டு அவரது தளர்வையும் வறுமையையும் நீக்குவதற்காக தினம் ஒரு பொற்காசினை படியாக அளித்து அருளினீர்.

தலம்: திருமுதுகுன்றம் விருத்தாசலம் — இறைவன்: பழமலைநாதர்
பலன்: எழுபிறப்பிலும் நோய் நீங்கப்பெறல் — இறைவி: பெரியநாயகி

210. அரித்தநம்பி அடிகை தொழுவார் நோய்
அகற்று நம்பி முன்னை யீண்டு உலகங்கள்
தெரித்த நம்பி ஒரு சேஉடை நம்பி
சில்பலிக்குஎன்று அகம்தோறும் மெய்வேடம்
தரித்த நம்பி சமயங்களின் நம்பி
தக்கன்தன் வேள்விபுக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி எனனை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே.

விருத்தாசலம் எனும் திருமுதுகுன்றில் உள்ள பழமலைநாதர் நமது பகைவர்களை காய்ந்த ஐயன் அவரது திருவடியை தொழுது பணிபவர்களின் நோய் தீர்க்கும் ஐயன், முன்பு இந்த உலகங்கள் அனைத்தையும் உண்டாக்கிய ஐயன் ஓர் காளையை வாகனமாய் கொண்ட ஐயன், வீடுகள் தோறும் பிச்சையேற்பதற்காக, பிட்சாடன மூர்த்தியான வேடம் தரித்த ஐயன், தக்கனின் வேள்வியில் கலந்து கொண்ட தேவர்களை அழித்த ஐயன், என்னை ஆட்கொண்டு ஏழு பிறப்பிலும் எமது ஐயனாய்த் திகழ்பவன்.

தலம்: திருநள்ளாறு — இறைவன்: தர்ப்பாரண்யேஸ்வரர்
பலன்: பிழைகள் பொறுக்கப் பெறல் — இறைவி: போகமார்த்த பூண்முலையாள்

211. மாதினுக்கு உடம்புஇடம் கொடுத்தானை
மணியினைப் பணிபவர் வினைகெடுக்கும்
வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளிவந்த

தூதனைத் தன்னை தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை, அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே.

மலைமகளைத் தன் இடப்பாகத்தில் வைத்தவனும், மாணிக்கம் போன்றவனும், தன்னை வணங்குபவர்களது வினை தீர்ப்பவனும், வேத வடிவானவனும், வேள்விகள் செய்யும் முனிவர்களால் வணங்கப்படுபவனும் மலங்கள் அற்றவனும் எனக்கு எளிய தூதனாக வந்தவனும் என்னைத் தோழனாகக் கொண்டவனும் எனது குற்றங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ளும் என் தலைவனை நாய் போன்ற நான் மறந்தால் வேறெதனை நினைப்பேன்.

திருஞான சம்பந்தர்

தலம்: திருஆலவாய் (மதுரை) இறைவன்: சொக்கலிங்கப் பெருமான்

பலன்: புகழ் பெருகப் பெறல் இறைவி: மீனாட்சியம்மை

212. மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டி மாதேவி
பணிசெய்து நாடொறும் பரவ
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

சோழ மன்னனின் மகளும் வரிகளுடைய வளையல்களை அணிந்தவளும், திருமகளைப் போன்ற வடிவுடையவளும் ஆன பாண்டிய மன்னனின் மனைவி மங்கையர்க்கரசியார் நாள் தவறாமல் சிவபெருமானை வணங்கித் தொழுது சிவனடியார் கட்கு பல்லாற்றானும் உதவி செய்பவர் அவர் வணங்கும் தீ வடிவானவன், பூதங்களின் தலைவன், வேதங்களை உரைத்தவன் ஆன சிவபெருமான் மீனாட்சி அம்மையுடன் அமர்ந்த இடம் ஆலவாயாம்.

தலம்: திருஆப்பனூர் இறைவன்: ஆப்பனூர்க்காரணர்
பலன்: மறுபிறப்பின்மை இறைவி: குரவம்கமழ் குழலம்மை

213. பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை அணியாப்ப னூரானை
பணியும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே.

திருஆப்பனூரில் உறையும் பெருமான் அடியவர்களின் நோயையும் மறுபிறப்பையும் நீக்குவான். அலைதவழும் கங்கையைச் சடையில் ஏந்தியவன் சுடுகாட்டில் அனலைக் கையில் ஏந்தி நடனம் செய்பவன் அத்தகைய இறைவனைப் பணிந்து வணங்குபவர்களது வினைகள் அகலும்.

தலம்: திருப்பரங்குன்றம் இறைவன்: பரங்கிரிநாதர்
பலன்: நோய்கள் தவிக்கப்பெறல் இறைவி: ஆவுடைநாயகி

214. பொன்னியல் கொன்றை பொறிகிளர் நாகம் புரிசடை
துன்னிய சோதி ஆகிய ஈசன் தொன்மறை
பன்னிய பாடல் ஆடலன் மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்கில்லை உறுநோயே.

திருப்பரங்குன்றத்து ஈசன் பொன்னிறமான கொன்றை மாலையணிந்து, படம் கொண்ட நாகத்தை தனது பின்னல்கள் உள்ள சடைமுடியில் கொண்டவன் வேதங்களைப் பாடி ஆடுபவன் அவனை நினைக்கும் மனமுடையவர்க்கு நோய்கள் வராது.

தலம்: திருஆலவாய் இறைவன்: சொக்கலிங்கம்
பலன்: நோய் தீரல் இறைவி: மீனாட்சி
திருநீற்றுப் பயன்

215. மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமைபங்கன் திருஆலவாயன் திருநீறே.

திருநீறு மந்திரம் போல அனைவரையும் காக்கும். தேவர்களைக் காட்டிலும் மேன்மை தருவது அழகுமிக்கது, அனைவராலும் வணங்கி அணியப்படுவது, சைவ சமயங்களில் உள்ளது, ஆகமங்களால் கூறப்படுவது அந்தத் திருநீறு எதுவெனில்

பவளச் செவ்விதழ் கொண்ட உமையாம்பிகையை இடப்புறம் கொண்ட ஆலவாய் சிவனது திருநீறுதான்.

தலம்: திருஆலவாய் இறைவன்: சொக்கலிங்கம்
பலன்: அருள் மிகையாகப் பெறல் இறைவி: மீனாட்சி

216. வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே!
காடலால அவாய் இல்லாய் கபாலிநீள் கடிமதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே!

தனது வீடுகளில் பெறுவதைத் தவிர வேறு எதுவும் நாடாத மெய்ஞ்ஞானிகள் உனது பொன்னடிகளைப் போற்றிப் பாடுவார். அப்பாட்டின் மொழிக்கு பொருளாய் அமைந்தவரே அவ்வடியார்கள் போற்றும் பண்புகளை உடையவரே சுடுகாட்டைத் தவிர வேறெதையும் விரும்பாதவரே ஆலவாய் அரசே அங்கு உனது திருவிளையாடல்களைப் புரிந்தது ஏன்?

சுந்தரர்

தலம்: காஞ்சிபுரம் இறைவன்: ஏகாம்பரநாதர்
பலன்: வினைத்துன்பம் அண்டாது இறைவி: காமாட்சியம்மை

217. அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தி எழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர் புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

முன்னைப் பழவினைகள் என்னை அண்டாதிருக்கும்படி காலை அந்தி, மாலை அந்தி, நண்பகல் ஆகிய முப்பொழுதிலும், அஞ்செழுத்து இறைபதம் மனத்துள் கொண்டவாறு திருவாரூர் சென்று என் தந்தையைப் போன்ற யீசனை நான் என்று அடைவேன்.

தலம்: திருக்கடவூர் வீரட்டம் இறைவன்: அமிர்தகடேசர்
பலன்: இறைதுணை பெறல் இறைவி: அபிராமி

218. மண் நீர் தீவெளிகால் வருபூதங்கள் ஆகிமற்றும்
பெண்ணோடு ஆண், அலியாய் பிறவா ஒரு ஆனவனே
கண்ணாரும் மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணாயென் அமுதே எனக்கார் துணை நீஅலதே.

நிலம், நீர், காற்று, தீ, வான் என ஐம்பூதங்களின் வடிவே! பெண்ணாகவோ, ஆணாகவோ அல்லது இரண்டுமற்ற அலியாகவே பிறப்பு இல்லாதவரே! எனது கண்ணுக்குள் மணியாய் இருப்பவரே, கடலூர் வீரட்டத்தில் அருளாட்சி செய்யும் அண்ணா எனது அமிர்தமே உனை விட்டால் வேறு எனக்கு யார் துணை யாவார்!

தலம்: திருஅஞ்சைக்களம் இறைவன்: அஞ்சைக்களத்து அப்பர்
பலன்: பிறப்பு இறப்பு இன்மை இறைவி: உமையம்மை

219. சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே
சிறியார் பெரியார் மனத்தேறல் உற்றால்
முந்தித் தொழுவார் இறவார் பிறவார்
முனிகள் முனியே! அமரர்க் கமரா!
சந்தித் தடமால் வரைபோல் திரைகள்
தணியாது இடறும் கடலங்கரைமேல்
அந்தித்தலைச் செக்கற்வான் ஒத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே.

அந்திமாலையில் பெரிய மலைகள் போல் அலைகள் வந்து மோது கடற்கரையில் செக்கர்வானம் நிறமுடைய அஞ்சைகளத்து அப்பனே உன்னை மனத்தில் கொண்டு துதிப்பவர்கட்கு கைக்கனி போல விளங்குவாய் முனிவர்கள் பணியும் மகாமுனிவனே தேவர்களுக்கும் மேலானவனே உன்னை நன்குணர்ந்து வணங்கித் தொழுபவர்கள் பெரியவர்களாயினும் சிறியவர்களாயினும் இறக்கமாட்டார். மீண்டும் பிறக்கமாட்டார்.

திருநாவுக்கரசர்

தலம்: திருத்தலையாலங்காடு இறைவன்: ஆடவல்லநாதர்
பலன்: நரகம் தவிர்க்கப்பெறல் இறைவி: திருமடந்தையம்மை

220. தொண்டர்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னை
சூழ்நரகில் வீழாமே காப்பான் தன்னை
அண்டத்துக்கு காப்பாலைக்கு அப்பாலானை
ஆதிரைநாள் ஆதரித்த அம்மான்தன்னை
முண்டத்தில் முளைத்தெழுந்த தீஆனானை!
மூவுருவத்து ஒருவராய் முதலாய் நின்ற
தண்டத்தில் தலையாலங் காடன் தன்னை
சாராதே சாலநாள் போக்கினேனே!

தமது தொண்டர்களை நன்னெறி வழியில் செலுத்துபவராய், அவர்களை நரகத்தில் விழாமல் காப்பாற்றுபவராய் திருவாதிரை நட்சத்திரத்துக்கு உரியவராய் அண்டங்களையெல்லாம் கடந்து நின்றவராய் மும்மூர்த்திகளின் வடிவத்தை தான் ஒருவரே பெற்றவராய், நெற்றி மத்தியில் தீச்சுடர் கொண்டவராய், தலையாலங்காட்டில் இறைவனாய் இருக்கும் எம்பெருமானிடம் சேராமல் அதிக வாழ்நாளை வீணாக்கி விட்டேனே.

தலம்: திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் இறைவன்: சொர்ணபுரீசர்
பலன்: பந்தபாசம் அகலப்பெறல் இறைவி: சொர்ணபுரிஸ்வரி

221. மாசார் பாசம் மயக்கறு வித்து என்உள்
நேசமாகிய நித்தன் மணாளனை
பூசநீர் கடுவாய்க்கரை தென்புத்தூர்
ஈசனேஎன இன்பமது ஆயிற்றே.

மாசுள்ள பந்தபாச மயக்கங்களை அகற்றுவித்து எனக்குள் அன்பு பெருகச் செய்த இறைவன் நீர்வந்து கரையில் மோதும் கடுவாய்க்கரைப் புத்தூரில் உள்ளான் அவனை வணங்கினால் இன்பம் கிட்டும்.

தலம்: திருச்சேறை இறைவன்: சென்னெறியப்பர்
பலன்: அச்சம் நீங்கப்பெறல் இறைவி: ஞானவல்லி

222. குலங்கள் என்செய்வ குற்றங்கள் என்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையில் சென்னெறி மேவிய
அலங்கனார் உளர் அஞ்சுவது என்னுக்கே.

நாம் பிறந்த குலங்களோ நமது குற்றங்களோ நமக்கு துயர் இல்லை. அதனால் நெஞ்சமே நீ சோர்ந்து விடாமல் திருச்சேறை மாலை மார்பன் நமக்கு துணை வருவார் அஞ்சாதே!

தலம்: திருஅவளிவணல்லூர் இறைவன்: சாட்சிநாயகேஸ்வரர்
பலன்: மகிழ்வு பெருகப் பெறல் இறைவி: தம்பரிவுடையார் சௌந்தரநாயகி

223. ஏனமாய் இடர்ந்த மாலும், எழில்தரு முளரியானும்
ஞானம்தான் உடையாராகி நண்ணிடும் எம்பிரானார்
சேனம்தான் இலாஅரக்கன் செழுவரை எடுக்க ஊன்றி
ஆனந்த அருள்கள் செய்தார் அவளி வணல்லூராரே.

வராக மூர்த்தியாய் பூமியைத் தோண்டிச் சென்ற திருமாலும், அழகு பொலியும் தாமரை மலரில் உள்ள பிரமனும் வணங்கும் எம்பெருமான், இராவணன் கயிலைமலையை எடுக்க முயன்ற போது தம்கால் விரல்களை ஊன்றி அவனை நலிவு பெறச் செய்து பின்னர் அவன் மகிழ்ச்சி பெறும்படி அருள் செய்தவர் அவளிவணல்லூரில் இருக்கிறார்.

தலம்: திருப்பூவனூர் இறைவன்: புட்பவனநாதர்
பலன்: தலைமைப்பதவி பெறல் இறைவி: கற்பகவல்லி

224. அனுசயப்பட்டு அதுஇது என்னதே
கனிமனத்தோடு கண்கள் நீர்மல்கப்
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதரின் தலைஆன மனிதரே.

நாம் இந்த இழிபிறவி பெற்றோமே என கழிவிரக்கம் கொள்ளாமல் கனியும் மனத்தோடு கண்ணீர்மல்க பூவனூரானைப் போற்றினால் தலைமைப்பதவி கிட்டும்.

தலம்: திருப்பூவனூர் இறைவன்: புட்பவனநாதர்
பலன்: தலைமைப்பதவி பெறல் இறைவி: கற்பகவல்லி

225. பூவனூர் புனிதன் திருநாமம்தான்
நாவில் நூறுநூறு ஆயிரம் நண்ணினார்
பாவமாயின மாறிப் பறையவே
தேவர் கோவினும் செல்வர்கள் ஆவரே.

பூவனூரில் உள்ள சிவபெருமான் திருப்பெயரை கோடி முறை செபித்து அவனடியை அடைந்து வணங்குபவர்கள் தங்களது பாவங்கள் நீங்கப்பெற்று மறைய இந்திரனைவிட செல்வம் மிக்கவராவர்.

தலம்: திருவெண்ணியூர் இறைவன்: வெண்ணிக்கரும்பர்
பலன்: இறைவனின் அண்மை பெறல் இறைவி: அழகிய நாயகி

226. வெண்ணித் தொல்நகர் மேயவெண் திங்களார்
கண்ணித் தொத்த சடையர் கபாலியார்
எண்ணித் தம்மை நினைந்திருந் தேனுக்கு
அண்ணித் திட்டு அமுதுஊறும் என் நாவுக்கே.

தொன்மை மிகுந்த வெண்ணியூரில், நிலவை சூடியவரும் பின்னலிட்ட சடை உடையவரும், பிரம்ம கபாலத்தை ஏந்தியவரு மான வெண்ணிக் கரும்பரை மனத்தால் நான் நினைத்தவுடன் எனது நாவில் அமிர்தம் ஊறும்படி செய்து எனது அண்மையில் வந்தருளினார்.

தலம்: திருச்சேறை இறைவன்: சென்னெறியப்பர்
பலன்: தவப்பேறு பெறல் இறைவி: ஞானவல்லி

227. என்னமாதவம் செய்தனை நெஞ்சமே
மின்னுவார் சடை வேத விழுப்பொருள்
சென்னெல் ஆர்வயல் சேறையுள் சென்னெறி
மன்னுசோதி நம்பால் வந்து வைகவே!

என் நெஞ்சே, நெல்வயல்கள் சூழ்ந்த திருச்சேறையில் நமக்கு நல்ல தூய நெறிகளைக் காட்டுவதற்காக சோதிவடிவாய் உள்ள சிவன் வந்து நம்முடன் வாழ்வதற்கு நீ என்ன பெருந்தவத்தைச் செய்தாய்.

தலம்: திருச்சேறை இறைவன்: சென்னெறியப்பர்
பலன்: அறிவு பெருகப் பெறல் இறைவி: ஞானவல்லி

228. பூரியா வரும் புண்ணியம், பொய்கெடும்
கூரியது ஆயஅறிவு கைகூடிடும்
சீரியார் பயில் சேறையுள் சென்னெறி
நாரிபாகன் நாமம் நவிலவே.

திருச்சேறைப்பதி யிசனான அம்மையப்பனின் திருநாமத்தை சொல்லி பணிந்து வணங்கினால் மிகுதியாகப் புண்ணியம் சேரும். பொய்மைகள் நீங்கிடும். கூர்மை மிக்க அறிவு கைகூடும்.

தலம்: திருப்பேரெயில் இறைவன்: செகதீசுவரர்
பலன்: பிழைகள் நீக்கப் பெறல் இறைவி: பெண் அமிர்தநாயகி

229. உழைத்தும் துள்ளியும் உள்ளத்துள்ளே உரு
இழைத்தும் எந்தை பிரானென்று இராப்பகல்
அழைக்கும் அன்பினராய அடியவர்
பிழைப்பு நீக்குவார் பேரெயில் ஆளரே.

சிவத்தொண்டு புரிவதற்காக உழைப்பு நல்கி, மனத்துள்ளே சிவனுருவத்தை நினைந்து எம்பெருமானே என இரவு பகலாக

அழைத்து அன்பு கொண்டவரான அடியவர்களின் பிழைகளை பேரெயில் ஆண்டவர் நீக்குவார்.

தலம்: திருக்கோளிலி இறைவன்: கோளிலிநாதர்
பலன்: நோய்கள் நீங்கப் பெறல் இறைவி: வண்டார்குழலி

230. நாளும் நம்முடை நாட்கள் அறிகிலோம்
ஆளும் நோய்களோர் ஐம்பதோடு ஆறெட்டும்
ஏழமைப் பட்டிருந்து நீர் நையாதே
கோளிலி அரன்பாதம் கூறுமே.

நாட்கள்தோறும் நமக்கு இன்னும் எத்தனை வாழ்நாட்கள் உள்ளன என்பதை நாம் அறியோம். நம்மை வாட்டும் 98 வகை நோய்களால் துன்பப்பட்டு நலியாமல் கோளிலிநாதன் திருவடிகளைப் பாடி பணிந்தால் நோய்த் துன்பம் நீங்கும்.

தலம்: திருக்கன்றாப்பூர் இறைவன்: நடுதறியப்பர்
பலன்: இறைவன் திருக்காட்சி நெஞ்சில் பெறல் இறைவி: மாதுமையம்மை

231. ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார்கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன் முன் மதியம் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகம்குழைத்து மெய்யரும்பி அடிகள்பாதம்
கையினால் தொழும் அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.

நமது தொண்டையில் சளி அடைத்துக்கொண்டு உயிர் உடலை விட்டு நீங்கினால், வீட்டில் உள்ளவர்கள் உயிர் பிரிந்த உடலுக்கு மை எழுதி, மாலை சூட்டி மயானத்தில் வைப்பர். அங்ஙனம் வைப்பதற்கு முன்பாகவே பிறைச் சந்திரனைச் சூடிக் கொண்ட ஐயனுக்கு ஆட்பட்ட தொண்டனாகி அன்பு பெருக, உள்ளம் குழைய, உடல் சிலிர்ப்புற்று அவரை தொழுதால் கன்றாப்பூர் நடுதறி நாதர் நம் நெஞ்சகத்து உள்ளே வருவதைக் காணலாம்.

தலம்: திருவலிவலம் இறைவன்: மனத்துணைநாதர்
பலன்: பயிர் விளைச்சல் பெருகப் பெறல் இறைவி: மாழையங்கண்ணி

232. உய்த்தவன்கண் உடல்தனக்கோர் உயிரானான்காண்
ஓங்காரத் தொருவன்காண் உலகுக் கெல்லாம்
வித்தவன்காண் விண்பொழியும் மழையானான்காண்
விளைவுஅவன்காண் விரும்பாதார் நெஞ்சத் தென்றும்
பொய்த்தவன்காண் பொழில்ஏழும் தாங்கினான்காண்
புனலோடு வளர்மதியும் பாம்பும் சென்னி
வைத்தவன்காண் வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண் அவனென் மனத்துளானே!

உயிர்களனைத்தையும் துயர்களினின்று மீட்டுக்காத்தவன், உடலுக்குள் உயிராய் பொருந்தி இருப்பவன், ஓங்கார வடிவாய் இருப்பவன், பயிர்களின் விதையாக அவை வளர மழையும் ஆகி விளைவும் ஆகி இருப்பவன் தன்னை விரும்பாதவர்களை அடையாதவன், சோலைகள் ஏழையும் காப்பவன், கங்கை, பிறைச்சந்திரன், பாம்பும் சூடிய திருமுடியான், தேவர்கள் கொண்டாடும் அப்பெருமகன் வலிவலத்திலும் என் மனத்திலும் உறைபவன்.

தலம்: திருவாய்மூர் இறைவன்: வாய்மூர்நாதர்
பலன்: இறைவன் நமைத் தேடி வரப் பெறல் இறைவி: பாலினு நன்மொழியம்மை

233. எங்கே என்னை இருந்து இடம் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய் மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று அருளிப் போனார் என்கொலோ!

தென்னைகள் சூழ்ந்த திருவாய்மூர் செல்வர் எனை அங்கு வரும்படி நான் இருக்கும் இடத்தை தேடி வந்து தமது அடையாளத்தை காட்டி அருள் செய்தார்.

தலம்: திருக்கோளிலி இறைவன்: கோளிலி நாதர்
பலன்: வினைதீரப் பெறல் இறைவி: வண்டார்குழலி

234. விண்ணுளார் தொழுது ஏத்தும் விளக்கினை
மண்ணுளார் வினை தீர்க்கும் மருந்தினை
பண்ணுளார் பயிலும் திருக் கோளிலி
அண்ணலார் அடியே தொழுது உய்ம்மினே.

திருக்கோளிலி நாதன் விண்ணவர்கள் தொழுது ஏற்றும் விளக்காவான், மண்ணில் உள்ளவர்களது வினைகளைத் தீர்க்கும் மருந்து போன்றவன் ஆதலால் இசை வல்லுனர்கள் தமது பாடுபொருளாய்க் கொண்ட அவனை வணங்கி வாழ்வீர்களாக.

திருஞானசம்பந்தர்

தலம்: திருஆடானை இறைவன்: ஆதிரெத்தினேஸ்வரர்
பலன்: வினைகள் தீரப் பெறல் இறைவி: அம்பாயிரவல்லி

235. துலங்கு வெண்மழு வேந்திச் சூழ்சடை
அலங்க லானுறை ஆடானை
நலங்கொள் மாமலர் தூவி நாடொறும்
வலங்கொள் வார்வினை மாயுமே.

ஒளிபொருந்திய வெள்ளைநிற மழுவாயுதத்தை ஏந்தியவரும் ஆடானையில் மாலைகள் சூடி அருள் செய்பவரும் ஆன இறைவனை தினம்தோறும் பல மலர்களைச் சாத்தி திருவலம் செய்பவர்கட்கு வினைகள் அழியும்.

தலம்: திருப்புனவாயில் இறைவன்: பழம்பதிநாதர்
பலன்: இடர் நீங்கப் பெறல் இறைவி: கருணை நாயகி

236. பெருங்கடல் நஞ்சு அமுதுண்டு உகந்து பெருங்காட்டிடை
திருந்திள மென்முலைத்தேவி பாட நடமாடிப் போய்
பொருந்தலர் தம்புரம் மூன்றும்எய்து புனவாயிலில்
இருந்தவன் தன்கழல் ஏத்துவார்கட்கு இடரில்லையே!

கடலில் எழுந்த நஞ்சினை அமிர்தமாகக் கருதி உண்டவரும் அழகிய மென்மையான மார்பகம் உடைய தேவி பதம் பாட சுடுகாட்டில் நடனம் செய்தவரும் பகைவர்களின் மூன்று புரம்களையும் எய்து அழித்தவரும் ஆன திருப்புனவாயிலில் உள்ள

சிவபெருமானின் திருவடிகளை தொழுது வணங்குபவர்கட்கு இடர்கள் வராது.

தலம்: ராமேஸ்வரம் இறைவன்: இராமநாதர்
பலன்: தோஷங்கள் நீங்கப்பெறல் இறைவி: மலைவளர்காதலி
பர்வதவர்த்தினி

237. தேவியை வவ்விய தென்னிலங்கை தசமாமுகன்
பூவியல் மூடி பொன்றுவித்த பழி போய்அற
ஏஇயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்மேல் வினை கெடுமே.

தனது மனைவியாகிய சீதையைக் கவர்ந்து சென்ற தென்னிலங்கை இராவனனது உயிர் மாயுமாறு அவனது மணி மகுடங்களை அழித்த தோஷங்களை நீக்கிக் கொள்வதற்காக வில்லும் அம்பு கொண்ட ஸ்ரீ ராமன் செய்து வைத்த திருக்கோவிலான ராமேஸ்வரத்தை அடைந்து அங்குள்ள சிவபெருமானை மனத்தில் கொண்டு வணங்கினால் தோஷங்கள் விலகும்.

தலம்: இராமேஸ்வரம் இறைவன்: இராமநாதர்
பலன்: சிவபக்தி பெருகப் பெறல் இறைவி: மலைவளர்காதலி

238. நீரினார் புன்சடை பின்புதாழ நெடுவெண் மதிசூடி
ஊரினார் துஞ்சிருள் பாடியாடும் உவகை தெரிந்துணர்வார்
ஏரினார் பைம்பொழில் வண்டுபாடும் இராமேச்சுரமேய
காரினார் கொன்றைவெண் திங்கள் சூடும் கடவுள் செயும் செயலே!

வண்டுகள் பாடும் பசிய சோலைகள் திகழும் ராமேஸ்வரத்தில் இருப்பிடமாய் கொண்ட சிவபெருமான் பருவ காலத்தில் மலர்ந்த கொன்றையையும், வெண் பிறையையும் சூடிக் கொண்டவர், தலைமீது கங்கையையும் கொண்ட திருமுடியாயளர். அவர் நள்ளிரவில் பாடலுடன் ஆடலும் செய்பவர். அவரை மனமகிழ்வுடன் உணர்ந்து வழிபடுபவர்க்கு சிவபக்தி பெருகும்.

தலம்: திருஏடகம் இறைவன்: ஏடகநாதர்
பலன்: கவலைகள் அகலப் பெறல் இறைவி: ஏலவார்குழலி

239. குண்டலம்திகழ் காதுடை குழகனை
வண்டலம்பும் மலர்க்கொன்றை வான்மதியணி
செண்டலம்பும் விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலும் கவலைகள் நீங்குமே.

வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரையும் விண்ணில் உள்ள பிறைச் சந்திரனையும் அணிந்து காதுகளில் குண்டலங்கள் திகழ ஓசைகள் எழுப்பும் காளை வாகனத்தில் அமர்ந்துள்ள எழில்மிக்க சிவபெருமானைக் கண்டு கைகூப்பித் தொழுபவர் களின் கவலைகள் அகன்று போகும்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருக்கானப்பேர் காளையார்கோவில் — இறைவன்: காளையீசர்
பலன்: உயர்வு பெறல் — இறைவி: சொர்ணவல்லி

240. வாளினான் வேலினான் மால்வரை எடுத்த திண்
தோளினான் நெடுமுடி தொலையவே ஊன்றிய
தாளினான் கானப்பேர் தலையால் வணங்குவார்
நாளும்நாள் உயர்வதோர் நன்மை காண்பரே.

வாள் வல்லமையும், வேல் வல்லமையும் கொண்டு கயிலை மலையை எடுக்க முயன்ற இராவணனது நெடிய முடிகள் அழியுமாறு தனது திருவடிப் பாதத்தை ஊன்றிய கானப்பேர் (காளையார்கோவில்) இறைவனை நாட்கள் தோறும் தலையாரக் கும்பிட்டு வணங்கினால் வாழ்வில் உயர்வுகளைப் பெறுவர்.

தலம்: திருக்குற்றாலம் — இறைவன்: குற்றால நாதர், கூத்தர்
பலன்: யமபயம் தீரல் — இறைவி: சிவகாமியம்மை

241. நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலை
கோலமஞ்ஞை பேடையொ டாடும் குற்றாலம்
காலன் தன்னை காலால் காய்ந்த கடவுள் எம்
சூலபாணி நன்னகர் போலும் தொழுவீர்காள்!

பசுமையான நெய்தல் நிலங்களும் குளிர்ச்சி மிக்க சுனைகளும் நெடிய சோலைகளில் அழகிய ஆண் மயில்கள், பெண் மயில் களுடன் ஆடல் செய்யும் திருக்குற்றாலத்தில் எமனை காலால் உதைத்தவரும் திரிசூலம் கொண்டவருமான சிவனைத் தொழுது வணங்குவீர்.

தலம்: திருப்பூவணம் இறைவன்: பூவணநாதர்
பலன்: நன்மை பெருகும் இறைவி: மின்னம்மை

242. மாதமர் மேனியனாகி வண்டொடு
போதமர் பொழில்அணி பூவணத்துறை
வேதனை விரவலர் அரணம் மூன்றெய்த
நாதனை அடிதொழ நன்மையாகுமே.

உமையம்மையை ஓர் பாகத்தில் கொண்டவனாய், வண்டுகள் மலர்களின் இதழ்களில அமர்ந்து தேன் பருகுகின்ற சோலைகள் சூழ்ந்த எழில்மிகு, வேதப்பொருளாய் விளங்குபவனாய், திரிபுர மதில்கள் மூன்றையும் அழித்த சிவபெருமான் பொன்னடிகளை வணங்கினால் நன்மைகள் பெருகும்.

தலம்: திருக்குறும்பலா குற்றாலம் இறைவன்: குறும்பலாநாதர்
பலன்: மரணபயம் நீங்கப் பெறல் இறைவி: குழல்வாய் மொழியம்மை

243. பால்வெண்மதிசூடி பாகத்தோர் பெண்கலந்து பாடியாடி
காலன்உடல் கிழியக் காய்ந்தார் இடம்போலும் கல்சூழ்வெற்பில்
நீலமலர்க் குவளை கண்திறக்க வண்டரற்றும் நெடுந்தண் சாரல்
கோலமடமஞ்ஞை பேடையொடு ஆட்டயரும் குறும்பலாவே.

பால்நிறமான இளம்பிறையை அணிந்து இடப்பாகத்தில் உமையவளை யேற்று ஆடிப்பாடுபவரும் எமதர்மனின் உடல் அழியும்படி கோபத்துடன் உதைத்தவருமான சிவனார் இருப்பது, கல்மலைகள் சூழ நெடிய குளிர்ச்சிமிக்க மலைச் சாரலில் நீலக்குவளை மலரக்கண்டு வண்டுகள் பாடவும் மயில்கள் பெண் மயில்களுடன் ஆடவுமாய் இருக்கும் குறும்பலாவே.

தலம்: திருநெல்வேலி இறைவன்: நெல்லையப்பர்
பலன்: நலன்கள் கிடைக்கப் பெறல் இறைவி: காந்திமதியம்மை

244. மருந்தவை மந்திரம் மறுமை நல்நெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமம் சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினில் கொன்றை பொன் சொரிதர துன்று தண்பூஞ்
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர் தாமே!

எனது நல்மனமே! குளிர்ச்சிமிக்க நிலத்தில் வளமான சோலைகளில் கொன்றை மரம் பொன் போன்ற மலர்களை உதிர்க்க செருந்தியெனும் பொன்னிறமலர்களும் கொண்ட திருநெல்வேலி நெல்லையப்பரை மனத்தில் கொண்டு வணங்கினால் அவர் உனது நோய்க்கு மந்திரமும், மருந்தும் ஆகி மறுமைக்கு நன்னெறிகளை உணர்வித்து மற்றுமுள எல்லாம் தருவார்.

சுந்தரர்

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி இறைவன்: கொடுமுடிநாதர்
பலன்: இறையருள் பற்றாகப் பெறல் இறைவி: பண்மொழிநாயகி

245. மற்றுப்பற்றெனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர், தொழுதேத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

கற்றுணர்ந்த பெரியோர் வணங்கிப் போற்றும் கறையூர் எனும் கொடுமுடியில் நல்லதவவலியுடைய பெருமானே எனக்கு உனது திருவடிகளை விட்டால் வேறு பற்றுக்கோடு இல்லையென்பதால் அதனையே பற்றிப் பிறந்தேன். இனி பிறவாத தன்மையையும் அடைந்தேன். அவ்வருள் பெற்ற நான் உன்னை மறந்தாலும் எனது நாக்கு உனது நமச்சிவாய மந்திரத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கும்.

தலம்: திருவாஞ்சியம் இறைவன்: வாஞ்சியநாதர்
பலன்: ஊழ்வினை நீங்கப் பெறல் இறைவி: வாழவந்த நாயகி

246. பொருவனார் புரிநூலார் புணர்முலை உமையவளோடு
மருவனார் மருவார்பால் வருவதும் இல்லைநம் அடிகள்
திருவனார் பணிந்தேத்தும் திகழ்திரு வாஞ்சியத்துறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலிய ஒட்டாரே.

திருமகள் போன்ற பெண்கள் பணிந்து வணங்கும் தனக்கு வமையில்லாதவர் பூணூல் அணிந்தவர் உமையம்மையோடு சேர்ந்து இருப்பவர் தம்மை நினையாதவரிடத்தில் நெருங்காதவர் அவர் தாம் திருவாஞ்சியத்தில் உள்ள ஆண்டவர் அவர் நமது ஊழ்வினைகளை நீக்கியருள்வார்.

தலம்: திருநாகைக்காரோணம் இறைவன்: சாயாரோகணர்
பலன்: வாட்டம் தீரப் பெறல் இறைவி: நீலாயதாட்சி

247. விட்டதோர் சடைதாழ வீணை விடங்காக
வீதிவிடை ஏறுவீர் வீண் அடிமை உகந்தீர்
துட்டர்ஆயின பேய்கள் சூழநடம் ஆடிச்
சுந்தரராய் தூமதியம் சூடுவது கண்டே
வட்டவார்குழல் மடவார் தம்மை மயல்செய்தல்
மாதவமோ மாதிமையோ வாட்டம் எலாம் தீரக்
கட்டி எமக்கு ஈவதுதான் எப்போது சொல்வீர்
கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

திருமுடியில் பின்னிய சடை தொங்கும்படி காளை வாகனத்தில் வீதி உலா வரும் சிவபெருமானே! பொல்லா பூதகணங்கள் சூழ நடனம் செய்வீர் அழகு மிகுந்தவராய் வெண் பிறை அணிந்துவரும் உங்களைக் கண்டு கூந்தல் நீண்டு இருக்கும் பெண்களை உங்கள் மீது மையல் கொள்ளும்படி செய்து வீட்டீர். நீங்கள் அப்படிச் செய்வது அரிய தவம் செய்தலோ? அல்லது தகுதி உடைய செய்கை ஆகுமா? எனக்கு எப்போது அருள் வழங்கி வாட்டம் தீர்க்கப் போகிறீர்கள். நாகைக்காரோணம் மேவிய சிவபெரு மானே.

திருநாவுக்கரசர்

தலம்: இராமேஸ்வரம் இறைவன்: இராமநாதர்
பலன்: நன்னெறி அடையப் பெறல் இறைவி: மலைவளர்காதலி
பர்வதவர்த்தினி

248. கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்துபின் அன்புகொண்டு
தேடிமால் செய்த கோவில் திருஇராமேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமே நீ நன்னெறி ஆகுமென்றே.

என் மனமே! நீ நன்னெறிகள் அமையப் பெற விரும்பினால், கோடியெனத் தவங்கள் இயற்றி நெறி குறைந்தவனான இராவண னது கூட்டத்தை தமது சக்கராயுதத்தால் அழித்த திருமால் மிகுந்த அன்புடன் தகுந்த இடத்தை தேடி அமைத்த திருக்கோவிலான ராமேஸ்வரத்தை அடைந்து ஈசனை வழிபடுவாய்.

தலம்: திருமறைக்காடு
இறைவன்: மறைக்காட்டுமணாளர்
பலன்: வேண்டுவன கிடைக்கப் பெறல்
இறைவி: யாழைப்பழித்த மொழியம்மை

249. தூண்டுசுடர் அனைய சோதிகண்டாய்
தொல்அமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற்குஅரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்நெறி கண்டாய் விரதம் எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே.

சிவபக்தனே! திருமறைக்காட்டினை அருளாட்சி செய்யும் இறைவன் தூண்டி விடப்பட்ட விளக்கில் உள்ள சுடர் போன்றவன், காண்பதற்கு எட்டாதவன். ஆனால் அவனை நினைத்து வழிபடுவோர்க்கு மிகவும் எளிமையானவன். மாட்சிமை மிக்கவர்கள் மனத்தில் உறைபவன். அவன் அனைவர்க்கும் அவர்கள் விரும்பிக் கேட்பதையெல்லாம் அளிப்பான் மறைக்காட்டு உறையும் மணாளன்தானே.

தலம்: திருப்புத்தூர் (சிவகங்கை மாவட்டம்)
இறைவன்: திருத்தளிநாதர்
பலன்: பிணிகள் நீங்கப் பெறல்
இறைவி: சிவகாமியம்மை

250. கருமருவு வல்வினை நோய் காற்றினான் அவன்
காமரு பூங்கச்சி ஏகம்பத்தான் காண்
பெருமருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்
பெருமான்காண் புலியூர்மன்று ஆடினான் காண்
தருமருவு கொடைத் தடக்கை அளகை கோன்தன்
சங்காதி ஆரூரில் தணியானை காண்
திருமருவு பொழில் புடைசூழ் திருப்புத்தூரில்
திருத்தளியான் காண் அவனென் சிந்தையானே.

செல்வம் தரும் சோலைகள் உள்ள திருப்புத்தூரில் திருத்தளி நாதர் என் மனத்தில் உறைகின்றார். அவர் கருவில் உள்ள சேயின் நோய்களையும் அழிப்பவர், சோலைகள் நிறைந்த காஞ்சிபுரத்தில் ஏகம்பநாதராய் இருப்பவர். பெரிய உலகில் உள்ள அனைவரின் பிணிகளையும் நீக்கும் பெருமான் சிதம்பரத்தில் அவர் நடனம் செய்தார். கற்கப தரு போல் கொடைத் தன்மை வாய்ந்த குபேரன் போல் செல்வமிக்கவர் வாழும் ஆரூர் தியாகரும் அவரே.

தலம்: திருமறைக்காடு இறைவன்: மறைக்காட்டு மணாளர்
பலன்: பாவங்கள் நீங்கப் பெறல் இறைவி: யாழைப்பழித்த மொழியம்மை

251. ஓதமால் கடல் பரவி உலகெலாம்
மாதரார் வரங்கொள் மறைக்காடரை
காதல் செய்து கருதப் படும் அவர்
பாதம் ஏத்தப் பறையும் நம் பாவமே.

கடல் கரையில் உலகத்து பெண்டிரெலாம் வந்து திருவலம் செய்து வணங்கும் மறைக்காட்டீசரிடம் அன்பு வைத்து அவரது திருவடிகளை போற்றுபவர்களின் பாவங்கள் அழியும்.

தலம்: திருமறைக்காடு இறைவன்: மறைக்காட்டீசர்
பலன்: மன மாசு நீக்கப் பெறல் இறைவி: யாழைப்பழித்த மொழியம்மை

252. கனத்தினார் வலியுடைய கடிமதில் அரணம் மூன்றும்
சினத்தினுள் சினமாய் நின்று தீயெழச் செற்றார் போலும்
தனத்தினை தவிர்த்து நின்று தம்மடி பரவுவார்க்கு
மனத்தினுள் மாசுதீர்ப்பார் மாமறைக் காடனாரே.

நிறைவும் பெருமையும் மிக்க சிவனார் கோபத்தின் உச்சிக்குச் சென்று வலிய மூன்று மதில்களையும் அனல் பற்றி எரியும்படி செய்த திருமறைக்காட்டு ஈசர் தமது திருவடிகளை பொன்னாசை கொள்ளாமல் பணிபவர்க்கு அவர்கள் மனத்தில் உள்ள மாசுகளை நீக்குவார்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருநணா (பவானி) இறைவன்: சங்கமேஸ்வரர்
பலன்: சிவஞானம் பெறல் இறைவி: வேதமங்கை

253. வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்றெரித்தார்க் கிடம் போலும் புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அங்கழல் மேல் கைகூப்ப அடியார்கூடி
செல்லா அருநெறிக்கே செல்ல அருள்புரியும் திருநணாவே.

புலியும், மானும் அல்லாத மற்ற உயிரினங்களும் சிவபெருமானின் அழகிய திருவடிகளில் கைகூப்பி வணங்கித் தொழுவார்களானால் அவர்கட்கு சிவஞானம் உண்டாகும்படி அருள்வார்.

திருநணா என்னும் பவானியில் மேருமலையை வில்லாகவும் வாசுகி எனும் பாம்பை நாணாகவும் கொண்டு தம்மை வணங்காத அரக்கர்களின் முப்புரத்தையும் எரித்த சங்கமேஸ்வரர்தான், அவர்.

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி இறைவன்: கொடுமுடிநாதர்
பலன்: வினைகள் தீர்க்கப் பெறல் இறைவி: பன்மொழியம்மை

254. தனிக்கணி மாமலர் கொண்டு தாள் தொழுவா வர்தங்கள்
வினைப்பகை யாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்ஞையர் நெஞ்சில்
நினைத்தெழுவார் வினை தீர்ப்பார் நிறைவளை மங்கை நடுங்கப்
பனைக்கை பகட்டுரி போர்த்தார் பாண்டிக் கொடுமுடியாரே.

பாண்டிக்கொடுமுடிநாதர் வளைகள் அணிந்த தம் தேவி அச்சம் கொள்ள, பனை போன்ற கையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். அவர் வானாடர்களும் கந்தர்வர்களும் மற்ற பூவுலகினரும் அவருக்கு நன்மலர்கள் சூட்டி பணிந்து எழுவார்களானால் அவர்களது வினைப்பகையானவையும் தீர்த்து வைப்பார்.

தலம்: திருநெல்வாயில் அரத்துறை இறைவன்: அரத்துறை நாதர்
பலன்: அருள் பெருகப் பெறல் இறைவி: ஆனந்த நாயகி

255. எந்தை யீசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்தி
சிந்தை செய்பவர்க்கல்லால் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமலருந்தி கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

வாச நறுமலர்கள் நிவா எனும் ஆற்றில் நிறையும் நெல்வாயில் அரத்துறை நாதரின் அருள், அவரை எங்கள் தந்தையே எம் பெருமானே ஈசனே இடப வாகனனே என ஏத்தி மனத்தால் வணங்குவார்க்கு மட்டுமே கிட்டும்; ஏனையோர்க்குக் கிட்டாது.

தலம்: திருஎருக்கத்தம் புலியூர் இறைவன்: திருநீலகண்டர்
பலன்: அல்லல் தீர்க்கப் பெறல் இறைவி: நீலமலர்க் கண்ணி

256. ஆஆவென அரக்கன் அலற அடர்த்திட்டு
தேவாஎன அருளார் செல்வம் கொடுத்திட்ட
கோவே எருக்கத்தம் புலியூர் மிகுகோவில்
தேவே என அல்லல் தீர்தல் திடமாமே.

தனது கைலையினை எடுக்க முயன்ற இராவணன் 'ஆ, ஆ' எனக் கதறி அலரும்படி அவனை வருத்திய பின் அவன் தேவா என

வணங்கியதால் அவனுக்கு அருட்செல்வத்தை வழங்கிய பெருமானே எருக்கத்தம் புலியூரில் கோவில் கொண்ட உன்னை என் தெய்வமே என வழிபட்டால் அல்லல்கள் நீங்குவது நிச்சயம்.

தலம்: திருமுதுகுன்றம் இறைவன்: பழமலைநாதர்
பலன்: பழவினை அகலப் பெறல் இறைவி: பெரியநாயகி

257. விளையாததோர் பரிசில்வரு பசுபாச வேதனை யொண்
தளையாயின தவிரஅருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம் உடையவ் அவனோடு
முளைமாமதி தவழும் முதுகுன்றடைவோமே.

உயிர் வாழ்வனற்றுடன் தொடர்ந்து வரும் பாசம் பழவினைகள் நீங்க வேண்டுமானால் ஒளிக்கதிர்களை ஆயிரமாய் பரப்பும் சூரியனும், ஒவ்வொரு நாளும் வளர்கின்ற சந்திரனும் தவழ்ந்து செல்லும் அளவு உயர்ந்துள்ள விருத்தாசலம் சென்று அங்குள்ள இறைவனை வழிபட வேண்டும்.

தலம்: திருச்சிரபுரம் இறைவன்: பிரம்மபுரியீசர்
பலன்: குற்றங்கள் நீங்கப் பெறல் இறைவி: தோனியப்பர்

258. தெங்குநீண்ட சோலை சூழ்ந்த சிரபுரம் மேயவனை
அங்கம் நீண்ட மறைகொள்வல்ல அணிகொள் சம்பந்தன்உரை
பங்கம் நீங்கப் பாடவல்ல பக்தர்கள் பாரிதன்மேல்
சங்கமோடு நீடிவாழ்வர் தன்மையினாலவரே.

தென்னம் சோலைகள் நெருங்கிய சிரபுரம் வாழ் சிவனைப் புகழ்ந்து ஞானசம்பந்தர் பாடிய பாடல்களைப் பாடும் அடியவர்கள் அவர்களது குற்றங்கள் நீங்கி நிலைத்த செல்வந்தராய் நீடு வாழ்வர்.

தலம்: திருத்தூங்கானைமடம் (பெண்ணாகடம்) இறைவன்: சுடர்க்கொழுந்துநாதர்
பலன்: வீடுபேறு பெறல் இறைவி: கடந்தை நாயகி

259. ஊன்றும் பிணி பிறவி கேடு என்று இவை
உடைத்தாய் வாழ்க்கை ஒழியத் தவம்
மான்று மனம் கருதிநின்றீர் எல்லாம்
மனம் திரிந்து மண்ணில் மயங்காதுநீர்
மூன்று மதில் எய்த மூவாச்சிலை
முதல்வர்க்கு இடம் போலும் முகில்தோய்கொடி

தோன்றும் கடந்தைத் தடங்கோவில்
துங்கானைமடம் தொழுமின்களே.

பிறவிப் பிணி கேடுகளில் ஆழ்த்தும் வாழ்க்கை நீங்கி வீடுபேறு பெற விரும்பித் தவம் புரிபவர்களே, உங்கள் மனத்தை வேறு பக்கம் திருப்பாமல் உலக இன்பங்களில் மயக்கம் கொள்ளாது, திரிபுரங் களை எரித்த பழமையான வில்லை உடையவனான தலைவனை வானளாவும் கொடிகளோடு பெரிய கோவிலுள் விளங்கி நிற்கும் தூங்கானை மடம் இறைவனைத் தொழுது வணங்குங்கள்.

தலம்: திருமுதுகுன்றம் இறைவன்: பழமலைநாதர்
பலன்: செல்வம் பெருகப் பெறல் இறைவி: பெரிய நாயகி

260. அறம் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ் இருந்தருளி அமரர் வேண்ட
நிறம்கிளர் செந்தாமரையான் சிரம் ஐந்தின் ஒன்றறுத்த நிமலர் கோவில்
திறங்கொள் மணித் தரளங்கள் வரத் திரண்டங்கு எழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினால் கொழித்து மணிசெல விலக்கி முத்து உலைப் பெய் முதுகுன்றமே.

மாணிக்கங்களையும் முத்துக்களையும் வாரிக்கொண்டு வரும் பெண்ணையாற்றங்கரையில் உள்ள விருத்தாசலத்தில் குறக்குலச் சிறுமிமார்கள் முறங்களினால் அவற்றைப் புடைத்து மாணிக்கங் களை உமியென அகற்றி முத்தினை அரிசியாக்கி சோறு சமைத்து விளையாடுவார்கள். அந்த விருத்தாசலம்தான் தேவர்கள் வேண்டு கோளை ஏற்று சனகாதி முனிவர்கட்கு நான்கு வேதங்களை ஆல மரத்தின் கீழ் இருந்து உரைத்தவனும் செந்தாமரை மலரில் வாழும் பிரம்மனது ஐந்து தலங்களில் ஒன்றை அறுத்தவனுமான நிமலன் வாழும் கோவில் ஆகும்.

தலம்: திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) இறைவன்: மாதிருக்கும்பாதியர் அர்த்தநாரீஸ்வரர்
பலன்: மனக்குழப்பம் நீங்கல் இறைவி: பாகம்பிரியாள்

261. அலைமலிதண் புனலோடு அரவம் சடைக்கணிந்து ஆகம்
மலைமகள் கூறுடையான் மலையார் இளவாழைக்
குலமலி தண்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர்
தலைமகனைத் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே.

வாழைத்தோட்டங்களும் குளிர்ச்சி பொருந்திய சோலைகளும் நிறைந்த கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) தலை வனான உமையம்மையை இடப்பாகம் கொண்டு கங்கையும்

பாம்பும் சடையில் தரித்தவரான சிவனை வழிபடுவோர்க்கு மனக்குழப்பம் ஏற்படாது.

தலம்: திருக்கருவூரானிலை இறைவன்: பசுபதியீஸ்வரர்
பலன்: அருள் பெருகப் பெறல் இறைவி: கிருபாநாயகி (அருள்வழங்கம்மை)

262. தொண்டரெலாம் மலர்தூவிஏத்த நஞ்சு
உண்டவர் உயிராய தன்மையாக
கண்டனார் கருவூருள் ஆனிலை
அண்டனார் அருள் ஈயும் அன்பரே.

திருக்கருவூரானிலையில் அமர்ந்துள்ள மூலமுதல்வர் நஞ்சுண்ட கண்டர் மாந்தர்கட்கு உயிராய் விளங்குபவர் அவரைமலர்களால் அர்ச்சித்து வணங்கினால் அருளைப் பொழியும் அன்பினர் ஆவார்.

சுந்தரர்

தலம்: காஞ்சிபுரம் இறைவன்: தழுவக்குழைந்தநாதர்
பலன்: வினைப்பற்று நீங்கல் இறைவி: காமாட்சியம்மை

263. சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னை
பந்தித்த வினைப் பற்று அறுப்பானை
பாலொடு ஆன்ஐந்து ஆட்டுகந்தானை
அந்தமில் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன் எம்மானை
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

மணம் கமழும் சடைமுடி உடையவரும் மனத்துள் நினைந்து நினைந்து வழிபடும் தொண்டர்கள் சிந்தையில் என்றும் இருப்ப வரும் முடிவில்லாத புகழ் உடைய உமாதேவியால் வழிபடப் பட்டவரும் காஞ்சிபுரத்தில் உறைபவருமான ஏகம்பநாதரை வழிபடும் பக்தர்களின் வினைப்பற்றுகளை அவர் அறுப்பார் (அகற்றுவார்).

தலம்: திருவொற்றியூர் இறைவன்: தியாகராசர்
பலன்: எமபயம் நீங்கல் இறைவி: வடிவுடையம்மை

264. வான்சயமாய் அடியேன்மேல் வரும்கூற்றின் உரம்கிழிய
முன்சயமார் பாதத்தான் முனிந்து உகந்த மூர்த்தியினை
மின்செயும்வார் சடையானை விடையானை அடைவின்றி
என்செய நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.

கொடுயமையான எண்ணத்துடன் என் உயிர் கவர வரும் எமனை அவனது வல்லமை நீங்குமாறு உதைத்து வெற்றி கண்ட திருவடிகள் உடையவர் முன்பு சினப்பட்டு பின்பு மன்னித்து அருளிய மூர்த்தி மின் போல் ஒளிரும் சடை உடையவர் அவரைப் பிரிந்து பின் எச்செயல் நான் செய்யப் போகிறேன்.

தலம்: திருஆலங்காடு இறைவன்: தேவர்சிங்கப்பெருமாள்
பலன்: பொய்மை நீங்கும் இறைவி: வண்டார்குழலி
குற்றங்கள் நீங்கும்

265. பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப் போகாமே
மெய்யே வந்து இங்கெனை ஆண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையாடு அரவம் அரைக்கசைத்த பரமா பழையனூர் மேய
ஐயா! ஆலங்காடா உன் அடியார்க் கடியேன் ஆவேனே.

பொய்மை மிக்க செயல்களையே செய்து குற்றங்களோடு திரிந்த என்னை அத்தகைய வழிகளில் செல்லவிடாமல் தடுத்தாட் கொண்ட மெய்வடிவானவனே, மெய்யே பேசும் பக்தர்களுக்கு மெய்ப் பொருள் ஆனவனே, படம் விரித்தாடும் பாம்பைக் கட்டிய இறைவனே, பழையனூர் எனும் ஆலங்காட்டில் உள்ள எந்தையே! நான் உனது தொண்டர்களின் தொண்டன் ஆவேனே.

தலம்: திருவாரூர் இறைவன்: வன்மீகநாதர்
புற்றிடம் கொண்டார்
பலன்: பேறுகள் பல பெறல் இறைவி: அல்லியங்கோதை

266. பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னைஎன் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன என்று அறியவொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை

அன்னம் வைகும் வயற் பழனத்து
அணி ஆரூரனை மறக்கலும் ஆமே.

பொன்னையும் மெய்ப்பொருளான சிவானுபவத்தையும் உலகின்பங்களையும் செல்வத்தையும் தருபவர் என் பிழைகளைப் பொறுப்பவர் பிழைகளற்ற வழியில் செல்ல வழிப்படுத்துபவர். இவர் எத்தன்மை உடையவர் என உணர முடியாதவர் அவர் எனக்காக எளிமையுடன் என்னை வந்து அடைந்தார். அன்னங்கள் வசிக்கும் நெல்வயல்கள் சூழ்ந்த திருவாரூர் எம்பெருமானை மறக்க முடியுமா?

திருநாவுக்கரசர்

தலம்: திருத்தூங்கானைமாடம் (பெண்ணாகடம்) இறைவன்: சுடர்க்கொழுந்துநாதர்

பலன்: யமபயம் நீங்கல் இறைவி: கடந்தைநாயகி

267. பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சை வுண்டேல் இருங்கூற்றகல
மின்னாரும் மூவிலைச்சூலம் என்மேல் பொறிமேவு கொண்டால்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே.

தூங்கானை மாடத்தில் உள்ள சுடர்க்கொழுந்து நாதரே உங்கள் பொன்னான திருவடிகளுக்கு எனது விண்ணப்பம் ஒன்று உண்டு. அது என்னவென்றால் கொடுமை மிக்க யமனை அகற்றி என் உயிரைக் காப்பதற்கு தங்களுக்கு விருப்பம் உண்டாகும் என்றால் தங்களுடைய திரிசூல முத்திரையை என் மேல் பதித்தருளல் என்பதே.

தலம்: பாடலிபுத்திரம் இறைவன்: வீரட்டேசுவரர்

பலன்: அச்சம் அகலப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

268. சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கள் சூளாமணியும்
வண்ணஉரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

திருநீறும் சந்தனமும் அணிந்தவர், சுடரும் நிலவெனும் சூளா மணியை அணிந்தவர் புலித்தோல் ஆடை உடையவர், பவள வண்ண திருமேனியர் பலம் வாய்ந்த அரண்களைத் தகர்க்கும்

காளையை உடையவர். கெடில நதியின் அருகே உள்ளவர், அத்தகைய சிவனார் எமக்கு உறவினர் ஆவார். ஆதலால் நாங்கள் எதற்கும் பயப்படுவது இல்லை. எம்மைப் பயப்படச் செய்வதும் எதுவும் இல்லை.

தலம்: திருஅதிகை வீரட்டானம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: நோய் நீங்கப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

269. கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறிவேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவேன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறை அம்மானே.

இறப்பு உண்டாகும்படி எனது வயிற்றில் குடலோடு இணைந்து முடக்கும் வலி உண்டாக்கும் எனது சூலை நோயை அகற்றி அருள்வீர். நான் பல தீவினைகளைச் செய்திருந்தாலும் என்னை உமது திருவடிக்குத் தொண்டனாய் ஏற்றுக் கொண்டீர். இனி இரவு பகல் பாராது எப்போதும் உம்மைப் பிரியாது வணங்குவேன். அதிகைக் கெடில வீரட்டானத்தில் அருளும் சிவபெருமானே.

தலம்: திருஅதிகை வீரட்டானம் இறைவன்: வீரட்டேஸ்வரர்
பலன்: நோய் நீங்கப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

270. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலையில் பலிகொண்டு உழல்வாய்
உடல்உள்ளுறு சூலைதவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

தினம்தோறும் தேவரீர் திருமேனி முழுக்காட்டி மலர் மாலை சூட்டி தூபம் காட்டி வணங்கிட நான் மறந்ததில்லை தமிழ்ப் பாடல் தனை இசையோடு பாடி வணங்க மறந்ததில்லை. எனக்கு நன்மை ஏற்பட்ட சமயத்தும் தீமை ஏற்பட்ட சமயத்தும் தேவரீரை வணங்க மறந்ததில்லை. எனது நாவால் உங்களது திருநாமம் செபிப்பதை மறந்ததில்லை. இறந்தோர் தலை ஓட்டில் பிச்சை கொண்டு துன்பம் அடையும் வீரட்டானத்தில் உள்ள பெருமானே. எனது சூலை நோயின் காரணமாய் மிகவும் துன்பம் அடைந்து

நலிந்தேன். இனி பொறுக்க முடியவில்லை. ஆதலால் எனது சூலை நோயை நீக்கி அருள்வீர்.

தலம்: திருப்பூவணம் இறைவன்: பூவணநாதர்
பலன்: இறை திருக்காட்சி பெறல் இறைவி: மின்னம்மை

271. வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

திருப்பூவணத்தில் அருளும் சிவனை மனதாரக் கும்பிட்டு வணங்கினால் அவரது வடிவுமிக்க திரிசூலத்தைக் காணலாம். சடைமுடியில் உள்ள பிறை நிலவைக் காணலாம். நறுமணம் கொண்ட கொன்றை மாலையைக் காணலாம். இரு காதுகளிலும் வெண்மையான தோடுகளைக் காணலாம். இடிக்குரல் எழுப்பும் யானையை உரித்துப் போர்த்திய போர்வையைக் காணலாம். அவரது திருமுடியைக் காணலாம். திருநீறு பூசிய அவரது திருமேனியின் எழிலைப் பூரணமாய்க் காணலாம்.

தலம்: திருப்பாதிரிப்புலியூர் இறைவன்: தோன்றாத்துணைநாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: தோகைநாயகி

272. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்அடி என்மனத்தே
வழுவாது இருக்க வரம்தர வேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க்கு இரங்கு இருந்தருள்செய் பாதிரிப்புலியூர்
செழுநீர்ப்புனல் கங்கை செஞ்சடை மேல் வைத்த தீவண்ணனே.

தன்னை வணங்கித் தொழும் அடியவர்கள்பால் இரக்கம் வைத்து அவருள் உறைந்து அருள் செய்பவரே! திருப்பாதிரிப் புலியூரில் நீர்ப்பெருக்கு மிகுந்த கங்கையினை உமது சிவந்த சடையில் வைத்த அழல் நிறத்தவரே. நான் ஒரு புழுவாக சென்மம் எடுத்த போதும் உனது திருவடிகள் என் மனத்தை விட்டு நீங்காது இருக்கும் வரத்தைத் தந்தருள்வீர்.

தலம்: திருப்பாதிரிப்புலியூர் இறைவன்: தோன்றாத்துணைநாதர்
பலன்: சிவகதி பெறல் இறைவி: தோகைநாயகி

273. கருவாய்க் கிடந்துண் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே.

என அன்னையின் வயிற்றில் கருவாய்த் தோன்றிய காலம் முதல் உனது பொன்னடிகளையே நினைப்பவனாய் இருந்தேன். பின்னர் இப்பிறவி எடுத்து உலகில் வந்ததும், உனது திருப்பெயரை செபிக்கப் பயிற்சி பெற்றேன். உனது திருவருளால் சிவாய நம எனும் பஞ்சாட்சரத்தை செபித்து திருநீறு பூசிக் கொண்டேன். எனவே பாதிரிப் புலியூர்த் தெய்வமே எனக்கு சிவகதியினைத் தந்தருளும்.

தலம்: திருப்பாதிரிப்புலியூர் இறைவன்: தோன்றாதுணைநாதர்
பலன்: இறைத்துணை பெறல் இறைவி: தோகை நாயகி

274. ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றஆய் உலகம் படைத்து கந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான் இமையவர்க்கன்பன் திருப் பாதிரிப் புலியூர்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோர்களுக்கே.

எனக்கு தாயாய், தந்தையாய் உடன் பிறந்தவர்களாய் என் மனத்துள் இருக்கும் சிவன் மூவுலகங்களையும் விருப்பத்துடன் உண்டாக்கினார். தேவர்களுக்கெல்லாம் அன்பர் திருப்பாதிரிப் புலியூரில் அடியவர்களாகிய எங்களுக்கு தோன்றாத் துணைவனாய் அருள் செய்கிறார்.

தலம்: திருவதிகை வீரட்டானம் இறைவன்: வீரட்டேஸ்வரர்
பலன்: வல்வினை நீங்கப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

275. உரைசெய் நூல்வழி ஒண்மலர் எட்டிடத்
திரைகள் பேல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்து இழியும் கெடிலத்துறை
விரைகள் சூழ்ந்து அழகாய வீரட்டரே.

வேத ஆகமங்கள் கூறும் நூல்களின் உரைப்படி ஒளிமிக்க மலர்களைச் சாத்தி வழிபடுபவர்க்கு கடலலைகள் போல் வரும் வல்வினை யாவும் தீர்த்தருள்வார். மலையில் உற்பத்தியாகி

மண்ணில் வரும் கெடில நதியின் கரையில் நறுமணம் கமழும், எழில்மிக்க வீரட்டானத்தில் இருக்கும் எம்பெருமான்.

தலம்: திருவதிகை வீரட்டானம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: இடர்கள் நீங்கப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

276. கறையும் கொப்பளித்த கண்டர் காமவேள் உருவம் மங்க
இறையும் கொப்பளித்த கண்ணார் ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்
மறையும் கொப்பளித்த நாவார் வண்டுண்டு பாடும் கொன்றை
அறையும் கொப்பளித்த சென்னி அதிகை வீரட்டனாரே.

அதிகை வீரட்டத்தில் அருளும் இறைவன் வண்டுகள் தேனுண்டு மகிழ்ந்த கொன்றை மாலை அணிந்தவர் வேதங்களை உரைத்தவர் காமனை உருவம் இல்லாதவனாகச் செய்தவர், நஞ்சின் கறை படிந்த கழுத்தர், அவர் தம்மை பணிந்து தொழுப வர்களது இடர்களை அகற்றுவார்.

தலம்: திருஆமாத்தூர் இறைவன்: அழகியநாதர்
பலன்: வஞ்சகம் நீங்கப்பெறல் இறைவி: அழகியநாயகி

277. பஞ்சபூத வலையில் படுவதற்கு
அஞ்சி நானும் ஆமாத்தூர் அழகனை
நெஞ்சினால் நினைந்தேன் நினைவு எய்தியும்
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே.

திருஆமாத்தூரில் உள்ள அழகியநாதர் எனும் இறைவனை ஐம்பூதங்களின் வலைகட்கு உட்பட்டு அல்லல்படுவதற்கு அச்சம் கொண்டு நான் மனத்துள் நினைத்தேன். உடனே எனைப்பற்றிய வஞ்சகங்கள் மறைந்தன.

தலம்: திருவண்ணாமலை இறைவன்: அண்ணாமலையார்
பலன்: நல்லன எல்லாம் கிடைக்கப்பெறல் இறைவி: உண்ணாமுலையம்மை

278. பல்இல் ஓடு கையேந்தி, பல இல்லம்
ஒல்லை சென்று உணங்கல் கவர்வார் அவர்
அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்லனவாயின நம்மை அடையும்.

பல வீடுகளில் சென்று பற்களற்ற மண்டை ஓட்டினால் உணவு கொண்ட சிவன் நமது துயர் களைவதற்காகவே திருவண்ணா

மலையில் உள்ளார். அங்கு சென்று கைகூப்பி வணங்கினால் நல்ல நன்மைகள் நம்மைத் தேடி வந்து சேரும்.

தலம்: திருப்பாதிரிப்புலியூர் இறைவன்: தோன்றாத்துணைநாதர்
பலன்: அச்சம் நீங்கப் பெறல் இறைவி: கோதைநாயகி

279. மண்பாதலம் புக்கு மால்கடல் மூடி மற்றேழ்உலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்குஒன்று கண்டோம் திருப்பாதிரிப் புலியூர்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழல் இணையே.

இப்பூவுலகம் பாதாளத்தை அடைய, பெருங்கடல்கள் எல்லாம் அதை மூடிவிட, சந்திர சூரியர்கள் வீழ்ந்துபட மேலே உள்ள உலகங்கள் திசை கெட்டு தடுமாறி நேர்ந்தாலும் மனமே அச்சம் கொள்ளாதே. திருப்பாதிரிப் புலியூர் நெற்றிக்கண்ணை உடைய சுடர்க்கடவுள் நம்மை அந்தச் சூழலிலும் காத்து ரட்சிப்பார்.

தலம்: திருஏகம்பம் (காஞ்சிபுரம்) இறைவன்: தழுவக்குழைந்தநாதர்
ஏகாம்பரேச்சுவரர்
பலன்: தலைமைப்பதவி பெறல் இறைவி: ஏலவார்குழலி

280. மலையினார் மகளோர்பாக மைந்தனார் மழுவொன்றேந்தி
சிலையினால் மதில்கள் மூன்றும் தீஎழச் செற்ற
இலையினார் சூலம் ஏந்தி ஏகம்பம் மேவினாரை
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்கும் தலைவர் ஆவார்.

இலை வடிவான திரிசூலப்படையேந்தி ஏகம்பம் எனும் காஞ்சிபுரத்தில் இமவான் மகளான பார்வதியை ஓர் பாகமாகக் கொண்டு, கையில் மழுப்படையேந்தி திரிபுராந்தகராக அருள் செய்யும் ஏகாம்பரநாதரை தலையாரக் கும்பிட்டு வணங்கு பவர்கள் தலைமைப் பதவி பெறுவர்.

தலம்: திருவண்ணாமலை இறைவன்: அண்ணாமலையார்
பலன்: பக்தி பெருகப் பெறல் இறைவி: உண்ணாமுலை நாயகி

281. ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே! துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர்கோவே அணி அணாமலை உளானே
நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவு இலேனே.

எழில் பொருந்திய திருவண்ணாமலையில் இருப்பவனே! ஆதி முதல் கடவுளே! எட்டு வலிய தோள்களை உடையவனே! ஒளி விடும் மழுவாயுதம் கொண்டவனே! மலைமகளினை உடம்பில் பாகமாகக் கொண்டவனே! தேவர்களின் தலைவனே! உன்னை நினைந்து வழிபடுவதையன்றி வேறு எந்த நினைவும் எனக்கு இல்லை.

திருஞானசம்பந்தர்

தலம்: திருஆமாத்தூர் இறைவன்: அழகியநாதர்
பலன்: வறுமை நீக்கப் பெறல் இறைவி: அழகம்மை

282. தொண்டர்வந்த வணங்கி மாமலர் தூவி நின்கழல் ஏத்துவார் அவர்
உண்டியால் வருந்த இரங்காததென்னை கொலாம்
வண்டலார் கழனிக் கலந்து மலர்ந்த தாமரை மாதர் வாண்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே.

வண்டல் மண் நெல்வயல்களில் கலத்தலால் மலர்ந்த தாமரை மலர் போன்ற அழகு மங்கையர் வாழ்கின்றதும் அண்டங்களில் உள்ள தேவர்கள் பலரும் பரவும் திருவாமாத்தூரில் உள்ள இறைவனே உன்னை நினைந்து மலர்மாலைகளை சாத்தி வணங்கும் தொண்டர்கள் உணவின்மையால் வறுமையில் வாட அவர்கள் பால் தேவரீர் இரக்கம் கொள்ளாதது ஏனோ?

தலம்: திருப்பந்தணைநல்லூர் இறைவன்: பசுபதியீசர்
பலன்: யமபயம் நீங்கப் பெறல் இறைவி: காம்பன்னதோளியம்மை

283. காட்டினாரெனவும் நாட்டினாரெனவும் கடுந்தொழில் காலனைக் காலால்
வீட்டினாரெனவும் சாந்த வெண்ணீறு பூசியோர் வெண்மதி சடைமேல்
சூட்டினார் எனவும் சுவடுதா மறியார் சொல்லுள சொல்லு நால்வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதியாரே.

பந்தணை நல்லூர் வாழும் பசுபதி நாதர் சுடுகாட்டில் இருப்பவராகவும், நாட்டிற்குள் இருப்பவராகவும் கொடிய தொழில் செய்யும் எமனை காலால் உதைத்து வீழச் செய்தவராகவும் சந்தனமும் திருநீறும் அணிந்து சடைமுடியில் வெண்ணிலவினை சூடிக் கொண்டவராகவும். வேதங்களின் பொருளாய் இருப்பவராகவும் உள்ளார். கபடம் இல்லாதவராகவும் உள்ளார்.

தலம்: திருமாணிகுழி இறைவன்: மாணிக்கவரதர்
பலன்: எமபயம் நீக்கப் பெறல் இறைவி: மாணிக்கவல்லி

284. மந்தமலர் கொண்டுவழி பாடு செயும் மாணிஉயிர் வவ்வ மனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவதை செய்தமணி கண்டனிடமாம்
சந்தினொடு காரகில் சுமந்துதட மாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயமண மாருதவி மாணிகுழியே.

மென்மை பொருந்திய மலர்களால் அர்ச்சித்து வழிபாடு செய்த மார்க்கண்டேயனது உயிரை கவர வேண்டும் எனும் எண்ணத்துடன் வந்த யமனை உயிர் நீங்கும்படி உதைத்த மணிகண்டப் பெருமான் உறையுமிடம் சந்தன மரங்களையும் குளிர்ச்சிமிக்க அகிலையும் பெரிய மலர்களையும் வாரிக்கொண்டு வரும் கெடில நதியின் தண்ணீர் பாயும் வயல்களை உடைய திருமாணிகுழியே.

தலம்: திருப்புறவார் பனங்காட்டூர் இறைவன்: பனங்காட்டீஸ்வரர்
பலன்: அருள் பெருகப் பெறல் இறைவி: புறவாம்பிகை

285. விண்ணமர்ந்தன மும்மதில்களை வீழ வெங்கணையினாய் தாய்விரி
பண்ணமர் ந்திதொலி சேர் புறவார் பனங்காட்டூர்
பொண்ணமர்ந்திதொரு பாகமாகிய பிஞ்ஞகா பிறைசேர் நுதலிடை
கண்ணமர்ந்தவனே கலந்தார்க்கு அருளாயே!

வான்வெளியில் திரிந்த மும்மதில்களையும் வீழ்த்துதற்கு வெம்மை மிகுந்த அம்புகளை எய்தவனே! புறவார் பனங்காட்டூரில் பெண்ணாகிய தேவியை இடப்பாகம் கொண்ட தவ வடிவினனே! பிறைபோன்ற நெற்றியில் கண்ணை உடையவனே! உம்மை அடைந்தவர்கட்கு அருள் செய்வாயே!

தலம்: திருப்பாதிரிப்புலியூர் இறைவன்: தோன்றாத்துணை நாதர்
பலன்: வினைஅழியப் பெறல் இறைவி: தோகை நாயகி

286. வீக்கம் எழும் இலங்கைக்கு இறை விலங்கலிடை
ஊக்கம் ஒழிந்து அலற அவ்விரலால் இறை யூன்றினான்
பூக்கமழும் புனல் பாதிரிப்புலியூர் தனை
நோக்க, மெலிந்து அணுகா வினை நுணுகுங்களே.

பருமை கொண்ட இலங்கேசன் கயிலையின் கீழ்ப்புறம் அகப்பட்டு தனது கர்வம் அழிந்து அலறும்படி தனது கால்விரலால் இறைவன் ஊன்றினான் அத்தகைய இறைவனது மலர் மணம் மிக்க

கெடில நதி பாயும் திருப்பாதிரிப் புலியூரைப் பார்த்தாலே நமது வினைகள் நொறுங்கித் துகள்களாகும்.

திருநாவுக்கரசர்

தலம்: கச்சிஏகம்பம் இறைவன்: தழுவக் குழைந்த நாதர்
பலன்: யமபயம் நீங்கப்பெறல் இறைவி: காமாட்சியம்மை

287. கூற்றுவன் காண் கூற்றுவனை குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீரானான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கும் மின்காண்
கனபவளச் செம்மேனிக் கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலாஊரும் சென்னியான்காண்
நிறையார்ந்த புனல்கங்கை நிமிர்சடைமேல்
ஏற்றவன்காண் எழிலாகும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன் எண்ணத்தானே.

ஊழியிறுதியினை உண்டாக்குபவன் யமனை அழித்த தலைவன் உலகமே ஆகி நின்றவன் உலகில் உள்ள கடல்களாய் நின்றவன் காற்றாக வீசுபவன், தீயாக ஒளிர்பவன், ஒலியெழுப்பும் மின்னலாக இருப்பவன் பவளம் போன்ற சிவந்த திருமேனியில் வெண்மையான திருநீற்றை அணிந்தவன் நிமிர்ந்து இருக்கும் தனது சடைமுடையில் நிலவு தவழும்படியும் ஓசை செய்யும் கங்கையையும் உடையவன் காஞ்சீபுரத்தில் உள்ள ஏகம்பநாதன் அவர் தான் எனது எண்ணத்தில் இருப்பவர்.

தலம்: திருக்காளத்தி இறைவன்: காளத்திநாதர் குடுமித்தேவர்
பலன்: மனத்தில் இறைவனைப் பெறல் இறைவி: ஞானப்பூங்கோதை

288. மனத்தகத்தான் தலைமேலான் வாக்கில் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்து அப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதில் உள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றின் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சி உள்ளான்
காளத்தியான் ஆவன் என் கண்ணுளானே.

எப்போதும் என் கண்ணுக்குள் நிறைந்து கிடக்கும் காளத்தி நாதன் என் மனத்தினுள் இருப்பான். தலையின் மேல் இருப்பான் நான் பேசும் சொல்லில் இருப்பான். தேவர்களுக்கு தலைவனாய் இருப்பான். ஏழு அண்டங்களையும் கடந்து நிற்பான் தன்னைப் போற்றிப் பாடும் தொண்டர்களோடு கலந்து இருப்பான். கொன்றையின் நறுமணமாய்ப் பொலிவான், மலைகளாய் இருப்பான் நெருப்பாய், காற்றாய் இருப்பான் சோலைகளில் இருப்பான்.

தலம்: திருமாற்பேறு இறைவன்: மால்வணங்கீசர்
பலன்: துயரம் நீங்கப்பெறல் இறைவி: கருணைநாயகி

289. மழுவலான் திருநாமம் மகிழ்ந்து உரைத்து
அழவலார்களுக்கு அன்புசெய்து இன்பொடும்
வழுவிலா அருள்செய்தவன் மாற்பேறு
தொழவலார் தமக்கு இல்லை துயரமே.

மழுவாயுதம் கொண்ட சிவனின் திருப்பெயர்களை மனமகிழ்வோடு சொல்லி அன்பு கொண்டு அவ்வன்பின் மிகையினால் கண்ணீர் பெருக்கி வணங்குபவர்கட்கு குற்றமற்ற அருள் செய்யும் திருமாற்பேறு இறைவனை கும்பிட்டு வணங்குபவர்கட்கு துயரம் என்பது இல்லை.

தலம்: திருஒற்றியூர் இறைவன்: படம்பக்கநாதர்
பலன்: ஊனம் நீக்கப்பெறல் இறைவி: வடிவுடையம்மை

290. தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்துகின்றீர்
வானத்தை வணங்கவேண்டில் வம்மின்கள்! வல்வீர்ஆகில்
ஞானத்தை விளக்கை யேற்றி நாடிஉள் விரவவல்லோர்
ஊனத்தை ஓழிப்பார் போலும் ஒற்றியூர் உடைய கோவே.

வாழ்க்கைக்காக ஒரு இடத்தைத் தேடி பொய்யில் அமிழ்ந்து கொண்டுள்ளீர்கள். நீங்கள் விண்ணில் உள்ள இறைவனை வணங்கக் கருதினால் உங்களுக்கு வல்லமை இருக்குமாயின் வாருங்கள். உங்களது உள்ளத்துக்குள்ளே ஞான விளக்கை ஏற்றி நமது மூச்சிலும் கலந்து நிற்கும் திருவொற்றியூர் ஈசனை வழிபடுங்கள். அப்படிச் செய்தால் உங்களது ஊனமெல்லாம் நீங்கும்.

தலம்: திருவாலங்காடு இறைவன்: தேவர் சிங்கப் பெருமான்
பலன்: செல்லும் வழி காட்டப் பெறல் இறைவி: வண்டார் குழலி

291. அல்லும் பகலுமாய் நின்றார் தாமே
அந்தியும் சந்தியும் ஆனார் தாமே
சொல்லும் பொருள்எலாம் ஆனார்தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே
பல்உரைக்கும் பாவெலாம் ஆனார்தாமே
பழனை பதியாய் உடையார் தாமே
செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறையும் செல்வர் தாமே!

திருவாலங்காடு என்னும் பழையனூர் இறைவன் இரவாகவும், பகலாகவும், காலை அந்தியாகவும் மாலைச் சந்தியாகவும் சொல்கின்ற சொற்பொருளாகவும் துதிகளாகவும் நெறிநூல்களாகவும் பாடும் பாடல் கவிதைகளாகவும் இருப்பார். அவர் நமது வாழ்க்கையில் நாம் செல்ல வேண்டிய வழிகளைக் காட்டுவார்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீஸ்வரர்
கோணப்பிரான்
பலன்: சிவகதி பெறல் இறைவி: கருந்தார்குழலி

292. மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கி பொறையெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும் அன்றே.

இறைவனது திருவடியாகிய நிலத்தில் உண்மை என்ற உழவு செய்து விருப்பம் என்ற விதையை ஊன்றி பொய் என்ற களைகளை நீக்கி பொறுமை எனும் தண்ணீர் பாய்ச்சி, பண்பு எனும் வேலியிட்டு நன்னெறிகளில் நின்றால் சிவகதி எனும் பயிர் விளையும்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீசுவரர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: கருந்தார்க்குழலி

293. காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டி
பூசனை யீசனார்க்கு போற்றவிக் காட்டினோமே.

உடலையே ஆலயமாக்கி உள்ளத்தை அடிமைஆக்கி, உண்மை எனும் நீரினால் தூய்மைப்படுத்தி, மனத்தையே சிவலிங்க வடிவமாக்கி அன்பையே நெய் பால் நீராகக் கொண்டு யீசர்க்கு திருமுழுக்காட்டி பூசை செய்வோம்.

தலம்: திருப்பாதிரிப்புலியூர் கடலூர்
இறைவன்: தோன்றாத்துணைநாதர் பாடலேஸ்வரர்
பலன்: இறைவனால் காக்கப் பெறல்
இறைவி: தோகைநாயகி பெரியநாயகி

294. சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச் சிவாயவே.

நமச்சிவாய எனும் மந்திரத்தை உச்சரிக்கும் அடியவர்கள் அவனது பொன்னடிகளை வணங்கித் தொழுதால் அவர்களை கல்லே துணையாகும்படி பிணைத்து கடலில் இட்டாலும் நமச்சிவாயம் எனும் மந்திரம் காப்பாற்றும். (இப்பாடல் கடலில் பாடப்பட்டதாகவும் கூறுவர்).

தலம்: திருப்பாதிரிப்புலியூர்
இறைவன்: தோன்றாத்துணைநாதர்
பலன்: நமசிவாய மந்திரப் பலன்
இறைவி: தோகைநாயகி

295. பூவினுக்கு அருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

பூவில் அழகானது பொங்குவது போல் மலரும் தாமரை பசுவுக்கு அழகென்பது சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்ய பால், தயிர், நெய், வெண்ணெய், கோமயம் முதலிய ஐந்தும் தருதல் அரசனுக்கு அழகு தருவது. நீதி தவறாமை, நாக்குக்கு அழகு நமசிவாய மந்திரம் உச்சரித்தல்.

சுந்தரர்

தலம்: திருப்பூவணம் இறைவன்: பூவணநாதர்
பலன்: வினைகள் தீரப் பெறல் இறைவி: மின்னம்மை

296. எண்ணி இருந்தும் கிடந்தும் நடந்தும்
அண்ணல் என நினைவார் வினை தீர்ப்பவர்
பண்ணிசையால் மொழியால் பலர் பாடப்
புண்ணியனார் உறை பூவணம் ஈதோ.

மனத்தால் நினைந்து அமர்ந்து படுத்து நடந்து என எந்த நிலையிலும் அண்ணலே என அவர் திருவடிகளை வணங்கினால் நல்ல இசையால் மென் மொழிகளால் புகழப்படும் திருப்பூவண நாதர் வினைகளைத் தீர்ப்பார்.

தலம்: திருக்கச்சூர் ஆலக்கோவில் இறைவன்: விருந்திட்டநாதர்
பலன்: இறையருள் நல்கப் பெறல் இறைவி: உமையம்மை

297. பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாய் கொள்வோனே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை நினைவார் அவரை நினை கண்டாய்
மையார் தடங்கண் மடந்தை பங்கா கங்கார் மதியம் சடைவைத்த
ஐயா! செய்யாய்! வெளியார் கச்சூர் ஆலக்கோவில் அமர்ந்தோனே.

மைபூசப்பெற்ற அகன்ற கண்களை உடைய உமையவளை பாக மாய் கொண்டு கங்கையையும் சந்திரனையும் சடையில் கொண்ட திருக்கச்சூர் ஆலக்கோவில் இறைவனே! உன்னை பொய்யாகப் புகழ்ந்தாலும் அதனை மெய்ப்புகழ்ச்சி என ஏற்றுக் கொள்பவனே. மெய்வடிவானவனே! உன்னை நினைப்பவரை நீயும் நினைத்து அருள் நல்குவாயாக!

தலம்: வடதிருமுல்லைவாயில் இறைவன்: மாசிலாமணியீசர்
பலன்: துயர்கள் நீக்கப் பெறல் இறைவி: கொடியிடை நாயகி

298. திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள் என்றெண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலைசூழ் திருமுல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களைவாய்
பாசுபதா பரஞ்சுடரே.

பொருளும் மெய்ஞ்ஞானமும் பெருஞ் செல்வமும் உனது திருவடிகளே என்று நினைத்து வேறு எவரையும் மதிக்காமல், அவர்களைப் பொருட்படுத்தாமல் மாறுபாடு உடையவனாய் வலிமை கொண்டு திரியும் நான் திருமுல்லை வாயில் தெய்வமே, உன்னை போற்றி வணங்கினேன். ஆதலால் எனது துயர்களை நீக்கி அருள்வாய்.

தலம்: திருவாரூர் — இறைவன்: வன்மீகநாதர் புற்றிடம்கொண்டார்

பலன்: அல்லல் நீங்கப்பெறல் — இறைவி: அல்லியங்கோதை

299. சொல்லில் குலாஅன்றிச் சொல்லேன் தொடர்ந்தவர்க்கும் துணைஅல்லேன்
கல்லல் வலிய மனத்தேன் கற்றபெரும் புலவாணர்
அல்லல் பெரிதும் அறுப்பான் அருமறை கரங்கம் ஓதும்
எல்லை இருப்பதும் ஆரூர் அவர்எம்மை ஆள்வரோ கேளீர்.

நான் ஆடம்பரமான வெறும் சொற்களையே சொல்வேன். யாருக்கும் துணையாக இருக்க மாட்டேன். கல்லைவிட கடின மான மனத்தை உடையவன் ஆகிய என்னை கல்வி கேள்விகளில் சிறந்த புலவர்கள் வேதங்கள் ஓதுகின்ற எல்லையான திருவாரூர் எம்பெருமான் என்னையும் ஏற்று ஆட்கொள்வானோ. ஏனெனில் அவன்தான் எனது அல்லல்களை அறுக்க வல்லான்.

திருஞானசம்பந்தர்

தலம்: திருமுதுகுன்றம் விருத்தாசலம் — இறைவன்: பழமலைநாதர்

பலன்: பிழைகள் நீங்கப் பெறல் — இறைவி: பெரியநாயகி

300. தேவா சிறியேம் பிழையைப் பொறுப்பாய்! பெரியானே!
ஆஆ என்று அங்கு அடியார் தங்கட்குஅருள் செய்வாய்
ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய் என்றேத்தி
மூவாமுனிவர் வணங்கும் கோவில் முதுகுன்றே.

அலைகள் ஓயாத கடல் சூழ் உயர்ந்த கயிலையில் இருப்பவனே என முனிவர்கள் வணங்கும் திருமுதுகுன்றத்து இறைவனே எங்கள் தேவனே சிறியவர்களான நாங்கள் செய்த பிழைகளைப் பொறுத்துக்கொண்டு எங்களுக்கு அருள் செய்வாய்.

தலம்: திருவடுகூர் இறைவன்: வடுகூர்நாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: வடுவகிர் கண்ணியம்மை

301. பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்றஆடி
ஏலும் சுடுநீரும் என்பும் ஒளி மல்கக்
கோலம் பொழில்சோலை கூடி மடஅன்னம்
ஆலும் வடுகூரில் அருளும் அடிகளே.

பால் மணம் மிக்க நெய், தயிர் முதலியவற்றால் திருமஞ்சனம் செய்யப்பட்டு, திருநீறும் எலும்புமாலையும் திகழும் கோலம் உடையவனே, சோலைகளில் அன்னங்கள் ஒலியெழுப்பும் திருவடுகூர் தலைவனே அருள் செய்வாய்.

தலம்: திருஅறையணிநல்லூர் இறைவன்: அறையணிநாதர்
பலன்: பாவம் பழிகள் விலகப் பெறல் இறைவி: அருள் நாயகி

302. விரவு நீறுபொன் மார்பினில் விளங்கப் பூசிய வேதியன்
உரவு நஞ்சு அமுதாக உண்டு உறுதிபேணுவது அன்றியும்
அரவு நீள்சடைக் கண்ணியார் அண்ணலார் அறையணி நல்லூர்
பரவுவார் பழிநீங்கிடப் பறையும் தாம் செய்த பாவமே.

பொன் போன்ற நிறமுடைய மார்பில் நிறைய திருநீறு பூசியவன் கடல் எழு நஞ்சை அமுதாக உண்டு, உறுதியாய் நின்ற பின் பாம்பு களை நீண்ட சடைகளாகக் கட்டியவன் அவர்தான் அறையணி நல்லூர் அண்ணல். அவரை வணங்குபவர்களுக்கு பழிகளும், பாவங்களும் நீங்கும்.

தலம்: திருநல்வெண்ணெய் இறைவன்: வெண்ணையப்பர்
பலன்: இடர்கள் நீங்கப் பெறல் இறைவி: நீலமலர்க்கண்ணி

303. நெருக்கிய பொழில்அணி நெல்வெண்ணெய் மேவிஅன்று
அரக்கனை அசைவு செய்தீரே
அரக்கனை அசைவு செய்தீரும்மை அன்புசெய்து
இருக்க வல்லார் இடர் இலரே.

நிறைந்த சோலைகள் உள்ள திருநெல்வெண்ணையுள் அமர்ந்த வரே, இராவணனின் வலிமை குறையச் செய்த உம்மீது அன்பு காட்டி இருக்க வல்லவர்கட்கு இடர்கள் இல்லை.

தலம்: திருக்கோவலூர் வீரட்டம் இறைவன்: வீரட்டானேஸ்வரர்
பலன்: நற்கதி பெறல் இறைவி: சிவானந்தவல்லி

304. உள்ளத்தீரே போதுமின் உறுதியானது அறிதிரேல்
அள்ளல் சேற்றில் காலிட்டு இங்கு அவலத்துள் அழுந்தாதீர்
கொள்ளப் பாடு கீதத்தான் குழகன் கோவலூர் தன்னுள்
வெள்ளம் தாங்கு சடையினான் வீரட்டானம் சேர்த்துமே.

நல்ல உள்ளம் கொண்டவரே உங்கள் உயிருக்கு உறுதியானது அறிய நினைத்தீரானால் நரகத்தில் சென்று உழலாமல் செவிகட்கு இனிமை தரும் வண்ணம் இசை பாடுபவனும், அழகுமிக்கவனும் கங்கையை சடையில் கொண்டவனுமான திருக்கோவிலூர் வீரட்டத்தில் உள்ள சிவனை அடையுங்கள்.

சுந்தரர்

தலம்: திருவொற்றியூர் இறைவன்: படம்பக்க நாதர்
புற்றிடம் கொண்டார், தியாகராசர்
பலன்: கண்நோய் நீக்கப் பெறல் இறைவி: வடிவுடையம்மை

305. அழுக்கு மெய்கொடுஉன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்பாடப் பாலது ஒன்றானால்
பிழுக்கை வாரியும்பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆயினும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறை வோனே.

திருவொற்றியூரில் உள்ள என் தலைவனே நான் மாசடைந்த உடல் கொண்டு உன் அடிகளில் வந்தேன். இச்செயல் நான் ஏற்கக் கூடிய தென்றாலும் நான் வாழ்வில் இடறி விழுந்தாலும் உனது திருநாம் கூறுவதை மறக்க மாட்டேன். பசுவின் பாலைப் பெற விரும்புவோர் அதன் சாணத்தையும் வாரி எடுக்க வேண்டும். அதுபோல நான் பிழைகள் செய்தாலும் என்னை ஏற்றுக்கொள். எனது ஒளி குன்றிய கண்ணுக்கு ஒரு மருந்து தருவாய்.

தலம்: திருவலிவலம் இறைவன்: மனத்துணை நாதர்
பலன்: கல்மனம் இளகப் பெறல் இறைவி: மாழையங்கண்ணி

306. நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கு
அரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியல் மனத்தைக் கசிவித்து
கழலடி காட்டி என் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவலம் தனில் கண்டேனே!

இனிய இசை பாடும் ஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய நல்லதமிழ் பாடல்கள் சொல்லுகின்ற புகழ்களை விழைந்து மகிழ்வு கொள்ளும் இறைவனை நான் அறியவில்லை. அதனால் எனது கல் போன்ற கடினம் மிக்க மனத்தினையும் கசியுமாறு செய்து தனது திருவடிகளைக் காட்டியருளி என் குற்றங்களை நீக்கினான் தேவர்கள் வணங்கும் அப்பெருமானை நான் வலிவலத்தில் கண்டு இன்புற்றேன்.

தலம்: திருக்கழுக்குன்றம் இறைவன்: வேதபுரீஸ்வரர்
பலன்: வினைகள் நீங்கப் பெறல் இறைவி: பெண்ணின் நல்லாள்

307. கொன்று செய்த கொடுமையால் பல சொல்லவே
நின்று பாவ வினைகள் தாம் பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக்குன்றமே.

மாந்தர்காள்! முன்னர் பல உயிர்களைக் கொன்ற பாவத்தினாலும் பலர் உங்களைப் பற்றிக் கூறும் பழிச் சொற்களாலும் பற்றி வரும் உங்கள் வினைகள் நீங்க வேண்டுமானால் தன் கன்றோடு பெண் யானைகள் சூழும் திருக்கழுக்குன்றம் சென்று இறைவனை வணங்குங்கள்.

திருநாவுக்கரசர்

தலம்: திருப்பருப்பதம் இறைவன்: பருப்பதநாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: பருப்பத நாயகி

308. கரவு இலா மனத்தராகி கைதொழுவார்கட்கு என்றும்
இரவில் நின்று எரியதுஆடி இன்னருள் செய்யும் எந்தை
மருவலார் புரங்கள் மூன்றும் மாட்டிய வகையர் ஆகிப்
பரவுவார்க்கு அருள்கள் செய்து பருப்பதம் நோக்கினாரே.

கள்ளம் கபடற்ற உள்ளம் கொண்டு கைகூப்பி வணங்குபவர் கட்கு, பகைவர்களின் முப்புரங்களை எரித்தவரும், இரவு வேளை களில் சுடுகாட்டில் நடனம் செய்பவரும் ஆன சிவபெருமான் என்றும் இன்னருள் செய்வார் அவர் பருப்பதம் எனும் தலத்தில் உள்ளார்.

தலம்: பாடலிபுத்திரம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: துயர் வரும்போது இறைவனைப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

309. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கு இளவேனிலும்
மூசுவண்டறை, பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

எம்பெருமான் என் தந்தையைப் போன்ற ஈசன் திருவடி நிழல்கள் வீணையின் இசை போலவும் இளமாலை நேரத்து நிலவு போலவும் தென்றல் காற்று போலவும் இளவேனில் காலத்து தண்மையைப் போலவும் வண்டுகள் இசை பாடும் பொய்கை போலவும் குளிர்ச்சி பொருந்தியவை.

தலம்: பாடலிபுத்திரம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

310. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.

எனது தலைவனான இறைவன் அவனை வாழ்த்திப் பாடு வதற்காக வாயினையும், அவனை நினைந்து உருக நெஞ்சையும்,

அவனைக் கும்பிட்டு வணங்க தலையினையும் தந்தவன், அவனை பல மலர்களைச் சாற்றி வணங்காமல் எனது வாழ்நாளெல்லாம் வீணே கழிந்ததே.

தலம்: பாடலிபுத்திரம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: இறை உருக் காணல் இறைவி: திரிபுரசுந்தரி

311. விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்கும்.

விறகில் உள்ள தீ போலவும், பாலில் உள்ள நெய் போலவும், ஒளிமிக்க மாணிக்கம் போன்ற இறைவன் மறைந்துள்ளான். (விறகைப் பற்ற வைத்தால் தான் தீ வரும். பாலைக் கடைந்தால் தான் மோர், வெண்ணெய், நெய் தோன்றும்) அவனைக் காண வேண்டுமாயின் உறவு என்ற மத்தை நட்டு உணர்வு என்ற கயிற்றால் கடைந்தால் அவனது காட்சி கிடைக்கும்.

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: தீவினைகள் தீரப் பெறல் இறைவி: அழகாலமர்ந்தநாயகி

312. பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோவில் எழுபதினோடு எட்டும் மற்றும்
கரக்கோவில் கடிபொழில்சூழ் ஞாழற் கோவில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோவில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோவில் மணிக்கோவில் ஆலக்கோவில்
திருக்கோயில் சிவன் உறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்ச தீவினைகள் தீரும் அன்றே.

நீர்பெருக்குள்ள கங்கையை சடையில் அணிந்த சிவனாரின் பெரிய கோவில்கள் எழுபத்தெட்டும் மற்றும் கரக்கோவில் பெரிய மலை போன்ற கருப்பறியலூர் கொகுடிக் கோவில் ரிக் வேதம் ஓதும் அந்தணர்கள் வணங்கும் இளங்கோவில், மணிக் கோவில் ஆலக்கோயில் எனப் பலவான சிவபெருமானின் கோவில்களில் முடி தாழ வணங்குவார்க்கு தீவினை தீரும்.

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: இறைவனை உறவாய்ப் பெறல் இறைவி: அழகாலமர்ந்த நாயகி

313. அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீயே அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமும் சுற்றமும் ஓர்ஊரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

எனக்கு தாயாய், தந்தையாய், ஆசானாய், மாமனாய், மாமியாய் உறவுகொள்ளத்தக்க பெண்களாய் வைப்புநிதியாய் என் குலத்தவனாய் என் ஊரினனாய் சுற்றமாய் இருக்கும் இறைவனே, நான் அனுபவிப்பனவும், பாதுகாப்பனவும் ஆகி எனக்கு துணையாய் நின்று பற்று அறும்படி செய்பவன் நீ. பொன்னாய், மாணிக்கமாய், முத்தாய் இருந்து காளை வாகனம் கொண்ட இறைவனாய் இருப்பவனும் நீதான்.

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: பிறவிப்பிணி நீங்கப் பெறல் இறைவி: அழகாலமர்ந்தநாயகி

314. நேர்ந்தொருத்தி ஒரு பாகத் தடங்கக்கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தினோடு
பாய்ந்தொருத்தி படர்சிடைமேல் பயிலக் கண்டு
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாம்திருத்தி தம்மனத்தை ஒருக்காத் தொண்டர்
தனித்துவொரு தண்டூன்றி தளராமுன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்கலாமே.

அரிய தவம் செய்து பார்வதி சிவனின் உடலில் பாகம் ஆனதைக் கண்டு சிறிதும் தளர்ச்சியின்றி கங்கை ஆயிரம் முகம் கொண்டு அவரது விரிந்த சடையில் பாய்ந்து சென்று இடம்பிடித்தாள். அவரோ பாம்பையும் குளிர் நிலவையும் சடையில் வைத்துக் கொண்டார். தமது மனத்தை நன்கு திருத்தி ஒருநிலைப்படுத்தாத தொண்டர்கள் கையில் தடியூன்றி உடல்தளர்ச்சி அடையும் முன்பாக பூந்துருத்தி என செபிப்பீர்களானால் உங்களது உடலை நீக்கி பிறவிப்பிணியை போக்கிக் கொள்ளலாம்.

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: எல்லாம் இறை செயல் எனக்கொள்ளல் இறைவி: அழகாலமர்ந்த நாயகி

315. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஒட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் யாரொருவர் பாடாதாரே
பணிவித்தால் யாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக்காலே.

இறைவன் ஆடவைத்தால் ஆடவும், அடங்க வைத்தால் அடங்கவும், ஓடவைத்தால் ஓடவும், உருகவைத்தால் உருகவும், பாடவைத்தால் பாடவும், பணியவைத்தால் பணியவும், காண வைத்தால் காணவும், செய்யாதவர்கள் யார் உள்ளார். எனவே இறைவன் திருவுள்ளப்படிதான் எச்செயலும் நிகழும்.

தலம்: திருப்பூந்துருத்தி இறைவன்: புஷ்பவனநாதர்
பலன்: இறை பக்தி மிகுதியாய்ப் பெறல் இறைவி: அழகாலமர்ந்தநாயகி

316. சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மா தேவர்க்கு ஏகாந்தர் அல்லர் ஆகில்
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆவுரித்து தின்று உழலு புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

அரிய அளகாபுரிச் செல்வங்களான சங்க நிதி, பதும நிதி ஆகிய இரண்டினையும் தந்து இப்பூவுலகையும் வானுலகையும் ஆள்வதற்குத் தரும் வல்லமையுள்ள செல்வந்தர் என்றாலும் எம் இறைவன் தேவர்களின் தலைவனான சிவனுக்கு அன்பு காட்டாதவர். ஆனால் அவரது செல்வத்தையும், அவரையும் மதிக்க மாட்டோம். ஆனால் அழுகிக் குலைந்த உடலும் தொழு நோயும் கொண்டு பசுவைக் கொன்று உண்பவரானவர் சிவனடியார் என்றால் அவர்தான் நாங்கள் வணங்கும் கடவுள் ஆவர்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீசுவரர்
பலன்: இறை அருளால் இறைக்காட்சி பெறல் இறைவி: கருந்தார்க்குழலி

317. மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்
ஒப்புடையான் அல்லன், ஒருவன் அல்லன்
ஓர் ஊரன் அல்லன் ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன் அருளே கண்ணாக காணின் அல்லால்
இப்படியான் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டு ஒணாதே.

மையிட்ட கண்களுடைய உமாதேவியும் தானுமாக, காஞ்சியில் உள்ள இறைவன் நீண்ட சடை உடையவனாகவும் தனக்கு ஒப்பாக எவரும் இல்லாதவனாகவும், தனியனாகவும் ஓர் ஊரைச் சார்ந்தவனாகவும் தனக்கு உவமையாகச் சொல்ல யாருமில்லாதவனாகவும் இத்தன்மை உடையவன் இந்த நிறத்தன், இந்த வடிவினன் எனக் கூற முடியாதவனாகவும் உள்ளான். ஆனால் அவனருள் இருந்தால் அவனின் தன்மையையும் வடிவையும் நிறத்தையும் காணலாம்.

தலம்: அதிகை வீரட்டம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: அச்சமின்மை பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

318. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லேம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே என்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழை ஓர் காதிற்
கோமார்க்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர் சேவடியிணையே குறுகினோம்.

யாருக்கும் ஆட்படாத சங்கரனும் காதில் வெண் சங்குத் தோட்டையணிந்த இறைவனாகிய சிவபெருமானின் மலரடிகளை அடைந்த நாங்கள் யாருக்கு ஆட்பட்டவரில்லை எமனைக் கண்டும் அஞ்ச மாட்டோம். நரகத்தில் துன்பம் பெறமாட்டோம். நம்மிடத்தில் கபடு சூதுகள் இல்லை. இருமாந்திருப்போம், நமக்கு பிணிகள் இல்லை. இறைவனைத் தவிர யாரையும் பணிய

மாட்டோம். ஆதலால் அவன் அருள் பெற்ற எமக்கு எந்நாளும் இன்பந்தானே யன்றித் துன்பமில்லை.

தலம்: அதிகைவீரட்டம் இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: அச்சம் நீக்கப் பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

319. என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதி ராவாரும் இல்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினால் குறை உடையோம் அல்லோம் அன்றே
உறுபிணியார் செறல் ஒழிந்திட்டு ஓடிப்போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே.

இப்பெரிய நிலவுலகில் எமக்கு எதிரானவர் யாரும் இல்லை. யாருக்கும் தோற்க மாட்டோம். சிறுசிறு தெய்வங்களை நாம் வணங்க மாட்டோம். எந்த நிலையிலும் எமக்கு ஒரு குறைவு இல்லை. நமக்கு பிணிபோல் இருந்தவர்கள் பகைமை நீங்கி மறைந்து விட்டார்கள். எனெனில் நாம் சிவபெருமான் திருவடி களைச் சேர்ந்து விட்டோம். தலைமாலையணிந்த அப்புண்ணி யனை அடைந்த புண்ணியச் செயலால் நாம் இவை யாவும் பெற்றோம்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீஸ்வரர்
பலன்: பஞ்சத்தில் இருந்து காக்கப் பெறல் இறைவி: கருந்தார்க் குழலி

320. கல்நெடுங்காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கி
பல் நெடுங்காலம் மழைதான் மறக்கினும் பஞ்சம் உண்டென்று
என்னெடுங் சூள்அறும் அஞ்சல் நெஞ்சே இமையா முக்கண்
பொன்னெடுங்குன்றம் ஒன்று உண்டுகண்டீர் இப்புகல் இடத்தே.

வான்மழை பொய்த்து, கடல்கள் வற்றி நெடுங்காலம் மலைகள் சூடேற, பஞ்சம் வரும் என்கின்ற சூள்மொழிகளுக்கு ஒருபோதும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் நமக்கு புகல் அளிப்பதற்காக இமைக்காத மூன்று கண்களையுடைய பொன் போன்ற ஒரு பெரிய மலையாய் சிவபெருமான் நம்மைக் காப்பார்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீசுவரர்
பலன்: பூகம்பத் தீங்கு தீர்க்கப் பெறல் இறைவி: கருந்தார்க்குழலி

321. வானம் துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்
தானம் துளங்கித் தலை தடுமாறிலென் தண்டகலும்
மீனம் படிலென் விரிகடல் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே!

கடலில் எழுந்த நஞ்சை உண்டும் ஊனம் பெறாத சிவபெருமானுக்கு அடியாராய் உள்ள உத்தமர்களுக்கு வானம் அசைந்தால் என்ன, உலகில் பூகம்பம் ஏற்பட்டால் என்ன, பெரிய பெரிய மலைகளும் தடுமாற்றம் கொண்டு தலைகீழானால் என்ன, கடல்கள் வற்றி மீன்கள் உயிரிழந்தால் என்ன, எந்தத் தீங்கும் நேராது.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீஸ்வரர்
பலன்: இறைவன் எளியவனாய் உதவப் பெறல் இறைவி: கருந்தார்க்குழலி

322. மாதா பிதாவாகி மக்களாகி
மறிகடலும் மால்விசும்பும் தானேஆகி
கோதாவிரியாய் குமரிஆகி
கொல்புலித் தோலாடைக் குழகனாகி
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனிதன் ஆகி
யாதானும் என நினைவார்க் கெளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தாம் நின்றவாறே!

அன்றலர்ந்த மலர்களைச் சாத்தி வழிபாடுகள் செய்யும் அடியவர்கட்கு தீவண்ணம் கொண்ட அண்ணலாகிய சிவபெருமான் தாயாவான். தந்தையாவான். மக்களாவான். கோதாவரி ஆறு போல அருளைப் பெருக்குவான். குமரிக்கடல் போல, புலித்தோலாடை அழகனாய், பிறப்பு இறப்புகளை நீக்குபவனாய் மிகவும் எளியவனாய் வந்து தோன்றுவான்.

தலம்: கடலில் பாடியது இறைவன்: வீரட்டேசுவரர்
பலன்: அகத்தில் ஒளி பெறல் இறைவி: திரிபுரசுந்தரி

323. இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமசிவாயவே.

நன்னெஞ்சம் உள்ளவர்களின் மனத்தில் நிலைத்திருக்கும் நமசிவாய எனும் மந்திரம் அவர்களது வீட்டில் விளக்காகி இருள் நீக்கும் பல உள்ளங்களிலும் கூறப்படும் அம்மந்திரம் விளக்காகி அறிவுச் சுடராகி பலராலும் காணப்பெறும்.

சுந்தரர்

தலம்: திருநெல்வாயில் அரத்துறை இறைவன்: உச்சிநாதேஸ்வரர்
பலன்: வாழ்வின் வழி பெறல் இறைவி: உச்சியார்

324. கல்வாய் அகிலும் கதிர் மாமணியும்
கலந்து உந்திவரும் நிவாவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடுஉறையும்
நிலவெண்மதி சூடிய நின்மலனே!
நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்றது அறிந்து அடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போவதோர் சூழல்சொல்லே!

இவ்வுலக மாந்தர்கள் நல்ல வீடுகள் கட்டி, நடந்து திரிந்து நல்ல ஆடைகளை உடுத்து மகிழ்ந்து பின்னர் நரை பெற்றவராய் மூப்படைந்து மாண்டனர் என கூறுமாறு வாழ்வு கழிகின்றது. அதை அறிந்து நான் அகிலையும் மாணிக்கங்களை வாரிக் கொண்டு வரும் நிவா நதிக்கரையில் உள்ள நெல்வாயில் அரத்துறையில் பழமைமிக்க கோவிலில் வாழும் ஆண்டவனே உன்னை அடைந்தேன். என் வாழ்வு நன்னிலை பெறுவதற்கான வழியைச் சொல்லி அருள்வாய்.

தலம்: திருக்கழுக்குன்றம் இறைவன்: வேதபுரீஸ்வரர்
பலன்: பிழைகள் நீக்கப் பெறல் இறைவி: பெண்ணின் நல்லாள்

325. பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழை கொள்காதன் குழகன் தான் உறையுமிடம்
மழைகள் சாலக்கலித்து நீடுயர் வேயவை
கழைகொள் முத்தம் சொரியும் கழுக்குன்றமே.

மானிடர்காள்! உங்களது பிழைகள் நீங்க வேண்டுமானால் மேகங்கள் இடிமுழக்கத்துடன் பெய்ய, நெடிதுயர்ந்த மூங்கிலின் கணுக்கள் முத்துக்களைச் சொரியும் கழுக்குன்றத்தில் பின்னலிட்ட சடையும் தோடணிந்த காதுகளையும் கொண்ட அழகான சிவபிரானைத் தொழுது வணங்குங்கள்.

தலம்: திருக்கேதாரம் இறைவன்: கேதாரநாதர்
பலன்: அறம் செய்து வாழல் இறைவி: கேதாரகௌரியம்மை

326. வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாது அறம்செய்ம்மின்! தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேல்உற நின்றான் திருக்கேதாரம் எனீரே.

உலகத்தீர் உங்கள் வாழ்வு நிலையற்றது. அது மண்ணுள் செல்வது நிச்சயம். பசியாலும் நோயாலும் வருந்தி உங்கள் பிறவி அழியும். எனவே அகன்ற கண்ணனான திருமாலும் நான்முகனும் அடிமுடியும் தேடிச் சென்ற திருக்கேதாரத்து சிவனை வணங்கி நல்ல தானதர்மங்களைச் செய்யுங்கள்.

தலம்: திருத்தினைநகர் இறைவன்: சிவக்கொழுந்தீசர்
பலன்: இறையடி தொழுதல் இறைவி: இளங்கொம்பன்னாள்

327. பாவமே புரிந்து அகலிடம் தன்னில்
பலபகர்ந்து அலமந்து உயிர் வாழ்க்கைக்கு
ஆவஎன்று உழந்து அயர்ந்து வீழாதே
அண்ணல்தன் திறம் அறிவினால் கருதி
மாவின் ஈர்உரி உடை புனைந்தானை
மணியை மைந்தனை வானவர் அமுதை
தேவதேவனை திருத்தினை நகருள்
சிவக் கொழுந்தினைச் சென்றடைமனனே!

நெஞ்சமே! பல பாவச் செயல் புரிந்து வேற்றிடங்களில் பலப்பல பேசி நமது உயிர் வாழ்வதற்கு அவைதாம் நல்ல என நினைத்து, தடுமாற்றம் கொண்டு உழந்து தளர்ச்சி கொண்டு வீழாமல் யானையின் தோலை உரித்து ஆடையாய்க் கொண்டவனும், மாணிக்கம் போன்றவனும், தேவர்களுக்கெல்லா அமுதானவனை தேவர்களின் தலைவனை திருத்தினை நகர் சிவக்கொழுந்தீசனை அடைந்து உய்வாய்.

தலம்: திருநொடித்தான் மலை (திருக்கைலாசம்) இறைவன்: திருக்கயிலாய நாதர்
பலன்: உயர்நிலை பெறல் இறைவி: பார்வதியம்மை

328. தான்எனை முன்படைத்தான் அதுஅறிந்துதன் பொன்னடிக்கே
நான்என பாடல்அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வான்என வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன்உயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

திருநொடித்தான்மலை (திருக்கைலாயம்) இறைவன் முன்பு என்னைப் படைத்தான். அவனது திருக்குறிப்பை உணர்ந்து அவன் புகழ் கூறும் பாடல்களைப் பாடிய நாய் போன்ற என்னை ஒரு பொருட்டாய்க் கருதி அவனது அடியவருள் சேர்த்தான். எனை வரவேற்க கைலாயம் சென்றடைய வெள்ளை யானையை எனக்களித்து உயர்வு பெறச்செய்தான்.

தலம்: திருவெண்ணைநல்லூர் இறைவன்: தடுத்தாட்கொண்டநாதர்
பலன்: இறையருள் பெறல் இறைவி: வேற்கண்மங்கை

329. பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துஉன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணைநல்லூர் அருள்துறையுள்
அத்தா! உனக்கா ளாய் இனி அல்லேன் எனலாமே!

உயிர்களிடத்து பித்தாகி அன்பு கொண்டவனே! வெண் பிறையைச் சூடிய பெருமானே! அருள் செய்வதில் உயர்வானவனே! எந்நிலையிலும் உன்னை நான் மறக்க மாட்டேன். என் நெஞ்சில் உன்னை அமர்த்திக் கொண்டாய். பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ள திருவெண்ணை நல்லூர் அருள் துறை ஆலயத்தில் உள்ள என் தந்தையே! உனக்கு எப்பிறவியிலும் அடிமையாக இருப்பேன்.

தலம்: திருவாரூர் இறைவன்: வன்மீகநாதர் புற்றிடம்கொண்டார்
பலன்: இறைவன் காட்சி பெறல் இறைவி: அல்லியங்கோதை

330. தேனையாடு முக்கண்ணரோ மிகச் செய்யரோ வெண்ணீற்றரோ
பால்நெய் ஆடலும் பயில்வரோ தமைப் பற்றினார்க்கு நல்லரோ
மானைமேவிய கண்ணினான் மலைநங்கை அஞ்சவோர்
ஆனைஈர் உரிபோர்ப்பரோ நமக்கு அடிகளாகிய அடிகளே.

நாம் தலைவராக் கொண்ட இறைவன் தேனினால் மஞ்சனம் செய்யப்பெறும் முக்கண்ணனார்தானோ! பால்நெய்களினாலும் மஞ்சனம் செய்வதை விரும்புவரோ! சிவந்த மேனி உடையவரோ, வெண்ணீறு பூசியவரோ மான் போன்ற கண்ணி மலை மடந்தை அஞ்சாத்தக்கவண்ணம் யானையின் தோலை உரித்து புனைந்து கொண்டவரோ.

திருஞானசம்பந்தர்

தலம்: திருஊறல் இறைவன்: உமாபதி
பலன்: நல்வழிபெறல் இறைவி: உமையம்மை

331. நெய்யணி மூவிலைவேல் நிறைவெண் மழுவும் அனலும் அன்று
கையணி கொள்கையினான் கடவுள் இடம் வினவில்
மையணி கண்மடவார் பலர் வந்திறைஞ்ச மன்னி நம்மை
உய்யும்வகை புரிந்தான் திருஊறல் உள்குதுமே.

நெய்பூசிய திரிசூலமும் வெண்மையான மழுவாயுதமும் தீயும் கையில் கொண்ட கடவுள் இருக்கும் இடம் அது என்றால் மைபூசிய கண்களை உடைய பெண்கள் பலர் வந்து தொழுது நிற்க நமக்கு நல்லநெறிகளைக் காட்டி நம்மை உய்விப்பவனான சிவன் அமர்ந்துள்ள திருஊறல் ஆகும். அதை நினைப்போம்.

தலம்: திருவோத்தூர் இறைவன்: வேதநாதர்
பலன்: வினைதீரப் பெறல் இறைவி: இளமுலை நாயகி

332. தோட்டீரே! துத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீரே அடியார் வினை
ஓட்டீரே! உம்மை ஏத்துதும்! ஓத்தூர்
நாட்டீரே அருள் நல்குமே.

திருவோத்தூரில் அமர்ந்த தோடுகள் அணிந்தவரே ஐந்து தலை நாகத்தை ஆட்டுவிப்பவரே உமது அடியார்களின் வினைகளை ஓட்டுபவரே உங்களை வணங்கினோம். எமக்கு அருள் செய்க.

தலம்: திருமாற்பேறு இறைவன்: மால்வணங்குயீசர்
பலன்: வினை நீங்கப் பெறல் இறைவி: அஞ்சனாட்சியம்மை

333. இருவர் தேவரும் தேடித் திரிந்து இனி
ஒருவரால் அறிவொண்ணிலன்
மருவிநீள் கழல் மாற்பேற்று அடிகளை
பரவுவஆர் வினை பாறுமே.

நான்முகனும் திருமாலும் தேடிக்காண முடியாதவனும் நீண்ட பாதச் சிலம்புகளை அணிந்தவனுமான திருமாற்பேறு இறைவனை வணங்கினால் நமது வினைகள் அழியும்.

தலம்: திருஇலம்பையங்கோட்டூர் இறைவன்: சந்திரசேகரர்
பலன்: எமபயம் நீங்கப்பெறல் இறைவி: கோடேந்து முலையம்மை

334. பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டு வெங்கூற்று உதைத்து அடியவர்க்கருளும்
காலனாம் எனதுரை தனதுரையாக
கனலெரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலம் நாறும் பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாய் பேணியென் எழில்கொள்வ தியல்பே.

சிறுவனாய், வயது முதிர்ந்தவனாய் பசுபதியுமாய் விளங்கி, முன்பு அடியவர்க்காக எமனை உதைத்தருளி, கனல் உள்ள தீயினைக் கையிலேந்தி, தான் அடியார்களுக்குச் சொல்ல வேண்டிய நல்லுரைகளை என் மூலம் வெளிப்படுத்திய இறைவனான சிவன் நீலமலர்கள் நிறைந்த சுனைகளில் வண்டுகள் பாட குவளைப் பூக்கள் மலர்ந்து எங்கும் ஏலவாசனை பெருகும் இலம்பையங் கோட்டூரில் உள்ளான்.

தலம்: திருவிற்கோலம் இறைவன்: திரிபுராந்தகர்
பலன்: தீமைகள் நீங்கும் இறைவி: திரிபுராந்தகி

335. தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் கூகம் மேயினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

வேதங்களைத் தொகுத்து வழங்கியவன், வேதாங்கம், வேதாகமம் ஆகியவற்றை வரைமுறைப் படுத்தியவன் சோலைகள் சூழ்ந்த கூகம் எனும் தலத்தினில் உள்ளவன் யாவற்றிலும் மேற்பட்டவன். ஆணவம் மிகுந்த அரக்கர் புரங்களை வெந்து போகும்படி அழித்தவன் இருக்குமிடம் திருவிற்கோலம் தான்.

தலம்: திருப்பாசூர் இறைவன்: பாசூர்நாதர்
பலன்: துயர்தீரப் பெறல் இறைவி: பசுபதிநாயகி

336. கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்
நெய்யாடுதல் அஞ்சுடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே.

நச்சுபைகொண்ட நாகங்கள் தரும் காந்தள் மலர்களும் கொண்டு பஞ்சகவ்வியம் எனும் ஆன் ஐந்தால் மஞ்சனம் செய்யப் பெற்ற இறைவன் உறையும் பாசூரில் அவரை கையாறக் கும்பிட்டு மனம் கசிந்துருகும் உண்மையடியார்களின் துயரத்தையும், குறைகளையும் அவர் நீக்குவார்.

தலம்: திருக்காளத்தி இறைவன்: காளத்தியீஸ்வரர்
பலன்: துயர் நீங்கி வீடுபேறடைதல் இறைவி: ஞானப்பூங்கோதை

337. கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரைதனில்
ஆங்கமர் காளத்தி அடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே.

கோங்கு, குரவம், கொன்றை பாதிரி மரங்களும் மூங்கில்களும் நிறைந்த முகலி ஆற்றின் கரையினில் அமர்ந்துள்ள காளத்தி நாதனின் அடியிணைகளைத் தொழுதால் கொடிய துயர்கள் நீங்கப் பெற்று வீடுபேறும் எளிதில் கிட்டும்.

தலம்: திருக்கள்ளில் இறைவன்: சிவாநந்தேஸ்வரர்
பலன்: உயர்வு பெறல் இறைவி: ஆனந்தவல்லியம்மை

338. முள்ளின்மேல் முதுகூகை முரலும் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளில்மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒருதலையே.

முட்களை உடைய மரங்களில் முதிய பருந்துகள் ஒலியெழுப்பும் சோலைகளும் வில்வ மரங்களில் படர்ந்துள்ள கூறைக் கொடிகளும் உள்ள திருக்கண்ணில் அமர்ந்த சிவனிந் திருவடிகளை மனத்துள் நினைத்து வழிபட்டால் உயர்ந்த நிலை பெறுதல் உறுதியாம்.

தலம்: திருஆலங்காடு இறைவன்: ஊர்த்துவதாண்டவர்
பலன்: இல்லறம் சிறக்கும் இறைவி: வண்டார்குழலி

339. நுணங்குமறை பாடி ஆடி வேடம் பயின்றாரும்
இணங்கு மலை மகளோடு இருகூறு ஒன்றாய் இசைந்தாரும்
வணங்கும் சிறுத்தொண்டர் வைகல் ஏத்தும் வாழ்த்தும் கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே.

நுண்பொருள் அமைந்த வேதங்களை பாடி ஆடும் வடிவுடையவரும் தன் மனத்தோடு பொருந்திய மலைமகளோடு இரண்டு உடல்களையும் ஒன்றாக்கி உள்ளவரும், சிறுத்தொண்ட நாயனார் தினமும் வணங்கிப் பாடும் வாழ்த்துக்களைக் கேட்டு இன்புறுபவரும் ஆன சிவன் பழையனூர் எனும் ஆலங்காட்டில் உள்ளார்.

தலம்: திருவல்லம் இறைவன்: வல்லநாதர்
பலன்: இன்பம் பெருகப் பெறல் இறைவி: வல்லாம்பிகை

340. சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழை யோடும் கூடி
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.

தன்னடியைச் சேர்ந்து வணங்குவார்க்கு இன்பங்கள் பெருகுமாறு அருள் செய்பவர் தன்னை உணர்ந்தவர்கள், உணராது தேடுபவர்களுக்கு அவர்களின் மனத்திடை சென்று அருள் வழங்கும் எம்பெருமான் இருக்குமிடம் திருவல்லம் ஆகும்.

தலம்: திருஇரும்பைமாகாளம் இறைவன்: மாகாளேஸ்வரர்
பலன்: வினைகள் தீர்க்கப் பெறல் இறைவி: குயில்மொழியம்மை

341. குறைவதாய குளிர்திங்கள்சூடிக் குனித்தான் வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்த சடை
இறைவன் எங்கள் பெருமான் இடம்போல் இரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித் துதிக்கும் மாகாளமே.

வேதம் ஓதும் வல்லவர்கள் வணங்கிப் போற்றும் எம் இறைவன் பெருகிக் குறையும் நிலவினை அணிந்தவன், பரமன், பகவன், படர்சடைத் தேவன் இரும்பை மாகாளத்துள் உள்ள அவன் பணிவார்களின் வினைகளை அழியச் செய்வான்.

தலம்: திருவான்மியூர் இறைவன்: பால்வண்ணநாதர்
பலன்: இறையன்பு பெறல் இறைவி: சுந்தரநாயகி

342. விரையார் கொன்றையினாய்! விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையோர் பங்குடையாய்
திரையார் தென்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா உன்னையல்லால் அடையாதென் தாதரவே!

தெள்ளிய அலைகள் மிகுந்த கடற்கரை யருகே உள்ள திருவான்மியூரில் உள்ள அரசே உன்திருவடிகளை அல்லாது வேறு எவரிடத்தும் நான் பற்று வைக்க மாட்டேன். நீ வேதங்களால் புகழப்படுபவன். விடமுண்ட கண்டன். நறுமணமிக்க கொன்றை மாலையணிந்தவன்.

தலம்: திருவலிதாயம் இறைவன்: வலிதாயநாதர்
பலன்: மனத்துயர் நீங்கப் பெறல் இறைவி: தாயம்மை

343. கடலில் நஞ்சம் அமுதுண்டு இமையோர் தொழுதேத்த நடமாடி
அடல்இலங்கை அரையன் வலிசெற்று அருள் அம்மான் அமரும் கோவில்
மடல்இலங்கு கமுகின் பலவின் மது விம்மும் வலிதாயம்
உடல்இலங்கும் உயிருள்ளவும் தொழ உள்ளத்துயர் போமே.

மடல்விரித்து பாக்கு மரங்களும் பலாமரங்களில் கனிவெடித்து தேன் பெருக இருக்கும் வலிதாயம் என்னும் தலத்தில் உள்ள கடல் நஞ்சு தனை அமுதாக உண்டவனும் வானவர்கள் இறைஞ்சி தொழுது வேண்ட திருநடனம் செய்தவனும் இலங்கைக்கு அரசனான இராவணனது வல்லமையை அழித்தவனும் ஆன பெருமானை நமது உடலில் உயிர் தங்கியிருக்கும் நாள் வரை

தொழுது வந்தால் நமது உள்ளத்தில் உள்ள துயர் அனைத்தும் நீங்கும்.

தலம்: திருவேற்காடு இறைவன்: வேற்காட்டு நாதர்
பலன்: தடைகள் நீங்கப் பெறல் இறைவி: வேற்கண்ணம்மை

344. பூதம் பாடப் புறங்காட்டிடை ஆடி
வேதவித்தகன் வேற்காடு
போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே.

திருவேற்காட்டில், பூதகணங்களின் இசைக்கு சுடுகாட்டில் நடனம் செய்தவனான வேதங்களின் தலைவனுக்கு மலர்களைச் சார்த்தி சந்தனம் பூசி வாசனைத் தூபங்கள் செய்து வழிபடுபவர்கட்கு இடையூறு ஏற்படாது.

தலம்: திருஇந்திர நீலப்பருப்பதம் இறைவன்: நீலாசலநாதர்
பலன்: நன்மைகள் கூடப் பெறல் இறைவி: நீலாம்பிகை

345. நாசமாம் வினை நன்மைதான் வரும்
தேசமார் புகழாய செம்மை எம்
ஈசன் இந்திர நீலப் பருப்பதம்
கூசி வாழ்த்துதும் குணமதாகவே.

எல்லா உலகமும் புகழும் சென்னிறத்தவனான எங்கள் இறைவனை இந்திர நிலைப் பருப்பதம் எனும் தலத்தவனை உள்ளத்தே கொண்டு நற்குணம் கொண்டு வாழ்த்தி வணங்குங்கள். உடனே உங்கள் வினைகள் அழியும். நன்மைகள் பெருகும்.

தலம்: திருஒற்றியூர் இறைவன்: படம்பக்கநாதர்
தியாகேசர்
பலன்: பாவம் நீங்கப் பெறல் இறைவி: வடிவுடையம்மை

346. அரவமே கச்சதாக இசைத்தான் அலர் கொன்றையந்தார்
விரவி வெண்ணூல் கிடந்த விரையார் வரை மார்பன் எந்தை
பரவுவார் பாவமெல்லாம் பறைத்து படர்புன் சடைமேல்
உரவுநீர் ஏற்ற பெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே.

தன்னை வணங்குபவர்களின் பாவங்களை அழிக்கும் எம் தந்தை போன்ற இறைவன் பாம்பை இடையில் கட்டிய கச்சாகக் கொண்டவன். அன்று மலர்ந்த அழகிய கொன்றை மாலை

யணிந்தவன். மலை போலும் திருமார்பினன். படர்ந்து சிவந்த தன் சடைமுடியில் அலைகொழிக்கும் கங்கையாற்றை ஏற்றவன். அவன் இருக்கும் இடம் திருவொற்றியூர்.

தலம்: திருமறைக்காடு — இறைவன்: மறைக்காட்டீசர்
பலன்: நல்வழிகாட்டப் பெறல் — இறைவி: யாழைப்பழித்த மொழியாள்

347. காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயே.

மனத்தே மிகுந்த அன்புடன் உருகி, கண்களில் நீர் மல்க பாடுபவர்களை நல்ல நெறியில் செலுத்துவது நான்கு வேதங்களுக்கு மேலான 'நமசிவாய' எனும் சிவன் திருநாமம் தான்.

திருநாவுக்கரசர்

தலம்: தில்லை — இறைவன்: சபாநாதர்
பலன்: வறுமை நீங்கப்பெறல் — இறைவி: சிவகாமியம்மை

348. கற்றானை கங்கைவார், சடையான் தன்னை
காவிரிசூழ் வலஞ்சுழியும் கருதினானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோம் அன்றே
மற்றாரும் தன்னொப்பார் இல்லான் தன்னை
வானவர்கள் எப்பொழுது வணங்கிஏத்தப்
பெற்றானை பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கற்றுணர்ந்த தேவனை கங்கையை சடைமுடியில் தரித்தவனை, காவிரி பாயும் திருவலஞ்சுழியில் தன்னுடைய இடமாகக் கொண்டவனை, வறியவர்களுக்கும், துன்பம் கொண்டவர்க்கும் அருள் செய்பவனை திருவாரூரில் அமர்ந்தவனை, தன்னொடு ஒப்பிட்டுச் சொல்ல யாரும் இல்லாதவனை இமையவர்களால் எப்போதும் வணங்கிப் போற்றப்படுபவனை பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லையில் உள்ள நடராஜப் பெருமானை புகழ்ந்து பேசாத நாட்கள் எல்லாம் வீணான நாட்களாம்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: அடைக்கலம் கொள்ளல் இறைவி: சிவகாமியம்மை

349. படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சும் என்நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லை சிற்றம்பலத்தரனே.

எனது நாவில் என்னைப் பாதுகாக்கும் உனது திருப்பெயருக்கான அஞ்செழுத்தைக் கொண்டுள்ளேன். நான் இடையில் வந்தவன் இல்லை. ஏழு பிறவிகளிலும் உனக்குத் தொண்டனாகவே இருந்து பணி செய்வேன். நீ என்னை ஒதுக்கி நீக்கினாலும் நான் போகமாட்டேன். உன்னையே வணங்கி உனது அருட்பிரசாதமாகிய தூய்மை மிக்க திருநீற்றை அணிந்து கொண்டேன். எனவே நான் உனது அடைக்கலப் பொருள் ஆவேன்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: உயர் பதவி பெறல் இறைவி: சிவகாமியம்மை

350. மாணி பால் கறந்து ஆட்டி
நீண் உலகெலாம் ஆளக் கொடுத்தவன்
அணியைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற
தாணுவைத் தமியேன் மறந்துய்வனோ.

பிரம்மச்சாரியான சண்டிகேஸ்வரர் பசுவின் பாலைக் கறந்து திருமஞ்சனம் செய்வித்ததால் உயர்பதவி தந்தவரான நம் வாழ்க்கைக்கு அச்சாணி போல் விளங்கும் பொன்னம்பலத்து சிவபெருமானை மறந்தால் நான் உயிர் வாழ மாட்டேன்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: மகிழ்வு பெருகுதல் இறைவி: சிவகாமியம்மை

351. தெரிந்த கணையால் திரிபுரம் மூன்றும் செந்தீயில் மூழ்க
எரித்த இறைவன் இமையவர் கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
சிரித்த முகம்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பது என்னே.

தேர்வு செய்த அம்பினால் முப்புரங்களும் தீயில் மூழ்குமாறு எரித்த தேவர்களின் தலைவனுடைய இரண்டு திருவடிகளை மனத்துக்குள் ஆழ்த்த வல்லவர்கள் வாழ்கின்ற தில்லை

சிற்றம்பலத்து ஆண்டவனின் சிரித்த முகத்தைப் பார்த்த கண்ணால் வேறு எதைப் பார்க்க இயலும்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: வான்பேறடையப் பெறல் இறைவி: சிவகாமியம்மை

352. ஊனில்ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனை
தேன் நிலாவிய சிற்றம்பல வனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே.

தேன் பெருகும் மலர் மாலைகளை தில்லைச் சிற்றம்பலவாண ரான சிவனை எனது உடலினின்று சுவாசக்காற்று வெளியாகும் பொழுதெல்லாம் எனது சிந்தையில் நிறுத்துவேன். அவர் என்னை சொர்க்கத்திலும் வைத்து மகிழ்வார்.

தலம்: தில்லை இறைவன்: சபாநாதர்
பலன்: இடையூறு நீங்கப்பெறல் இறைவி: சிவகாமியம்மை

353. பாதங்கள் நல்லார் பரவி ஏத்தப்
பத்திமையால் பணிசெய்யும் தொண்டர்தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழுபிறப்பும் ஆளுடைய ஈசனார்தாம்
வேதங்கள் ஓதி ஓர் வீணைஏந்தி
விடைஒன்று தாம்ஏறி வேதகீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர் சிற்றம்பலமே புக்கார்தாமே.

தமது நாவால் வேதங்கள் உரைத்து, ஒரு வீணையையும் ஏந்தி பூதகணங்கள் சூழ்ந்துவர புலித்தோலணிந்து ஒரு காளையின் மேலேறி புலியூர் என்னும் சிற்றம்பலத்தில் புகுந்து இருந்தவரான ஈசன் என்னை ஏழ்பிறப்பிலும் தொண்டனாக ஏற்று, தமது பாதங்களை வாழ்த்திப் பணியும் நல்லவர்களது இடையூறு அனைத்தும் நீக்குவார்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினீசுவரர்
பலன்: நரகம் இன்மை இறைவி: கருந்தார்க்குழலி

354. தன்னைச் சரண் என்று தாள் அடைந்தேன் தன்னடி அடைய
புன்னைப் பொழில்புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினை கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்க ஒட்டான் சிவலோகத்து இருத்திடுமே.

புன்னைகள் செழித்துள்ள புகலூர் அண்ணலைச் சரணம் என நினைந்து அவனது தாள்களை அடைந்தேன். அவர் செய்வதைக் கேளுங்கள். எனது பிறப்பு, முன்வினைகள் யாவையும் நீக்கி ஏழ் நரகத்திலும் நான் செல்ல விடாமல் தடுத்து என்னைச் சிவலோகத்தில் வைப்பார்.

தலம்: திருப்புகலூர் இறைவன்: அக்கினியீசுவரர்
பலன்: நோய்க்கு மருந்தாவான் இறைவி: கருந்தார்க்குழலி

355. தெருளாதார் மூவெயிலும் தீயில் வேவச்
சிலைவளைத்து செங்கணையால் செற்ற தேவே!
மருளாதார் தம்மனத்து வாட்டம் தீர்ப்பாய்
மருந்தாவாய், பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்
அருளாகி ஆகியாய் வேதமாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப்
பொருள்ஆவாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தெளிவில்லாத பகைவரது மூன்று மதில்களும் தீயினால் வெந்து அழியும்படி வில் வளைத்து சிவந்த அம்பை எய்த எம்தேவனே அச்சம் இன்றி உன்னை வணங்குபவர்க்கு அரிய மருந்தும் ஆவாய். வானவர்க்கு அருள் செய்து மூல முதல்வனாய் மாலும் அயனும் காண முடியாத புகலூர்ப் புண்ணியனே உன் திருவடிக்கே நான் வருகின்றேன்.

திருஞானசம்பந்தர்

பொது

பலன்: நவக்கிரங்களால் வரும் துன்பம் தீர்தல்

356. வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

மூங்கிலனைய தோள்களை உடைய உமாதேவியைப் பாகத்தில் வைத்தவனும், விஷத்தை உண்ட கழுத்து உடையவனும், வீணையில் நல்லிசை பாடுபவனும், நிலவும் கங்கையும் தன் சடைமேல் கொண்டு எனது மனத்திற்குள் புகுந்துவிட்டான். எனவே ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது ஆகிய ஒன்பது கோள்களும் சிவனடியார்களாக்கு மறுவற்ற நன்மைகளையே செய்யும்.

பொது:

பலன்: எமபயம் நீக்கல்

357. துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்திலும்
நெஞ்சகம் நைந்து நினைமின்கள் நாள்தோறும்
வஞ்சம் அற்று அடிவாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

நீங்கள் பகுத்து உறங்கும் போதும் விழித்திருக்கும் போதும் உள்ளம் உருகி இறைவனின் நமசிவாய மந்திரத்தை நினையுங்கள். அப்படிச் செய்தால் உங்களுக்கு எமபயம் நீங்கும்.

பொது

பலன்: வினை நீக்கப் பெறல்

358. அவ்வினைக்கு இவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்தெம்மை தீண்டப் பெறாதிருநீலகண்டம்.

நமது முன் சென்ம வினைக்கான பயனைத் தான் நாம் இப்போது அனுபவிக்கிறோம் என்பதை அறிந்த நீங்கள் உங்களது நிலைத்த வாழ்வுக்கு முயற்சி செய்யாதிருப்பது தவறன்றோ? அதனால் சிவபிரானின் திருவடிகளை வணங்கி உங்களால் இயன்ற தொண்டுகளை சிவப்பணியாகச் செய்யுங்கள். அப்போது முன் வினைகள் உங்களைத் தொடராது.

தலம்: திருக்கேதாரம் இறைவன்: கேதாரநாதர்
பலன்: புலனடக்கம் பெறல் இறைவி: கேதார கௌரியம்மை

359. தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கி சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்
வண்டு பாட மயில்ஆட மான்கன்று துள்ள வரிக்
கெண்டை பாய சுனைநீல மொட்டலரும் கேதாரமே.

வண்டுகள் இசைகூட்ட, மயில்கள்ஆட மானினம் துள்ள, சுனையில் கெண்டை மீன்கள் துள்ள, நீலமலர்கள் மலர்ந்து உள்ள கேதாரம்தான் தமது ஐந்து புலன்களாகிய யானைகளை அடக்கவல்ல தொண்டர்கள் வழிபாடு செய்யும் திருக்கேதாரம் ஆகும்.

தலம்: திருக்கச்சியேகம்பம் இறைவன்: தழுவக்குழைந்தநாதர்
பலன்: துன்பம் நீங்கும் இறைவி: காமாட்சியம்மை

360. வெந்த வெண்பொடி பூசுமார்பின் விரிநூல் ஒருபால்பொருந்த
கந்தமல்கு குழலியொடும் கடிபொழில் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தர் அவர் போற்ற அணங்கினொடு ஆடல்புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுது ஏத்த இடர்கெடுமே.

நிறைந்த சோலைகள் சூழ்ந்த காஞ்சிபுரத்தில் திருநீறு பூசிய மார்புடன், பூணூல் அணிந்து நறுமணம் செறியும் கூந்தலாள் உமை யோடும் காளியுடன் திருநடம் செய்து அமர்ந்த ஏகம்பன் நற்குணம் மிக்க அடியார்கள் போற்றும் அவனைத் தொழுதால் துன்பங்கள் நீங்கும்.

தலம்: திருக்குரங்கணில்முட்டம் இறைவன்: வாலீச்சுரர்
பலன்: துன்பம் நீங்கும் இறைவி: இறையார் வளையம்மை

361. விழுநீர் மழுவாள்படை அண்ணல் விளங்கும்
கழுநீர் குவளை மலர்க் கயல் பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம்
தொழுநீர் மையர் தீதுறு துன்பமிலாரே.

முடியில் கங்கைநீர் வீழ, மழு, வாள் எனும் ஆயுதம் கொண்ட அண்ணல், செறிந்த நீர் பாயும் வயல்கள் சூழ்ந்த குரங்கணில் முட்டத்தில் உள்ள அவரைப் பணிந்து வணங்கும் தன்மையாளருக்கு தீமை விளைவிக்கும் துன்பங்கள் வாராது.

தலம்: திருக்கச்சி ஏகம்பம் இறைவன்: தழுவக்குழைந்தநாதர்
பலன்: நல்லெண்ணம் உண்டாகும் இறைவி: காமாட்சியம்மை

362. மறையானை மாசில்லாப் புன்சடை மல்கு வெண்
பிறையானைப் பெண்ணொடு ஆணாகிய பெம்மானை
இறையானை ஏர்கொள் கச்சித்திரு ஏகம்பத்துள்
உறைவானை அல்லது உள்காதென் உள்ளமே!

மறைப்பொருள் ஆனவனை சிவந்த சடையில் வெண்பிறை அணிந்தவனை பெண்ணும் ஆணும் சேர்ந்த வடிவு கொண்டவனை, பெருமானை, எழில் மிகுந்த கச்சி ஏகம்பத்துள் இருப்பவனை விட்டால் வேறு யாரையும் என் மனம் நினைந்து உருகாது.

தலம்: திருவண்ணாமலை இறைவன்: அருணாசலேஸ்வரர்
பலன்: வினை நீக்கல் இறைவி: உண்ணாமுலையம்மை

363. உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே.

மழைநீர் வாரிக் கொண்டுவரும் ஒளிமிக்க மணிகளுடன் வரும் அருவி இனிய மத்தள ஓசை போல் முழங்கும் திருவண்ணா மலையில் உண்ணாமுலை எனும்திருப்பெயரோடு விளங்கும் அம்பிகையை தன் பாகத்தில் ஏற்ற அண்ணாமலையாரின் அடிகளைத் தொழுபவர்க்கு வினைகள் நிச்சயமாய் நீங்கும்.

தலம்: திருவண்ணாமலை இறைவன்: அருணாசலேசுவரர்
பலன்: நோய்கள் நீங்கும் இறைவி: உண்ணாமுலையம்மை

364. பெருகும் புனல் அண்ணாமலை பிறைசேர் கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார் பொடிஅணிவார் அது பருகிக்
கருகும் மிடறுடையர் கமழ்சடையார் கழல் பரவி
உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே!

வெண்பிறை தோன்றும் கடலில் எழுந்த நஞ்சைப் பருகுவதற்கு துணிந்து அதைப் பருகியதால் கறுத்துப் போன கழுத்து உடையவரும் உடலில் திருநீறு பூசியவரும் நறுமணமுள்ள சடை உடையவரும் ஆன அண்ணாமலையார் பாதங்களை மனத்துள் கொண்டு உருகும் அடியவர்க்கு எந்த நோயும் வாராது.

பொது
பலன்: உலகம் நலம் பெறல்

365. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரண் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

அந்தணர், வானாடர், பசுக்கூட்டம் வாழ்க, மழை பொழிக, அரசு உயர்வு பெறுக. தீமைகள் அழிந்து போகட்டும். சிவனார் திருப்பெயர் உலகமெல்லாம் ஒலிக்கட்டும். துயரங்கள் நீங்கட்டும்.

❖ ❖ ❖